

செயலாற்றுத்திறன் அறிக்கை

2018

கமநல அபிவிருத்தித் திணைக்களம்

இலக்கம் 42,

சேர் மார்க்கஸ் பெர்ணாண்டோ மாவத்தை,

த.பெ.இல. 537,

கொழும்பு - 07.

கமநல அபிவிருத்தித் திணைக்களம்

எங்கள் நோக்கம்

“ இலங்கை வாழ் கமக்கார சமூகத்தினரதும்
மற்றும் சகல கமத்தொழில் காணிகளினதும்
நிலைபேறான அபிவிருத்தி”

பணிகள்

“ இலங்கை வாழ் கமக்கார சமூகங்களின்
நிலைபேறான அபிவிருத்தியிலும் மற்றும்
சகல கமத்தொழில் காணிகளினதும்
செழுமையான அணுகூலங்களைப் பெற்றுக்
கொள்வதற்கு ஏற்ற வகையில் நிறுவன,
உதவி, சட்ட மற்றும் முகாமைத்துவச்
சேவைகள் போன்றவற்றை வடிவமைத்தல்
மற்றும் சமயோசிதமான வகையில் பேணுதல்”

அறிமுகம்

கமநல அபிவிருத்தித் திணைக்களம்

இலங்கை வாழ் விவசாயிகளுக்குத் தேவையான வசதிகளை வழங்கும் நோக்கில், அதுவரையில் நடைமுறையிருந்த உணவுத் திணைக்களம் இல்லாதொழிக்கப்பட்டு, 1957 ஒக்டோபர் மாதம் 01 ஆந் திகதி கமநல சேவைகள் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. 1958 ஆண்டு 01 ஆம் இலக்கமுடைய வயற் காணிச்சட்டத்தினால் செயற்பட்ட இத்திணைக்களம், தற்போது 2000 ஆண்டு 46 ஆம் இலக்கமுடைய கமநல அபிவிருத்திச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய கமநல அபிவிருத்தித் திணைக்களம் என்னும் பெயரில் செயற்படுகின்றது.

நோக்கங்கள் மற்றும் பிரதான பணிகள்

01. அரசின் கமத்தொழில் கொள்கைகளுக்கு அணுகூலமாக கமத்தொழில் காணிகளை ஈடுபடுத்துவதற்கு உரிய ஏற்பாடுகளை திட்டமிடல்.

02. நிழக்கிழார்கள், சொந்தக்காணிப் பயிர்ச்செய்கையாளர்கள், இருப்பாட்சியாளர்கள்/வாரப்பயிர்ச்செய்கையாளர்களின் பயிர்ச்செய்கை உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டான ஏற்பாடுகளை செயற்படுத்தல்.

03. கமக்காரர்களின் ஒழுங்கமைப்புக்களை பதிவு செய்தல் மற்றும் நடாத்திச் செல்லுதல் தொடர்பான ஒழுங்குவிதிகளைத் தாயாரித்தல் மற்றும் அவ் ஏற்பாடுகள் செயற்பாடுகள் தொடர்பாக உறுதி செய்தல்.

04. கமநல அபிவிருத்திச் சபையைத் தாபித்தல் மற்றும் அவற்றின் அதிகாரங்களை செயற்படுத்தும் பொருட்டு வழிநடத்தல் மற்றும் மேற்பார்வை.

05. நாடு பூராகவும் உள்ள சகல கமநல அபிவிருத்திச் சபை அதிகாரப் பிரிவுகளுக்கும் உரிய கமத்தொழில் காணிகள் தொடர்பான தகவல்கள் அடங்கிய கமத்தொழில் காணி இடாப்புக்களைத் தயாரித்து, திருத்தம் மற்றும் மீள்திருத்தம் செய்து பேணுதல்.

06. கமத்தொழில் காணிகளுக்குரிய வாரப்பயிர்ச்செய்கையாளர்களின் பிணக்கு மற்றும் வேறு கமக்காரர்களின் பிணக்குகளைத் தீர்க்கும் பொருட்டு நடவடிக்கை எடுத்தல்.

07. சிறிய நீர்ப்பாசனம் மற்றும் நீர் மூலங்களின் பயன்பாடுகள், பாதுகாப்பு, மற்றும் முகாமைத்துவத்திற்குரிய ஏற்பாடுகளைச் செயற்படுத்தல்.

08. கமநல அபிவிருத்திச் சட்டம் மற்றும் அரசின் கமத்தொழில் கொள்கைகளை மீறி செயற்படுவர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

09. அரசின் கமத்தொழில் மற்றும் தற்கால அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது ஏனைய நிறுவனங்களுக்குத் தேவைப்படும் நிறுவன, சட்ட, உதவி மற்றும் முகாமைத்துவ சேவைகளை வழங்குதல்.

கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் அவர்களிடமிருந்து .....

1957 ஒக்டோபர் மாதம் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களம், அறுபத்தி இரண்டு வருட வரலாற்று பெருமைக்கு உரிமை கூறுகின்றது. ''இலங்கை வாழ் கமக்கார சமூகத்தினரதும் மற்றும் சகல கமத்தொழில் காணிகளினதும் நிலைபேறான அபிவிருத்தி" நோக்காகக் கொண்டு பல்வேறு பணிகள் மற்றும் சேவைகளை நிறைவேற்றி, தன்னிறைவான கமக்காரர்கள் ஊடாக பசுமையான நாடாக உருவாக்குவதற்கு பாரிய முயற்சிகளை மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

மனித சமூதாயத்தின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்ட கமத்தொழில், பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி, உள்ளூர் உணவுத் தேவையை நிறைவேற்றிக் கொள்ளுவதற்கான பின்ணணியுடன் ஊக்குவிக்கப்பட்டது. அதற்கமைய, தற்போதைய அரசின் புதிய கமத்தொழில் கொள்கைகளைச் சிறப்பான பெறுபேறுகளுடன் செயற்படுத்துவதை ஆரம்பமாகக் கொண்டு பல்வேறு எண்ணக்கருத்துக்கள் மற்றும் செயற்பாடுகள் பலவற்றை தற்போது செயற்படுத்தியுள்ளது.

இந்நோக்கங்களை அடைந்து கொள்ளுவதற்காக கமநல அபிவிருத்தித் திணைக்களம், இந்நாட்டின் கமத்தொழிலுக்கு ஏற்புடையதான அரசின் கொள்கைகள் மற்றும் கமநலச் சட்டத்தைச் செயற்படுத்தல், சகல கமத்தொழில் காணிகளின் முகாமைத்துவப்படுத்தல், கமக்காரர்களின் பொருட்டான நிறுவனக் கட்டமைப்புக்களைத் தயாரித்தல் மற்றும் பலப்படுத்தல் போன்று நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவம் ஆகிய நான்கு பிரதான அணுகும் வாயில்களான விடயங்களைக் கொண்டதாகச் செயற்படுகின்றது. அத்துடன் நோக்கங்களை யதார்த்தமாக்குவதற்கான மகத்தான சவாலுக்கு இன்று நாம் அணுகியுள்ளளோம்.

2018 ஆம் வருடத்தில் கமநல அபிவிருத்தித் திணைக்களம் தனது இலக்கினை நோக்கி அடியொடுத்து வைத்த நடவடிக்கைகளை விபரமாகச் சமர்ப்பித்து 2018 ஆம் வருடத்தின் செயலாற்றுகைத் திறன அறிக்கையை இவ்வாறு வெளியிடுகின்றது. இச்செயலாற்றுத்திறளை சிறப்புறச் செய்வதற்கு கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குத் தேவையான அறிவுரைகள் மற்றும் தலைமைத்துவத்தை தளராது வழங்கிய கௌரவ அமைச்சர், பிரதி அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளரை மிகவும் கௌவரவத்துடன் நினைவு கூருகின்றேன்.

அத்துடன், 2018ம் ஆண்டு நிர்வாக அறிக்கையை வெளியிடுவதற்கு சகல வழிகளிலும் அறிவுரைகள் மற்றும் ஒத்துழைப்பு வழங்கிய சகலருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

டபிளீயூ.எம்.எம்.பீ. வீரசேகர,
கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்.

உள்ளடக்கம்

- நிர்வாகம் மற்றும் மனித வள அபிவிருத்தி 01
- அபிவிருத்தி மற்றும் முன்னேற்றக் கட்டுப்பாட்டுப் பிரிவு 14
- பொறியியல் பிரிவு 21
- நிறுவன அபிவிருத்திப் பிரிவு 25
- போக்குவரத்துப் பிரிவு 40
- சட்டப் பிரிவு 43
- கணக்குப் பிரிவு 47
- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு 51
- விளைவுப்பெருக்கம் மற்றும் விற்பனை பிரிவு 53
- கமநல வங்கி (முன்னோடிக்) கருத்திட்டம்) 59
- நீர் முகாமைத்துவப் பிரிவு 69
- இயக்கம் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவு 78
- நிலைபேறான அபிவிருத்தியை ஈட்டிக் கொள்ளும் பொருட்டு முன்னேற்ற ஆய்வு வருடத்தினுள் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் நிறைவேற்றிய பணிகள் 81

இணைப்புக்கள்

- இணைப்பு 01 86
- இணைப்பு 02 88
- இணைப்பு 03 90
- இணைப்பு 04 92
- இணைப்பு 05 93
- இணைப்பு 06 94
- இணைப்பு 07 102
- இணைப்பு 08 104
- இணைப்பு 09 105
- இணைப்பு 10 107
- இணைப்பு 11 108
- இணைப்பு 12 109
- இணைப்பு 13 111
- இணைப்பு 14 119
- இணைப்பு 15 120
- இணைப்பு 16 121
- இணைப்பு 17 125
- இணைப்பு 18 126
- இணைப்பு 19 128
- இணைப்பு 20 129
- இணைப்பு 21 131
- இணைப்பு 22 132

01. நிர்வாகம் மற்றும் மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவு

இலங்கை வாழ் கமக்கார சமூகங்களின் மற்றும் சகல கமத்தொழில் காணிகளினதும் நிலைபேறான அபிவிருத்தி கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் நோக்கமாகும். இதனை நிறைவேற்றும் பொருட்டு இலங்கை வாழ் கமக்காரர்கள் சமூகத்தின் நிலைபேறான அபிவிருத்தி மற்றும் கமத்தொழில் காணிகளில் செழுமையான அணுகூலங்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற வகையில் நிறுவன, உதவி, சட்ட மற்றும் முகாமைத்துவச் சேவைகள் போன்றவற்றை வடிவமைத்தல் மற்றும் சமயோசிதமான வகையில் பேணுவது அவசியமாகும்.

1.1 தாபனப் பிரிவு

1.1.1 தாபனப் பிரிவின் பணிகள்

திணைக்களத்திற்குரிய பதவிகளுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளல், உள்ளீர்ப்புச் செய்தல், இணைத்தல், வினைத்திறன் காண் தடைகள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள், முன்வேலைத்திட்டங்கள், மேலதிக நேரம் மற்றும் நாட் சம்பளம், நியாய சபைகளை நியமித்தல், தொழிற்சங்கங்கள், மொழித்தேர்ச்சிக் கொடுப்பனவு மற்றும் கடமைகளைக் கவனிக்கும் படிகள், அலுவலக ஆளணியினரின் தரவுத்தொகுதி, விடுமுறை, சுயவிபரக்கோவை மற்றும் திணைக்களத்தின் சகல சேவைகளுக்கும் உரிய பயிற்சி செயலமர்வுகளை ஒழுங்கு செய்தல்.

1.1.2 திணைக்களத்தின் ஊழியர் எண்ணிக்கை

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பொருட்டு அனுமதிக்கப்பட்ட நாடாளவிய, இணைந்த மற்றும் திணைக்களப் பதவிகள் உட்பட அனுமதிக்கப்பட்ட மொத்த ஊழியர் எண்ணிக்கை 18405 ஆகும். 2018 வருட இறுதியின் போது சேவையில் இருந்த எண்ணிக்கை 14616 ஆகும். வெற்றிடங்களின் எண்ணிக்கை 3933 ஆகும்.

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் முகாமைத்துவம் மற்றும் நிதிக் கொள்கைகளைச் செயற்படுத்தும் பொருட்டு கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம், மேலதிக கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் மற்றும் ஆணையாளர் பதவிகள் 03ம், மாவட்ட அலுவலகங்களுக்கு இணைக்கப்பட்டு பிரதி/உதவி ஆணையாளர்கள் 29 பதவிகள் உள்ளடங்கின்றது.

இலங்கை பொறியியல் சேவையின் 01வது வகுப்பின் 01 பதவியும் மற்றும் பொறியியல் சேவையில் 10 பதவிகளும், இலங்கை கணக்காளர் I ஆம் வகுப்பின் 01 பதவியும், கணக்காளர்கள் 11 பதவிகளும், பிரதான உள்ளகக் கணக்காய்வுப் 01 பதவியும், இலங்கைத் திட்டமிடல் சேவையில் 01 பதவியும், திணைக்கள உதவி ஆணையாளர் 10 பதவிகளும் உதவி ஆணையாளர் (இயந்திரவியல்) 02 பதவிகளும் உள்ளடங்கியுள்ளது.

மூன்றாம் நிலை மட்டத்திலான 643 பதவிகள் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், ஆய்வு வருடத்தின் இறுதியில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 129 ஆக இருந்தது.

இரண்டாம் நிலை மட்டத்திலான 16065 பதவிகள் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், ஆய்வு வருடத்தின் இறுதியில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 3083 ஆக இருந்தது.

ஆரம்ப மட்டத்திலான 1572 பதவிகள் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், ஆய்வு வருடத்தின் இறுதியில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 697 ஆக இருந்தது.

1.1.3 அலுவலக ஆளணியினரின் அலுவலகக் கட்டமைப்பு

அனுமதிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையின் வெற்றிடத்தை பூரணப்படுத்தி, ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வதற்கும், இதன் ஊடாக திணைக்களத்தின் கடமைப் பொறுப்புக்கள், உற்பத்தி திறன் மற்றும் வினைத்திறனை மேம்படுத்தி வளப் பங்களிப்பினை அதிகரிப்பதற்கும், இவ்வருடத்தினுள் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் தலைவராக கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் அவர்கள் திணைக்களத்தின் கடமைப் பொறுப்புக்களை வெற்றியுரச் செய்யும் பொருட்டு தேவையான செயலாற்று மட்டத்தினை உயர்ந்த மட்டத்தில் பேணுவதற்கு பொறுப்பாகவிருப்பதுடன், பொறுப்பினை பலப்படுத்தும் பொருட்டு தன் கீழ் சேவையாற்றும் பல்வேறு மட்டத்திலான உத்தியோகத்தர்களுக்கு பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டுள்ளது.

திணைக்களத்தின் நோக்கம் மற்றும் பணிகளை அதிகரிக்கும் பொருட்டு அர்ப்பணிக்கப்பட்ட ஆய்வு ஆண்டின் இறுதியில் சேவையிலிருந்த திணைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட பல்வேறு பதவிகளின் ஊழியர் எண்ணிக்கைகள் ஒவ்வொரு பதவிகளுக்கமைய கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தலாம்

கமநல அபிவிருத்தித் திணைக்களம்

ஊழியர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் 31.12.2018

தொ. இ.	பதவி	சேவை/ வகுப்பு	அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை	உள்ள எண்ணி.	வெற்றிட எண்ணி.
சிரேஷ்ட மட்டம்					
1	கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்	இ.நி.சே. (விசேட)	1	1	0
2	கமநல அபிவிருத்தி மேலதிக ஆணையாளர் நாயகம்	இ.நி.சே. (விசேட)	1	1	0
3	கமநல அபிவிருத்தி ஆணையாளர்	இ.நி.சே. - I	3	3	0
4	கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளர்	இ.நி.சே. - II	43	2	14
5	கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர்	இ.நி.சே. - III		27	
6	பணிப்பாளர் (பொறியியல்)	இ.பொ.சே. I	1	1	0
7	பொறியியலாளர்	இ.பொ.சே. - III,II	12	10	2
8	பொறியியலாளர் (இயந்திரவியல்)	இ.பொ.சே. - III,II	1	0	1
9	பிரதான கணக்காளர்	இ.க.சே. - I	1	1	0
10	கணக்காளர்	இ.க.சே. - III,II	29	12	17
11	உள்ளகக் கணக்காய்வாளர்	இ.க.சே. - I	1	1	0
12	உதவி பணிப்பாளர் (திட்டமிடல்)	இ.தி.சே. III,II	1	1	0
13	பிரதி /உதவி ஆணையாளர் (திணைக்களம்)	திணைக்கள சேவை - III,II	28	10	18
14	சட்ட உத்தியோகத்தர்	திணைக்கள சேவை - III,II	1	0	1
15	உதவி ஆணையாளர் (இயந்திரவியல்)	திணைக்கள - விசேட	2	2	0
மொத்தம்			**125**	**72**	**53**

தொ. இ.	பதவி	சேவை/வகுப்பு	அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை	உள்ள எண்ணி.	வெற்றிட எண்ணி.
மூன்றாம் நிலை மட்டம்					
16	கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் (விசேட)	திணைக்கள - சிறப்பு	30	0	30
17	நிர்வாக உத்தியோகத்தர்	பொ.மு.உ.சே. – சிறப்பு	31	9	22
18	தொழில்நுட்ப உத்தியோகத்தர்(விசேட)	இ.தொ.சே. - விசேட	22	4	18
19	கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் - I/II	திணைக்கள - III,II,I	557	500	57
20	தகவல் மற்றும் தொடர்பாடல் தொ.நுட்ப உத்தியோகத்தர்	தகவல் தொ.தொ.நுட்ப சேவை	1	0	1
21	மொழிபெயர்ப்பாளர்	மொழிபெயர்ப்பாளர் சேவை - II,I	2	1	1
மொத்தம்			643	514	129
இரண்டாம் நிலை மட்டம்					
22	சட்ட உதவியாளர்	அ.உ.சே.(திணை)- III,II,I	247	13	53
23	கமநல வங்கி க.உதவியாளர்	அ.உ.சே.(திணை)- III,II,I		31	
24	அபிவிருத்தி உதவியாளர்	அ.உ.சே.(திணை)- III,II,I		110	
25	விவசாய உ.க.உதவியாளர்	அ.உ.சே.(திணை)- III,II,I		40	
26	அபிவிருத்தி உத்தியோகத்தர்	அ.உ.சேவை -III,II,I	2500	2022	478
27	பட்டதாரி பயிலுனர் அபிருத்தி உத்தியோகத்தர்			144	
28	கமநல வங்கி உத்தியோகத்தர்	திணைக்கள சேவை	559	0	559
29	உதவி க.வ.உத்தியோகத்தர்	திணைக்கள சேவை	559	0	559
30	தொழில்நுட்ப உதவியாளர்	இ.தொ.சே.	17	0	17
31	தொழில்நுட்ப உத்தியோகத்தர் - I/II/III	இ.தொ.சே. - III,II,I	105	85	20
32	படவரைஞர்	இ.தொ.சே. - III,II,I	1	1	0
33	நூலகர்	நூலகர் சேவை - III,II,I	1	0	1
34	பொது முகாமைத்துவ உதவியாளர் - I/II/III	பொ.மு.உ.சே - III,II,I	538	471	67
35	கமநல சேவைகள் நிலைய எழுதுனர் - I/II/III	திணைக்கள சேவை - III,II,I	1118	867	251
36	விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் - I/II	திணைக்கள சேவை - III,II,I	10400	9367	1033
37	வெளிக்கள உதவியாளர்	திணைக்கள சேவை - III,II,I	2	0	2
38	சுரு/தட்டெழுத்தாளர்	திணைக்கள சேவை - III,II,I	15	4	11

தொ. இ.	பதவி	சேவை/வகுப்பு	அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை	உள்ள எண்ணி.	வெற்றிட எண்ணி.
39	தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர்	இ.த.தொ.சே. - 3 ஆம் வகுப்பின் - III,II,I	3	0	3
மொத்தம்			**16065**	**13155**	**3054**
கனிஷ்ட மட்டம்					
40	சாரதி - I/II/III	சாரதி சேவை - III,II,I	111	90	21
41	இயந்திர தொழில்நுட்பம்	திணைக்கள சேவை - III,II,I	8	0	8
42	இயந்திர இயக்குனர்	திணைக்கள சேவை விசேட - III,II,I	36	34	2
43	சாரதி உதவியாளர்	திணைக்கள சேவை - III,II,I	21	5	16
44	அலுவலக உதவியாளர் - I/II/III	அ.உ.சே. - III,II,I	110	86	24
45	சுற்றுலா விடுதிக் காப்பாளர்	திணைக்கள சேவை - III,II,I	7	3	4
46	தொழிலாளி	திணைக்கள சேவை	559	349	210
47	காவலாளி	திணைக்கள சேவை	671	291	380
48	இயந்திர உதவியாளர்	திணைக்கள சேவை -III,II,I விசேட	32	14	18
49	பயிற்றப்படாத தொழிலாளி	திணைக்கள சேவை	17	3	14
மொத்தம்			**1572**	**875**	**697**

1.1.4 தாபன நடவடிக்கைகள்

(I) **2018** வருடத்தினுள் நாடாளவிய சேவைகளின் உத்தியோகத்தர்களின் அசைவுகள் கீழ் உள்ளவாறாகும்.

தொ.இ.	சேவை	இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை	இடமாற்றம் பெற்றுச் வந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை
01	இலங்கை நிர்வாக சேவை III	01	02
02	இலங்கை கணக்காளர் சேவை I/ III	02	01
03	இலங்கை பொறியியலாளர் சேவை III	01	01
மொத்தம்		**04**	**04**

(II) புதிய ஆட்சேர்ப்பு

ஆய்வு வருடத்தினுள் இத்திணைக்களத்திற்குப் புதிதாக நியமனம் கிடைக்கப் பெற்று வந்த இலங்கை நிர்வாக சேவை, பொறியியல் சேவை மற்றும் கணக்காளர் சேவையின் உத்தியோகத்தர்கள் தொடர்பான தகவல்கள் கீழ் உள்ளவாறாகும்.

தொ.இல	உத்தியோகத்தரின் பெயர்	சேவை	இணைக்கப்பட்ட திகதி
1	திருமதி ஏ.சீ. கருணாதிலக்க	இ.நி.சே. III	2018.02.23
2	திரு ஜே.கே. ஜயநந்த	இ.நி.சே. III	2018.02.23
3	திருமதி எஸ். வருணி	இ.நி.சே. III	2018.03.28
4	திருமதி பீ.ஜீ.சீ.எஸ். ஆரியரத்ன	இ.பொ.சே. III	2018.08.01
5	திரு எம். திவாஸ்கர்	இ.பொ.சே. III	2018.08.20
6	திரு ஏ.பீ.டீ.ரீ. நந்தரத்ன	இ.பொ.சே. III	2018.08.20

(III) புதிய நியமனம் மற்றும் நிரந்தரமாக்கல்

கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்துக் கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய 63 உத்தியோகத்தர்களும், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய் 30 உத்தியோகத்தர்களும், தொழிலாளர் ஆட்சேர்த்துக் கொள்ளல் திறந்த நேர்முகப்பரீட்சையில் 128 தொழிலாளர் பதவிகளும், காவலாளி ஆட்சேர்த்துக் கொள்ளல் திறந்த நேர்முகப்பரீட்சையில் 277 காவலாளி பதவிகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் பட்டதாரி பயிலுனர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களில் 140 பேர் கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டதுடன், பொது முகாமைத்துவ உதவியாளர் சேவையில் 77 பேர் திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டனர்.

(IV) பதவியை விட்டுச் செல்லல், விட்டு விலகல், மரணம், வேலை நீக்கம்

ஆய்வு வருடத்தினுள் ஏற்பட்ட மாற்றங்கள் கீழ் உள்ளவாறாகும்.

தொ. இல.	பதவி	வேலை விட்டுச் செல்லல்	விட்டு விலகல்	மரணம்	விடுவிப்பு	வேலை நீக்கம்
01	பிரதி / உதவி ஆணையாளர்	-	-	-	02	-
02	பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	-	02	-	01	-
03	விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் உத்தியோகத்தர்	14	09	15	24	17
04	கமநல சேவைகள் நிலைய எழுதுனர்	-	02	-	06	-
05	கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்	-	-	-	-	-
06	அபிவிருத்தி உத்தியோகத்தர் (திணைக்களம்)	-	01	-	01	-
07	அபிவிருத்தி உத்தியோகத்தர்	-	02	-	13	-
08	சாரதி			01		
09	அலுவலக உதவியாளர்	-	01	-	03	-
மொத்தம்		**14**	**17**	**16**	**50**	**17**

(V) இடமாற்றங்கள்

நாடாளாவீய சேவைகள் தவிர்ந்த இணைந்த சேவைகள் உத்தியோகத்தர்களது இடமாற்றம் தொடர்பான தகவல்கள் கீழ் உள்ளவாறாகும்.

தொ.இல.	பதவி	இடமாற்றம் பெற்றுச் சென்ற எண்ணிக்கை	இடமாற்றம் பெற்று வந்த எண்ணிக்கை
1	பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	16	15
2	சாரதி சேவை	8	7
3	அபிவிருத்தி உத்தியோகத்தர்	34	34
4	அலுவலக உதவியாளர் சேவை	08	06
மொத்தம்		**66**	**62**

(V1) இளைப்பாறல்

ஆய்வு வருடத்தினுள் ஓய்வு பெறல் தொடர்பான தகவல்கள் கீழ் உள்ளவாறாகும்.

தொ. இல.	பதவி	ஓய்வு பெற்ற எண்ணிக்கை	
		ஓ.ஊ. 2.17 பிரிவில்	ஓ.ஊ. 2.12 பிரிவில்
1	உதவி ஆணையாளர் (திணைக்கள சேவை)	04	-
2	கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்	03	-
3	பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	08	-
4	சாரதி சேவை	03	-
5	அலுவலக உதவியாளர் சேவை	04	-
6	கமநல சேவைகள் நிலைய எழுதுனர்	20	-
7	அபிவிருத்தி உத்தியோகத்தர் (திணைக்களம்)	01	-
8	விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் உத்தியோகத்தர்	09	03
9	தொழில்நுட்ப உத்தியோகத்தர்	07	-
10	மாவட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்	01	-
11	சாரதி உதவியாளர்	01	-
மொத்தம்		**61**	**03**

1.1.5. வெளிநாட்டுப் பயணம் மற்றும் பயிற்சி

ஆய்வு வருடத்தினுள் வெளிநாட்டு புலமைப்பரிசில், கருத்தரங்கு மற்றும் செயலமர்வுகளுக்கு கலந்து கொள்ளல் தொடர்பான தகவல்கள் கீழ் உள்ளவாறாகும்.

1. 2018.04.22 ஆந் திகதி தொடக்கம் 2018.04.29 ஆந் திகதி வரையில் மலோசியாவில் நடைபெற்ற ("அரச பிரிவின் உள்ளகக் கணக்காள்வாளர்களின் பொருட்டு முகாமைத்துவக் கணக்காய்வு தொடர்பான சர்வதேச வேலைத்திட்டம்") பயிற்சி செயலமர்வின் பொருட்டு பிரதான காரியாலயத்திற்கு இணைக்கப்பட்டுள்ள பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், திருமதி ரேணுக்கா கொழம்பகே கலந்து கொள்ளல்.
2. 2018.05.15 ஆந் திகதி தொடக்கம் 2018.06.04 ஆந் திகதி வரையில் சீனாவில் நடைபெற்ற " (நீர் வளங்கள் முகாமைத்துவம் மற்றும் சிறியளவிலான நீர் மின்வலு அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கு - 2018) பயிற்சி செயலமர்விற்கு புத்தளம், ராஜகதலுவ கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு ஆர்.எம்.டீ.எஸ். ராஜபக்ஷ கலந்து கொள்ளல்.
3. 2018.06.04 ஆந் திகதி தொடக்கம் 2018.06.08 ஆந் திகதி வரையில் தாய்லாந்தில் நடைபெற்ற (கமத்தொழிலின் பொருட்டு செய்மதிப் புகைப்படங்கள் மற்றும் பூகோலத் தரவுத் தொகுதிப் (GIS)

பாவனை தொடர்பான பயிற்சி) செயலமர்வின் பொருட்டு பிரதான காரியாலயத்தின் பொறியியலாளர், திரு டீ.டீ. பிரபாத் விதாரண அவர்கள் கலந்து கொள்ளல்.

4. 2018.06.08 ஆந் திகதி தொடக்கம் 2018.06.21 ஆந் திகதி வரையில் சீனாவில் நடைபெற்ற ASEAN உத்தியோகத்தர்களின் பொருட்டு சுற்றாடலுக்கு அமைவான கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் மேம்படுத்தல் தொடர்பான கருத்தரங்கு - 2018) செயலமர்வின் பொருட்டு திரு எஸ்.வை.டீ.ஏ. சோமவங்ச கலந்து கொள்ளல்.

5. 2018.08.02 ஆந் திகதி தொடக்கம் 2018.08.22 ஆந் திகதி வரையில் சீனாவில் நடைபெற்ற (அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொருட்டு கமத்தொழில் உற்பத்திகளைத் தயாரித்தல் மற்றும் விற்பனை தொடர்பான கருத்தரங்கு 2018") செயலமர்வின் பொருட்டு பொத்துவில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், திரு எம்.எல்.ஏ. ரஹீம் கலந்து கொள்ளல்.

6. 2018.08.08 ஆந் திகதி தொடக்கம் 2018.08.28 ஆந் திகதி வரையில் சீனாவில் நடைபெற்ற ("அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி, கால்நடை மற்றும் நாற்றுப்பொருட்களின் நோய் நிவாரணம் தொடர்பான கருத்தரங்கு 2018") வேலைத்திட்டத்தின் பொருட்டு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ளல்.

    a. கண்டி பொறியில் உதவியாளர் - திரு எம்.ஜீ.என். திலகசிறி
    b. சிலாபம் பிரதி ஆணையாளர் - திருமதி டபிளீயூ.எம்.என்.பீ. புத்தாச
    c. முன்னேஸ்வரம் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் - திரு ஜீ.பீ.கே. குணரத்ன
    d. பிரதான காரியாலயத்தின் கணக்காளர் - செல்வி கே.ஜீ.எஸ். மதுவந்தி
    e. பிரதான காரியாலயத்தின் உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) - திருமதி எல்.பீ. புத்திக்கா

7. 2018.08.14 ஆந் திகதி தொடக்கம் 2018.08.22 ஆந் திகதி வரையில் இஸ்ராயேலில் நடைபெற்ற ("கமத்தொழில் பிரிவுகளை நவீனமாயக்கல் கருத்திட்டம் ASMP") பொருட்டு மேலதிக ஆணையாளர் நாயகம் திரு எஸ்.டீ.கே. பிரணாந்து அவர்கள் கலந்து கொள்ளல்.

8. 2018.08.21 ஆந் திகதி தொடக்கம் 2018.09.10 ஆந் திகதி வரையில் சீனாவில் நடைபெற்ற ("கால்நடை உற்பத்தி விற்பனை மற்றும் தொற்று நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்படுத்தலின் பொருட்டான ஒத்துழைப்புத் தொடர்பான கருத்தரங்கு 2018") வேலைத்திட்டத்தின் பொருட்டு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ளல்.

    a. புத்தளம் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் - திரு டீ.எம்.ஆர்.பீ. திசாநாயக்க
    b. கம்பஹா கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் - திரு ஜே.எச். கஸ்தூரிஆராச்சி

9. 2018.08.23 ஆந் திகதி தொடக்கம் 2018.09.12 ஆந் திகதி வரையில் சீனாவில் நடைபெற்ற (" அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொருட்டு உயிரியல் ஆற்றல் பலத்தை மேம்படுத்தல் மற்றம் உபயோகித்தல் தொடர்பான கருத்தரங்கு") பயிற்சி வேலைத்திட்டத்தின் பொருட்டு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ளல்.

    a. அனுராதபுரம் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் - திரு எச்.கே.ஜே. பண்டார
    b. உடுபெத்தாவ கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் - திரு டபிளீயூ.ஆர்.ஏ. கருணாசிறி

10. 2018.08.30 ஆந் திகதி தொடக்கம் 2018.09.12 ஆந் திகதி வரையில் கொரியாவில் நடைபெற்ற (" நிலைபேறான கிராமிய அபிவிருத்தி SRD") பயிற்சி செயலமர்வின் பொருட்டு பிரதான காரியாலயத்திற்கு இணைக்கப்பட்டுள்ள உதவி ஆணையாளர் (கமநல வங்கி) திருமதி எஸ்.எம்.பீ.கே. வீரசேகர மெனிக்கே கலந்து கொள்ளல்.

11. 2018.09.07 ஆந் திகதி தொடக்கம் 2018.09.27 ஆந் திகதி வரையில் சீனாவில் நடைபெற்ற (" அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொருட்டு உயிரியில் - இயற்கை வாயு தொடர்பான மகாநாடு 2018") வேலைத்திட்டத்தின் பொருட்டு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ளல்.

    a. குருநாகலை கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் - திரு ஈ.எம்.எல்.கே. ஏக்கநாயக்க
    b. பிரதான காரியாலயத்தின் உதவி ஆணையாளர் (சட்டம்) - திரு எச்.எம். எரங்க அதபத்து

12. 2018.09.11 ஆந் திகதி தொடக்கம் 2018.09.23 ஆந் திகதி வரையில் சீனாவில் நடைபெற்ற (உலக உணவு அமைப்பு (FAO) தென் சீனா ஒத்துழைப்பு (SSC) வேலைத்திட்டத்தின் கீழ் பூலோக ரீதியாக முக்கியத்துவமான கமத்தொழில் உரிமை அமைப்பு (GIAHS) இரண்டாம் கட்ட அபிவிருத்தி செயலமர்வு பயிற்சி செயலமர்வின் பொருட்டு பிரதான காரியாலயத்தின் பொறியியலாளர் திரு டீ.டீ. பிரபாத் விதாரண அவர்கள் கலந்து கொள்ளல்

13. 2018.09.12 ஆந் திகதி தொடக்கம் 2018.09.18 ஆந் திகதி வரையில் சீனாவில் நடைபெற்ற (அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொருட்டு உணவுப் பாதுகாப்புத் தொடர்பான அமைச்சுக்களின் மகாநாடு 2018") பயிற்சி வேலைத்திட்டத்தின் பொருட்டு கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் திரு டபிளீயூ.எம்.எம்.பீ. வீரசேகர அவர்கள் கலந்து கொள்ளல்.

14. 2018.09.23 ஆந் திகதி தொடக்கம் 2018.09.30 ஆந் திகதி வரையில் அமொரிக்கா ஐக்கிய இராஜத்தில் நடைபெற்ற (சிறிய மற்றும் மத்தியவிலான குளங்களின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் நீரியல் தாவரங்களின் அறுவடை உற்பத்தி பரிசீலனையின் பொருட்டு அமொரிக்கா ஐக்கிய குடியரசின் உத்தியோகபூர்வ விஜயம்") வேலைத்திட்டத்தில் பொருட்டு பிரதான காரியாலயத்தின் உதவி ஆணையாளர் (இயந்திரவியல்) திரு பீ.ஏ. ஆனந்த வீரவங்ச அவர்கள் கலந்து கொள்ளல்.

15. 2018.09.24 ஆந் திகதி தொடக்கம் 2018.09.29 ஆந் திகதி வரையில் இந்தியாவில் நடைபெற்ற (அலுவலக முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி") பொருட்டு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ளல்.
    a. இரத்தினபுரி நிர்வாக உத்தியோகத்தர் - திருமதி ஆர்.ஆர்.எஸ். கல்யாணி
    b. கேகாலை நிர்வாக உத்தியோகத்தர் - திருமதி பீ.ஏ.ஈ.ஐ. பண்டிதரத்ன

16. 2018.10.10 ஆந் திகதி தொடக்கம் 2018.10.17 ஆந் திகதி வரையில் பாகிஸ்தானில் நடைபெற்ற (" இடர் அவதானத்தைக் குறைத்தல் மற்றும் முகாமைத்துவம்") பயிற்சி வேலைத்திட்டத்தின் பொருட்டு கேகாலை உதவி ஆணையாளர், திரு கே.ஏ.எஸ். சுமித் சந்தன கலந்து கொள்ளல்..
17. 2018.10.21 ஆந் திகதி தொடக்கம் 2018.10.27 ஆந் திகதி வரையில் பீஜீ இல் நடைபெற்ற ("சுற்றாடல் சுற்றுலாத் திட்டம் மற்றும் கமத்தொழில் சுற்றுலாத் திட்டம் தொடர்பான பயிற்சியாளர் பயிற்றுவித்தல்") பயிற்சியின் பொருட்டு கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் திரு டபீளீயூ.எம்.எம்.பீ. வீரசேகர அவர்கள் கலந்து கொள்ளல்.

18. 2018.10.28 ஆந் திகதி தொடக்கம் 2018.11.03 ஆந் திகதி வரையில் தாய்வானில் நடைபெற்ற (" கமத்தொழில் திட்டம் மற்றும் அதன் பெறுமதி முகாமைத்துவம்) பயிற்சி வேலைத்திட்டத்தின் பொருட்டு ஆணையாளர் (அபிவிருத்தி) திரு ஏ.எச்.எம்.எல். அபேரத்ன அவரகள் கலந்து கொள்ளல்.

19. 2018.12.11 ஆந் திகதி தொடக்கம் 2018.12.20 ஆந் திகதி வரையில் பாகிஸ்தானில் நடைபெற்ற (" நீர்ப்பாசன அமைப்புக்கள் மற்றும் நீர் முகாமைத்துவம்") பயிற்சி செயலமர்வின் பொருட்டு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ளல்.

    a. பொத்துஹெர கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் - திரு ஈ. ஜயஸ்ரீ எதிரிசிங்ஹ
    b. பிரதான காரியாலயத்தின் சிரேஷ்ட பொறியியல் உதவியாளர் - திரு ஏ.இசட்.ஜே. சிங்கராயர்

1.1.6. ஒழுக்காற்று நடவடிக்கைகள்

ஆய்வு வருடத்தினுள் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள் ஆரம்ப விசாரணைகளின் எண்ணிக்கை 38 ஆகும். முறையான ஒழுக்காற்று விசாரணைகளின் எண்ணிக்கை 10 ஆகும். ஒழுக்காற்று கட்டளைகள் 12 ம், குற்றப்பத்திரிகைகள் 07ம் வழங்கப்பட்டுள்ளது.

1.1.7. பயிற்சி மற்றும் ஆற்றல் அபிவிருத்தி

ஆய்வு வருடத்தினுள பயிற்சி மற்றும் ஆற்றல் அபிவிருத்தி செலவுத் தலைப்பின் கீழ் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் திறமை, மனப்பாங்கு மற்றும் அறிவை விருத்தி செய்யும் பொருட்டு வருட இறுதியின் போது 4.03 மி.ரூபா செலவிடப்பட்டுள்ளது.

தொ. இ.	பயிற்சி பெற்ற உத்தியோகத்தரின் / உத்தியோகத்தர்களின் பெயர்	பதவி	பயிற்சிப் பாடநெறியின் பெயர்	பயிற்சி நிறுவனத்தின் பெயர்	நாட்களின் அளவு / காலப்பகுதி
1	பீ.கே. பத்பேரிய	உதவி ஆணையாளர்	பட்டபின் படிப்பு (Master of Financial Economic Degree Program 2018)	கொழும்பு பல்கலைகழகம்	1 வருடம்
2	வீ.பீ. பீற்றர்ஸ்	உதவி ஆணையாளர்	பட்டபின் படிப்பு (Master of Financial Economic Degree Program 2018)	கொழும்பு பல்கலைகழகம்	1 வருடம்
3	ஜீ.ஏ.டீ.பீ. விஜேரத்ன	கணக்காளர்	பட்டபின் படிப்பு (Master of Financial Economic Degree Program 2018)	கொழும்பு பல்கலைகழகம்	1 வருடம்
4	ஜீ.ரீ.ஈ. தில்ருக்ஷி	கணக்காளர் (களுத்துறை)	பட்டபின் படிப்பு (Master of Financial Economic Degree Program 2018)	கொழும்பு பல்கலைகழகம்	1 வருடம்
5	பீ.எல்.எஸ்.டீ. பெரேரா	தொழில்நுட்ப உத்தியோகத்தர்	Training Programme on Waste Water Collection, Treatment, Disposal, Reuse And Storm Water Drainage	வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு	04 நாட்கள்
6	எம்.எச்.வீ.எச்.எல். சமரஜீவ	தொழில்நுட்ப உத்தியோகத்தர்	Training Programme on Waste Water Collection, Treatment, Disposal, Reuse And Storm Water Drainage	வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு	04 நாட்கள்
7	வீ. தவிஷ்னி	தொழில்நுட்ப உத்தியோகத்தர்	Microsoft Project	வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு	56 மணித்தியாலயம்
8	கே.ஜீ.எஸ். மதுவந்தி	கணக்காளர்	MPM Degree	இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம்	
9	ஏ.எம்.ஜீ.கே. உபசிறி	சட்ட உதவியாளர்	Diploma in English	மிலோதா நிறுவனம்	
10	ஜே.எஸ். எதிரிசிங்ஹ	கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், பொத்துஹெர	பட்டபின் படிப்பு பாடநெறி	களணி பல்கலைகழகம்	1 வருடம்
11	எச்.எம்.டீ.டபீளீயூ.கே. ஹேரத்	கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் (கண்டி)	முதுகலைப் பட்டப் பாடநெறி	களணி பல்கலைகழகம்	
12	-	பிரதான காரியாலயத்தின் உத்தியோகத்தர்கள்	சாதகமான மனப்பாங்கினை விருத்தி செய்வதன் மூலம் மனித வள அபிவிருத்தித் தொடர்பான செயலமர்வு	பிரதான காரியாலயம்	2018.02.01
13	-	நியாய சபை செயலாளர்கள்	கமநல நியாய சபை சட்டப் பயிற்சிச் செயலமர்வு	பிரதான காரியாலயம்	2018.01.16
14	-	பிரதான காரியாலயத்தின் உத்தியோகத்தர்கள்	கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் உற்பத்தித் திறன் பயிற்சி செயலமர்வு	பிரதான காரியாலயம்	2018.03.29
15	-	கமநல நியாய சபை உத்தியோகத்தர்கள்	கமநல நியாய உத்தியோகத்தர்கள் மற்றும் க.அ.உத்தியோகத்தர்களின் பொருட்டான சட்டப் பயிற்சிச் செயலமர்வு	பொத்துஹெர கமநல அபிவிருத்தி தேசிய பயிற்சி நிறுவனம்	2018.05.17 மற்றும் 18
16	-		கமநல அபிவிருத்திச் சட்டத்தின் (2000 ஆண்டு 46 ஆம் இலக்கமுடைய) 35 (1) பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் நியாயத் தீர்ப்புக்கள் தொடர்பான செயலமர்வு	பிரதான காரியாலயம்	2018.05.10

17	-	திணைக்களத்தின் புதிய பொ.மு.உ. மற்றும் அபி.உத். (180)	தாபன நடவடிக்கைகள் மற்றும் அலுவலக முகாமைத்துவம் தொடர்பான ஒரு நாள் பயிற்சிச் செயலமர்வு	பிரதான காரியாலயம்	2018.06.21
18	-	புதிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் (28)	இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் III வகுப்பின் உத்தியோகத்தர்களின் சேவைக்கால ஆரம்பப் பயிற்சி செயலமர்வு (1வது குழு)	பொத்துஹெர கமநல அபிவிருத்தி தேசிய பயிற்சி நிறுவனம்	2018.07.10 ஆந் திகதி தொடக்கம் 20 ஆந் திகதி வரையில்
19	-	புதிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் (13)	இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் III வகுப்பின் உத்தியோகத்தர்களின் சேவைக்கால ஆரம்பப் பயிற்சி செயலமர்வு (2வது குழு)	பொத்துஹெர கமநல அபிவிருத்தி தேசிய பயிற்சி நிறுவனம்	2018.10.22 ஆந் திகதி தொடக்கம் 30 ஆந் திகதி வரையில்
20	-	புதிய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (45)	புதிய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வதிவிட சேவைக்கால ஆரம்பப் பயிற்சி செயலமர்வு (1வது குழு)	பொத்துஹெர கமநல அபிவிருத்தி தேசிய பயிற்சி நிறுவனம்	2018.11.26 ஆந் திகதி தொடக்கம் 12.01 ஆந் திகதி வரையில்
21	-	உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்கள் (35)	உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்களின் பொருட்டான வதிவிடப் பயிற்சிச் செயலமர்வு	பொத்துஹெர கமநல அபிவிருத்தி தேசிய பயிற்சி நிறுவனம்	2018.12.03 ஆந் திகதி தொடக்கம் 07 ஆந் திகதி வரையில்
22	-	புதிய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (17)	புதிய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வதிவிட சேவைக்கால ஆரம்பப் பயிற்சி செயலமர்வு (2வது குழு)	பொத்துஹெர கமநல அபிவிருத்தி தேசிய பயிற்சி நிறுவனம்	2018.12.17 ஆந் திகதி தொடக்கம் 21 ஆந் திகதி வரையில்

பயிற்சி வேலைத்திட்டத்தின் பொருட்டு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு மாவட்ட அலுவலகங்களுக்கும் பயிற்சி மற்றும் ஆற்றல் அபிவிருத்தி செலவுத் தலைப்பின் கீழ் 0.13 மி.ரூபா ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது.

தொ. இ.	உத்தியோகத்தரின் பெயர்	பதவி	ஒதுக்கீடு விடுவிக்கப்பட்ட மாவட்டம்	பயிற்சியின் பெயர்
1	எச்.எம்.டீ.டபிளீயூ.கே. ஹேரத்	அபிவிருத்தி உத்தியோகத்தர் (மா.அ.)	கண்டி	முதுகலைமானிப் பட்டப் பாடநெறி
2	எஸ்.பீ. சுனில் ஸ்ரீயானந்த	அபிவிருத்தி உத்தியோகத்தர் (மா.அ.)	மொனறாகலை	முதுகலைமானிப் பட்டப் பாடநெறி
3	எஸ்.டீ.என். சமரதுங்க	அபிவிருத்தி உத்தியோகத்தர் (மா.அ.)	கண்டி	முதுகலைமானிப் பட்டப் பாடநெறி

1.1.8. கலந்துரையாடல்

ஆய்வு வருடத்தினுள் திணைக்களத்தின் பிரதான காரியாலயத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்கள், மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதி / உதவி ஆணையாளர்களின் பங்குபற்றலுடன் நடைபெற்ற கலந்துரையாடல் தொடர்பான தகவல்கள் கீழ் உள்ளவாறாகும்.

தொ. இல.	கலந்துரையாடலின் வகை	கலந்து கொண்டோர்	நடைபெற்ற திகதி	நடைபெற்ற இடம்	கலந்து கொண்டோர் எண்ணிக்கை
1	பிரதி/உதவி ஆணையாளர்களின் கலந்துரையாடல்	மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதி/உதவி ஆணையாளர்கள், பிராந்திய பொறியியலாளர்கள், கணக்காளர்கள் மற்றும் பிரதான காரியாலயத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்கள்	2018.02.27	பிரதான காரியாலயத்தின் கேட்போர் கூடம்	120
2	பிரதி/உதவி ஆணையாளர்களின் கலந்துரையாடல்	மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதி/உதவி ஆணையாளர்கள், பிராந்திய பொறியியலாளர்கள், கணக்காளர்கள், மாவட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதான காரியாலயத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்கள்	2018.04.24	பிரதான காரியாலயத்தின் கேட்போர் கூடம்	120
3	பிரதி/உதவி ஆணையாளர்களின் கலந்துரையாடல்	மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதி/உதவி ஆணையாளர்கள், திணைக்கள உதவி ஆணையாளர்கள், பிராந்திய பொறியியலாளர்கள், கணக்காளர்கள் மற்றும் பிரதான காரியாலயத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்கள்	2018.06.22 மற்றும் 23	பொத்துஹெர கமநல அபிவிருத்தி தேசிய பயிற்சி நிறுவனம்	120
4	பிரதி/உதவி ஆணையாளர்களின் கலந்துரையாடல்	மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதி/உதவி ஆணையாளர்கள், திணைக்கள உதவி ஆணையாளர்கள், பிராந்திய பொறியியலாளர்கள், தலைமைக் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாவட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பொறியியல் உதவியாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதான காரியாலயத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்கள்	2018.07.24	பிரதான காரியாலயத்தின் கேட்போர் கூடம்	175
5	பிரதி/உதவி ஆணையாளர்களின் கலந்துரையாடல்	மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதி/உதவி ஆணையாளர்கள், பிராந்திய பொறியியலாளர்கள், மாவட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பிரதான காரியாலயத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்கள்	2018.08.16	பிரதான காரியாலயத்தின் கேட்போர் கூடம்	100
6	பிரதி/உதவி ஆணையாளர்களின் கலந்துரையாடல்	மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதி/உதவி ஆணையாளர்கள், திணைக்கள உதவி ஆணையாளர்கள், பிராந்திய பொறியியலாளர்கள், கணக்காளர்கள், மாவட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதான காரியாலயத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்கள்	2018.09.07 மற்றும் 08	பொத்துஹெர கமநல அபிவிருத்தி தேசிய பயிற்சி நிறுவனம	120
7	பிரதி/உதவி ஆணையாளர்களின் கலந்துரையாடல்	மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதி/உதவி ஆணையாளர்கள் மற்றும் பிரதான காரியாலயத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்கள்	2018.10.04	பிரதான காரியாலயத்தின் கேட்போர் கூடம்	90
8	பிரதி/உதவி ஆணையாளர்களின் கலந்துரையாடல்	மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதி/உதவி ஆணையாளர்கள், திணைக்கள உதவி ஆணையாளர்கள், பிராந்திய பொறியியலாளர்கள், கணக்காளர்கள், மற்றும் பிரதான காரியாலயத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்கள்	2018.11.16 மற்றும் 17	பொத்துஹெர கமநல அபிவிருத்தி தேசிய பயிற்சி நிறுவனம்	110
9	பிரதி/உதவி ஆணையாளர்களின் கலந்துரையாடல்	மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதி/உதவி ஆணையாளர்கள், கணக்காளர்கள், மாவட்ட பதவிநிலை உதவியாளர்கள் மற்றும் பிரதான காரியாலயத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்கள்	2018.12.06	பிரதான காரியாலயத்தின் கேட்போர் கூடம்	110

1.1.9. திணைக்கள உதவி ஆணையாளர்கள் தொடர்பான விபரங்கள்

தொ. இல	உத்தியோகத்தரின் பெயர்	மாவட்டம்
01.	எச்.எம். எரங்க அதபத்து	பிரதான காரியாலயம்
02.	திரு டீ.எம்.ரீ.பீ திசாநாயக்க	மாத்தளை
03.	செல்வி ஏ.ஆர்.ஆர். ராமநாயக்க	மொனறாகலை
04.	திருமதி அனுஷா தேவபிரிய	கேகாலை
05.	திரு டீ.எம்.எஸ்.பீ திசாநாயக்க	பதுளை
06.	திரு ஏ.எஸ்.டபீளீயூ. தஹநாயக்க	மாத்தறை, காலி
07.	திரு டபிளியூ. குணசேன	இரத்தினபுரி
08.	திரு எஸ்.பீ.பீ. சேனாதீர	புத்தளம்
09.	திருமதி எஸ்.எம்.பீ.கே. வீரசேகர மெணிக்கே	கண்டி
10.	திருமதி எச்.பீ.கே.ரஞ்ஜனி	களுத்துறை
11.	திரு எஸ்.வை.டீ.ஏ. சோமவங்ச	அனுராதபுரம்

1.2 நிருவாகப் பிரிவு

நிர்வாகப் பிரிவின் மூலம் நிறைவேற்றப்படும் பிரதான சேவைகளானவை, திணைக்களத்திற்குக் கிடைக்கப் பெறும் சகல சாதாரண கடிதங்கள், பதிவுத் தபால் கடிதங்கள் மற்றும் காசோலைகளை அவ்அவ் பிரிவுகளுக்கு முன்வைத்தல் மற்றும் அவ்அவ் பிரிவுகளிலிருந்து கிடைக்கப் பெறும் சகல கடிதங்களையும் உரிய நிறுவனங்களுக்கும் நபர்களுக்கும் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தலாகும்.

அதற்கு மேலதிகமாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளும் நிர்வாகப் பிரிவின் மூலம் நிறைவேற்றப்படுகின்றது.

- திணைக்களத்தின் பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்பு நடவடிக்கைகளைப் பேணுதல்.
- பாராளுமன்ற ஆலோசனைக் குழுவிற்குரிய நடவடிக்கைகளை தொடர்பான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்.
- பாராளுமன்ற வாய்மூலக் கேள்விகள் தொடர்பான நடவடிக்கைகளின் இணைப்பு நடவடிக்கைகள்.
- அதிமேதகு ஜனாதிபதியின் அறிவுரைகளின் பிரகாரம் செயற்படுத்தப்படும் "ஜனாதிபதிக்கு கூறுங்கள்" பொதுமக்கள் முறைப்பாட்டின் பொருட்டு நிவாரணம் வழங்கும் இணைப்பு நடவடிக்கைகள்.
- பொதுமக்கள் முறைப்பாட்டுச் சபையுடன் தொடர்புடைய நடவடிக்கைளின் இணைப்பு நடவடிக்கைகள்.
- நிர்வாகம் அலுவல்கள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்பூட்ஸ்மன்) அலுவலகம் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு ஏற்புடையதான நடவடிக்கைகள் தொடர்பான இணைப்பு நடவடிக்கைகள்.
- திணைக்களத்தின் சகல தொலைபேசி பற்றுச்சீட்டுக்கள், மின்சாரப் பட்டியல்கள், நீர்ப் பட்டியல்களைத் தீர்த்து வைத்தல் மற்றும் வரிபணக் கட்டணங்களைச் செலுத்துதல்.
- திணைக்களத்தின் பிரதான காரியாலயத்தின் சகல உத்தியோகத்தர்களினதும் விடுமுறை தொடர்பான கடமைகள்.
- திணைக்களத்தின் உள்ளகத் தொலைபேசி அமைப்பின் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.
- உத்தியோகபூர்வ இல்லங்களின் வாடகையை அறவிடல்.
- திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்படும் செய்திப்பத்திரிகைகள் தொடர்பான சகல கடமைகள்.
- திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களின் பொருட்டும் புகையிரத அணுசரனை மாதாந்த அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்.
- புகையிரத ஆணைச்சீட்டுக்கள் வழங்குதல்.
- பிரதான காரியாலயத்தின் நேரடித் தொலைபேசித் தொகுதியை பராமரித்தல்.
- தீயணைக்கும் உபகரணங்களைப் பராமரித்தல்.
- அரச தேர்தல்களுக்குரித்தான கடமைகளை மேற்கொள்ளல்.
- திணைக்களத்தின் வருடாந்தச் செயலாற்றுத் திறன் அறிக்கைகளைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளைத் தயார் செய்தல்.
- உத்தியோகத்தர்களின் பிணை வைப்புக்களை விடுவிப்பதற்குரிய கடமைகளை மேற்கொள்ளல்.

02. அபிவிருத்தி பிரிவு

- **பிரிவின் நோக்கம்**

01. கமத்தொழிலின் அபிவிருத்தியின் பொருட்டான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தலின் மூலம் தேசிய பொருளாதாரத்தை மேலோங்கச் செய்தல்.

02. மாவட்ட அலுவலகம், கமநல சேவைகள் நிலையங்களைத் திருத்தம் செய்தல் / நிர்மாணங்களின் மூலம் உத்தியோகத்தர்களின் பொருட்டு வசதிகளை அதிகரித்தல் மற்றும் அதன் மூலம் கமக்காரர்களுக்குச் சிறந்த பெறுபேறுகளையும் மற்றும் வினைத்திறனான சேவைகளையும் வழங்குதல்.

- **பொறுப்புக்கள்**

01. அபிவிருத்தி நடவடிக்கைகளின் பொருட்டு திணைக்களத்திற்கு ஒதுக்கப்படும் வருடாந்த ஒதுக்கீட்டை ஆக உச்ச நிலையில் பயன்படுத்தல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை முறையாக மேற்பார்வைக்கு உட்படுத்தல்.

- **பணிகள்**

01. சிறிய நீர்ப்பாசனங்களின் புனரமைப்புக் கருத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்குத் தேவையான இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

02. திணைக்களத்திற்குச் சொந்தமான கட்டடங்களைப் புனரமைப்புச் செய்யதல் / புதிய கட்டடங்களை நிர்மாணிப்பதற்குத் தேவையான இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

03. திணைக்களத்திற்குத் தேவையான காணிகளை கையகப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

04. கமநல அபிவிருத்தி நிதியம் மற்றும் கமக்காரர்களின் பொறுப்பு நிதியத்தின் கீழ் வருடாந்தம் அபிவிருத்தி வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்குத் தேவையான இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் வேறு நிறுவனங்களின் மூலம் திணைக்களதின் ஊடாகச் செயற்படுத்தும் அபிவிருத்திக் கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்குத் தேவையான இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

05. திணைக்களத்திற்குத் தேவையான இயந்திர உபகரணங்களைக் கையகப்படுத்திக் கொள்ளல் மற்றும் இயந்திர உபகரணங்களின் திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

06. கமத்தொழில் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்குரிய பல்வேறு நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து முன்வைக்கப்படும் வேண்டுகோள்களுக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

07. தேசிய புத்தரிசி விழாவிற்கான ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- **உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை**

01.	இலங்கை நிர்வாக சேவையின் உத்தியோகத்தர்கள்	- 02
02.	உதவி ஆணையாளர் (இயந்திரவியல்)	- 01
03.	அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்	- 06
04.	விவசாய அபிவிருத்தி உதவியாளர்	- 01
05.	பொது முகாமைத்துவ உதவியாளர்	- 07
06.	நிலைய எழுதுனர்	- 01
07.	பட்டதாரி பயிலுனர்	- 01
08.	அலுவலக உதவியாளர்	- 03
	மொத்தம்	**- 22**

2.1. சிறிய நீர்ப்பாசனங்களின் புனரமைப்பு -

- **செலவு விடயம் - 281-2-2-12-2506**

2018 வருடத்தின் பொருட்டு சிறிய நீர்ப்பாசனங்களின் புனரமைப்பு மற்றும் தரிசு வயற்காணிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் பொருட்டு இத்திணைக்களத்திற்கு 1500 மி.ரூபா ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டதுடன், இதன் கீழ் 25 மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் 863 வேலைகளின் பொருட்டு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு 1,160.84 மி.ரூபாயாகும். இவ்வேலைகளில் 776 வேலைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன், 2019 வருடத்திற்கான தொடர் வேலைகளின் எண்ணிக்கை 71 ஆகும். இதற்கு மேலதிகமாக வருடத்தினுள் வெள்ள அழிவின் பொருட்டு 6.00 மி.ரூபாவும், நீர் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் பொருட்டு 200.76 மி.ரூபாவும், வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளின் பொருட்டு 36.40 மி.ரூபாவும், 2017 ஆம் வருடத்தின் தொடர் வேலைகளின் பொருட்டு 95.91 மி.ரூபாவும் ஒதுக்கப்பட்டது. அதற்கமைய இச்செலவுத் தலைப்பின் கீழ் 2018.12.31 ஆந் திகதிக்கு 563.57 மி.ரூபா செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், கையிருப்புப் பற்றுச்சீட்டுக்களின் பெறுமதி 670.34 மி.ரூபாயாகும். அதற்கமைய, செலவுத் தலைப்பின் 2018.12.31 ஆந் திகதிக்கு நிதி முன்னேற்றம் (மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைகளின் பெறுமதி) 82.26% என்பதுடன், பௌதீக முன்னேற்றம் 89.9**%** ஆகும். (இணைப்பு **01**).

- **செலவு விடயம் - 118 -2-3-40-2506**

விவசாய அமைச்சின் செலவு விடயம் 118-2-3-40-2506 இன் கீழ் விசேட கருத்திட்டத்தின் (சிறிய குளங்கள் மற்றும் கால்வாய் புனரமைப்பு) பொருட்டு 1000 மில்லியன் ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டதுடன், இதன் கீழ் 25 மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் 440 வேலைகளின் பொருட்டு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு 954.92 மி.ரூபாயாகும். இவ்வேலைகளில் முடிவுறுத்தப்பட்ட வேலைகளின் எண்ணிக்கை 347 என்பதுடன், 2019 வருடத்திற்கான தொடர் வேலைகளின் எண்ணிக்கை 89 ஆகும். அத்துடன் ஆரம்பிக்கப்படாத வேலைகளின் எண்ணிக்கை 04 ஆகும். இதற்கு மேலதிகமாக வேறு வேலைகளின் பொருட்டு 4.00 மி.ரூபாவும், 2017 ஆம் வருடத்தின் தொடர் வேலைகளின் பொருட்டு 46.06 மி.ரூபாவும் ஒதுக்கப்பட்டது. அதற்கமைய இச்செலவுத் தலைப்பின் கீழ் 2018.12.31 ஆந் திகதிக்கு 248.49 மி.ரூபா செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், கையிருப்புப் பற்றுச்சீட்டுக்களின் பெறுமதி 577.73 மி.ரூபாயாகும். அதற்கமைய, செலவுத் தலைப்பின் நிதி முன்னேற்றம் (மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைகளின் பெறுமதிக்கமைய) 84.58% ம் மற்றும் பௌதீக முன்னேற்றம் 78.9**%** ஆகும். (பௌதீக முன்னேற்றம் காட்டப்பட்டிருப்பது முழுமையாக வேலைகள் முடிவுற்றக் கருத்திட்டங்களைக் கருத்திற் கொண்டு என்பதுடன், முழுமையாக முடிவுறுத்தப்படாதுள்ள கருத்திட்டங்களும் உள்ளடக்கப்பட்டு பௌதீக முன்னேற்றம் 88% ஆகும். (இணைப்பு **02**).

- **செலவு விடயம் 118-2-3-37-2506**

விவசாய அமைச்சின் செலவு விடயம் 118-2-3-37-2506 இன் கீழ் திணைக்களத்திற்குக் கிடைக்கப் பெற்ற ஒதுக்கீடுகளில் 2017 வருடத்தின் 165 தொடர் கருத்திட்டங்களின் பொருட்டு பொறுப்புக்களின் பெறுமதியாக 323.61 மி.ரூபா மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டதுடன், 2018.12.31 ஆந் திகதிக்கு அதற்கான செலவு 110.20 மி.ரூபா என்பதுடன், கையிருப்புப் பற்றுச்சீட்டுக்களின் பெறுமதி 67.95 மி.ரூபாயாகும். மேலும், இவ் ஒதுக்கீட்டின் கீழ் கம்பஹா மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் 48 கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டதுடன், அதன் பொருட்டு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு 117.29 மி.ரூபாயாகும். இதன் கீழ் 2018.12.31 ஆந் திகதிக்கு செலவு 3.00 மி.ரூபா என்பதுடன், கையிருப்புப் பற்றுச்சீட்டுக்களின் பெறுமதி 109.28 மி.ரூபா ஆகும். அத்துடன் இதன் கீழ் விவசாய அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட கமத்தொழில் கிராமங்களின் தொழில் முனைவு வேலைத்திட்டத்தின் பொருட்டு பதுளை மாவட்டத்திற்கு 13.51 மி.ரூபா அளவு ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டதுடன், இதன் கீழ் 05 வேலைகள் செயற்படுத்தப்பட்டது. 2018.12.31 ஆந் திகதிக்கு அதன் செலவு 7.05 மி.ரூபா என்பதுடன், கையிருப்புப் பற்றுச்சீட்டுக்களின் பெறுமதி 5.20 மி.ரூபா ஆகும். (இணைப்பு **03**).

சிறிய நீர்ப்பாசனங்களின் புனரமைப்பு வேலைத்திட்டத்திற்கு இணையாக 2018 ஆம் ஆண்டு புதிய எண்ணக்கருவிற்கமைய, விசேட இரண்டு வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டதுடன், அத்தகவல்கள் கீழ் உள்ளவாறாகும்.

- **ஆயிரம் குளங்கள் ஆயிரம் கிராமங்கள் வேலைத்திட்டம்**

இவ்வேலைத்திட்டத்தின் கீழ் இனம் காணப்பட்ட நீர்ப்பாசனங்களுடன் அக்கிராமத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தலும் அக்கிராமத்தின் மக்களின் நலன்களின் பொருட்டுத் தேவையான சேவைகளையும் வழங்கி, உள்ளுர் கலாச்சாரங்களைப் பேணும் பொருட்டான விசேட வேலைத்திட்டங்களும் செயற்படுத்தப்பட்டது. அதற்கமைய நாட்டின் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் 361 வேலைகள் செயற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டதுடன், அவற்றில் 329 வேலைகள் வருடத்தில் முடிவுறுத்தப்பட்டது. இதன் பொருட்டு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு 755.67 மி.ரூபா ஆகும். (இணைப்பு **04)**

- **வண்டல் மண் அகற்றி குளங்களை ஆழப்படுத்தல் வேலைத்திட்டம்.**

இவ்வேலைத்திட்டம் அரசின் ஒதுக்கீட்டை ஈடுபடுத்தாது, உரிய நீர்ப்பாசனங்களை ஆழப்படுத்தும் போது அகற்றப்படும் வண்டன் மண் மற்றும் மண் விற்பனை செய்து கிடைக்கப் பெற்ற பணம் கமக்காரர்களின் நிதியத்தின் மூலம் நீர்ப்பாசனங்களின் சகல திருத்த வேலைகளின் பொருட்டு ஈடுபடுத்தி இப்புனரமைப்பு வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. இதன் கீழ் புத்தளம் மாவட்டத்தின் ஆணமடுவ மற்றும் குடாவெவ ஆகிய கமநல சேவைகள் நிலையங்களில் 05 வேலைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அதன் மதிப்பீட்டின் மொத்தப் பெறுமதி 7.01 மி.ரூபா ஆகும் என்பதுடன், முடிவுற்ற வேலைகளின் மொத்தப் பெறுமதி 6.46 மி.ரூபா ஆகும். இதன் பௌதீக முன்னேற்றம் 100% ஆகும். (இணைப்பு **05)**

2.2. கட்டடங்கள் புனரமைப்பு செலவு விடயம் - 281-2-2-0-2001

மேற்படி செலவு விடயத்தின் கீழ் 180 மி.ரூபா ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டதுடன், இதன் கீழ் දිස්ත්‍රික් 25 மாவட்டங்களும் உள்ளடங்கும் வகையில் கமநல சேவைகள் நிலையங்களின் 118 திருத்தவேலைகளும் மற்றும் பிரதான காரியாலயத்தின் 02 திருத்த வேலைகளுமாக 120 மொத்த வேலைகள் செயற்படுத்தப்பட்டது. இச்செலவுத் தலைப்பின் கீழ் 2018.12.31 ஆந் திகதிக்கு செலவு 48.78 மி.ரூபா ஆகும் என்பதுடன், கையிருப்புப் பற்றுச்சீட்டுக்களின் பெறுமதி 118.41 மி.ரூபா ஆகும். முடிவுற்ற வேலைகளின் எண்ணிக்கை 95 ஆகும். அதற்கமைய நிதி முன்னேற்றம் **92.9%** என்பதுடன், பௌதீக முன்னேற்றம் **79.16%** ஆகும். (இணைப்பு **06**)

2.3. கட்டடங்கள் புனரமைப்பு - செலவு விடயம் 281-1-1-0-2001

2018 ஆம் ஆண்டு மேற்படி செலவு விடயத்தின் கீழ் 60 மி.ரூபா ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டதுடன், அம் மொத்த ஒதுக்கீட்டின் கீழ் செயற்படுத்தப்பட்ட மொத்த வேலைகளின் எண்ணிக்கை 22 ஆகும். இச்செலவுத் தலைப்பில் 2018.12.31 ஆந் திகதிக்குச் செலவு 20.03 மி.ரூபா ஆகும் என்பதுடன், கையிருப்புப் பற்றுச்சீட்டுக்களின் பெறுமதி 20.18 மி.ரூபா ஆகும். இவற்றில் முடிவுற்றுள்ள வேலைகளின் எண்ணிக்கை 17 ஆகும். இவ்வேலைத்திட்டத்தின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் முறையே **67.03%** மற்றும் **77%** ஆகும். (இணைப்பு **07)**

2.4. கட்டடங்களைச் சுகீகரித்துக் கொள்ளல் செலவு விடயம் - 281-2-2-0-2104

மேற்படி செலவு விடயத்தின் கீழ் 20 மி.ரூபா ஒதுக்கப்பட்துடன், இவ் ஒதுக்கீடு 07 மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் 08 வேலைகள் செயற்படுத்தப்பட்டது. இச்செலவுத் தலைப்பின் 2018/12/31 ஆந் திகதிக்குச் செலவு 5.90 மி.ரூபா ஆகும் என்பதுடன், கையிருப்புப் பற்றுச்சீட்டுக்களின் பெறுமதி 8.20 மி.ரூபா ஆகும். அதற்கமைய 06 வேலைகள் முடிவுற்றுள்ளது. இதன் நிதி முன்னேற்றம் 70.52% என்பதுடன் பௌதீக முன்னேற்றம் 85.7% ஆகும். (இணைப்பு **08**)

2.5. தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கப் பணியகத்தின் மூலம் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டின் கீழ் செயற்படுத்தப்பட்ட சிறிய நீர்ப்பாசனங்களின் புனரமைப்பு வேலைத்திட்டம்

இவ்வேலைத்திட்டத்தின் கீழ் வடக்கு கிழக்கு மாகாணங்களின் சிறிய நீர்ப்பாசனங்களின் புனரமைப்பு நடவடிக்கைகளின் பொருட்டு 500 மி.ரூபா ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டதுடன், 08 மாவட்டங்கள் உள்ளடங்கும் வகையில் 129 வேலைகள் செயற்படுத்தப்பட்டது. இவ்வேலைகளில் முடிவுற்ற வேலைகளின் எண்ணிக்கை 107 ஆகும் என்பதுடன், 2019 வருடத்தின் பொருட்டு தொடர் வேலைகளின் எண்ணிக்கை 18 ஆகும். இதன் கீழ் 2018/12/31 ஆந் திகதிக்குச் செலவு 222.52 மி.ரூபா ஆகும் என்பதுடன், கையிருப்புப்ப

பற்றுச்சீட்டுக்களின் பெறுமதி 152.31 மி.ரூபா ஆகும். இவ்வேலைத்திட்டத்தின் நிதி முன்னேற்றம் 76.18% என்பதுடன் பௌதீக முன்னேற்றம் 83% ஆகும். (இணைப்பு **09**)

2.6. இயந்திரங்களின் புனரமைப்பு செலவு விடயம் - 281-2-2-0-2002

இச்செலவுத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு 10 மி.ரூபா என்பதுடன், இயந்திரங்களை கையகப்படுத்திக் கொள்ளலின் (281-2-2-0-2103 செலவு விடயம்) கீழ் ஒதுக்கப்பட்டிருந்த அளவு 3.5 மி.ரூபா ஒதுக்கீடும் இச்செலவுத் தலைப்பிற்கு மாற்றப்பட்டு இயந்திரங்களின் புனரமைப்பின் பொருட்டு ஈடுபடுத்த மொத்த ஒதுக்கீட்டின் அளவு 13.5 மி.ரூபா என்பதுடன், இயந்திரங்களின் புனரமப்பின் பொருட்டு ரூபா 11.66 செலவிடப்பட்டுள்ளது. அதற்கமைய நிதி முன்னேற்றம் 86.43% ஆகும்.

2.7. இயந்திரங்களின் சேவைகள் வழங்குதல்

இயந்திரவியல் பிரிவு (திணைக்களத்திற்குச் சொந்தமான டோசர்/எக்ஸ்கேவேட்டர் இயந்திரங்கள்)

2018.12.31 ஆந் திகதியில் எமது திணைக்களத்திற்குச் சொந்தமாகவிருந்த இயந்திரங்கள் தொடர்பான விபரங்கள் கீழ் உள்ளவாறாகும்.

ஜப்பான் இயந்திரங்கள்

01. எக்ஸ்கேவேட்டர் இயந்திரம்	-	04
02. மினி எக்ஸ்கேவேட்டர் இயந்திரம்	-	02
03. டோசர் இயந்திரம்	-	14
04. சிறிய மண் அடிக்கும் ரோலர்	-	02
மொத்தம்		22

சீன இயந்திரங்கள்

01. எக்ஸ்கேவேட்டர் இயந்திரம்	-	07
02. வீல் லோடர்	-	03
03. பெக்கோ லோடர்	-	05
04. புல்டோசர்	-	09
05. வைபிறேட்டர் றோலர்	-	04
06. மோட்டர் கிறேடர் இயந்திரம்	-	01
மொத்தம்	-	29
மொத்தக் கூட்டுத்தொகை	-	**51**

ஜப்பான் உதவியின் கீழ் வழங்கப்பட்ட இயந்திரங்களில் செயலிழந்துள்ள இயந்திரங்கள் 06 (DAS 26, DAS 27, DAS 28, DAS 34, DAS 45, DAS 17) பாவனையிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அவற்றில் DAS 28, DAS 34 அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளது. சீனா உதவியின் கீழ் வழங்கப்பட்ட இயந்திரங்களில் செயலிழந்துள்ள 07 இயந்திரங்கள் (DAS 99,DAS 105, DAS 84,DAS101,DAS 104 ,DAS 88,DAS 102) அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய திணைக்களத்திற்குச் சொந்தமாக செயற்படும் நிலையிலுள்ள மொத்த இயந்திரங்களின் எண்ணிக்கை 38 ஆகும்.

இவ் இயந்திரங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிராந்திய இயந்திரவியல் பிரிவுகளுக்கு இணைக்கப்பட்டுள்ளது.

தொ.இல.	நிலையம்	சீன இயந்திரம்	ஜப்பான் இயந்திரம்	மொத்தம்
01	மாலபே	01	01	02
02	மாஹோ	06	06	12
03	அம்பாந்தோட்டை	03	04	07
04	மொனறாகலை	01	04	05
05	அனுராதபுரம்	11	01	12
	மொத்தம்	**22**	**16**	**38**

வருமான விபரம் - 2018

01. அம்பாந்தோட்டை - 0.64 மி.ரூபா
02. மொனறாகலை - 0.14 மி.ரூபா
03. அனுராதபுரம் - 0.87 மி.ரூபா
04. குருநாகலை - 1.38 மி.ரூபா

இவ் இயந்திரங்களில் 2018ஆம் வருடத்தின் பொருட்டு திணைக்களத்திற்குக் கிடைக்கப் பெற்றுள்ள வருமானம் 3.04 மி.ரூபா ஆகும். இவ் இயந்திரங்கள் 2018 வருடத்தில் செயற்பட்டுள்ள சேவைகள் மீற்றர் மணித்தியாலம் 4,428 அளவில் செயற்பட்டுள்ளது. இதற்கமைய நிறைவேற்றியுள்ள வேலைகளின் மொத்தப் பெறுமதி அண்ணளவில் 25.08 மி.ரூபாயாகும்.

மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்த வேலைகளின் எண்ணிக்கை - 35

2.8. கமக்காரர்களின் பொறுப்பு நிதியம்

- **விவசாய வீதிகள்**
  - கம்பஹா மாவட்டத்தில் விவசாய வீதி கொன்கீற் போடப்பட்டு நவீனமயமாக்கும் கருத்திட்டமொன்று 2018 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், அதன் மதிப்பீட்டுப் பெறுமதி 0.28 மி.ரூபா என்பதுடன், அதன் செலவாக 0.17 மி.ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதன் பொருட்டான முற்பணமான 0.17 மி.ரூபா செலுத்தப்பட்டுள்ளதுடன், கருத்திட்டத்தின் வேலைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளது, அதற்கமைய நிதி முன்னேற்றம் 100% ம் பௌதீக முன்னேற்றம் 100% ஆகும். (இணைப்பு **10**).
  - பதுளை மாவட்டத்தில் 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டமான கஹத்தேவல விவசாய வீதியின் பொருட்டு அனுமதிக்கப்பட்ட மொத்த மதிப்பீடுப்பணம் 4.44 மி.ரூபா என்பதுடன், இதன் பொருட்டு செலவிடப்பட்ட முற்பணமான 0.88 மி.ரூபா செலுத்தப்பட்டுள்ளதுடன், கையிருப்புப்பற்றுச்சீட்டின் பெறுமதி 3.09 மி.ரூபா ஆகும். பௌதீக முன்னேற்றம் 100% என்பதுடன், முடிவுற்ற வேலைகளின் பெறுமதிக்கமைய நிதி முன்னேற்றம் 89.7% ஆகும். (இணைப்பு **11**).

2.9. கமநல அபிவிருத்தி நிதியம்

கமநல அபிவிருத்தி நிதியத்தினால் நிலையங்களின் வழங்கல் சேவைகளை மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தலின் கீழ் விற்பனை நிலையங்களை அபிவிருத்தி செய்யும் பொருட்டு 25 மி.ரூபா ஒதுக்கப்பட்டதுடன், 2017 வருடத்தின் செலவுகள் செலுத்தப்பட்டதன் பின்னர் 2018 வருடத்தின் பொருட்டான நிதியின் அளவு 21.92 மி.ரூபாயாகும். அவற்றில் 17.66 மி.ரூபாவை ஈடுபடுத்தி, 21 மாவட்டங்களை

உள்ளடக்கும் வகையில் 49 நிலையங்களின் விற்பனை நிலையங்களை அபிவிருத்தி செய்யும் வேலையின் பொருட்டு முற்பணம் வழங்கப்பட்டதுடன், அதன் மொத்தச் செலவு **17.30** மி.ரூபா ஆகும். (இணைப்பு **10**).

கட்டடங்கள், வாகனங்கள் மற்றும் உபகரணங்களின் பராமரிப்பு மற்றும் திருத்தங்களின் பொருட்டு 15 மி.ரூபா ஒதுக்கப்பட்டதுடன், 2017 வருடத்தின் செலவுகள் செலுத்தப்பட்டதன் பின்னர் 2018 வருடத்தின் பொருட்டான நிதியின் அளவு 9.90 மி.ரூபா ஆகும் அவற்றில் 6.84 மி.ரூபாவின் கீழ் 08 மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் 12 நிலையங்களின் திருத்த வேலைகளின் பொருட்டு முற்பணம் வழங்கப்பட்டதுடன், அதன் மொத்தச் செலவு 6.61 மி.ரூபா ஆகும். (இணைப்பு **10**).

2.10. காணிகளின் சுவீகரிப்பு

2018 ஆம் வருடத்திலும் திணைக்களத்திற்கு கையளிக்கப்படாத கமநல சேவைகள் நிலையங்கள் அமைந்துள்ள காணிகள் மற்றும் சிறிய நீர்ப்பாசனங்களின் பொருட்டு தேவையான காணிகளை கையேற்றுக் கொள்ளவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இதன் போது காணிகளை கையேற்றுக் கொள்ளும் செயற்பாடுகளின் பொருட்டு நீண்ட காலத்தைச் செலவிடல் மற்றும் தொடர்ச்சியான எதிர்ப்புக்கள் எழுதல் என்பவற்றினால் இச் செயற்பாடு தொடர்ந்து நடைபெற்ற வண்ணம் உள்ளது.

2.11. புத்தரிசி விழா

அனுராதபுரம் ஜயஸ்ரீ மஹா போதியில் **51** வது தடவையாகவும் தேசிய புத்தரிசி விழா ஏப்பிறல் மாதம் 07 மற்றும் 08 ஆந் திகதிகளில் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது.

இலங்கை வாழ் கமக்காரர்களின் அபிவிருத்தியின் எதிர்பார்ப்புடன் "வானம் பொழியட்டும் - வயல் நிலங்கள் சிறக்கட்டும்" என்னும் தொனிப் பொருளின் முன்னைய கௌரவ விவசாய அமைச்சரின் வழிகாட்டல் மற்றும் விவசாய அமைச்சின் செயலாளரின் அறிவுரைகள் 2018 புத்தரிசி விழாவினை சிறப்புறச் செய்வதற்கு ஏதுவாகவிருந்தது.





இத்தேசிய விழா இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம் ஊடாக நேரடியாக ஒளிபரப்பு செய்வதற்கு முன்னைய வருடங்களின் போன்று இம்முறையை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

நாட்டிலுள்ள கமநல சேவைகள் நிலையங்கள் ஊடாகச் சேகரிக்கப்பட்டு கையளிக்கப்பட்ட புத்தரிசி அன்றைய தினம் பூஜை செய்யப்பட்டதுடன், இதன் பொருட்டான அரிசி மற்றும் நிதி உதவிகள் நாட்டில் சகல பாகங்களிலும் அமைந்துள்ள கமக்காரர் அமைப்புக்களினால் செய்யப்பட்டது. இப்புத்தரிசி விழாவை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு விவசாய அமைச்சும் மற்றும் அதன் கீழுள்ள சகல நிறுவனங்களும், பல அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் உட்பட வடமத்திய மாகாண சபை, அனுராதபுரம் மாவட்ட செயலகம் மற்றும் தனியார் நிறுவனங்களும் பாரியளவில் பங்களிப்பினை வழங்கியது. இதன் போது புத்தரிசி விழாவிற்கான நினைவு மலரொன்றும் வெளியிடப்பட்டது

இதன் பொருட்டு செலவுத் தலைப்பு 281-2-2-0-1409 கீழ் 3.00 மி.ரூபா பணம் அனுராதபுரம் மாவட்ட அலுவலகத்திற்கு வழங்கப்பட்டதுடன், இப் பணத்தில் ரூபா 2.96 செலவிடப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக கமக்காரர்களின் பொறுப்பு நிதியத்தின் கீழ் 3.**00** மி.ரூபா வழங்கப்பட்டதுடன், ஊடக நடவடிக்கைகளின் பொருட்டு ரூபா 2.99 செலவிடப்பட்டுள்ளது. அத்துடன் புத்தரிவிழா நிதியத்தின் கீழ் பிரதான காரியாலயத்தின் மூலம் 0.58 மி.ரூபா செலவிடப்பட்டுள்ளது. அதற்கமைய 2018 தேசிய புத்தரிசி விழாவின் பொருட்டான மொத்த செலவு ரூபா 6.53 ஆகும். (இணைப்பு **12**)

2.12. பொது மக்கள் மனக்குறைபாடுகள் ("ஜனாதிபதிக்குக் கூறுங்கள் நிகழ்ச்சித்திட்டம்")

- பொது மக்கள் முறைப்பாடு ஜனாதிபதி செயலகம், பிரதம அமைச்சர் அலுவலகம் மற்றும் விவசாய அமைச்சினால் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் மற்றும் வேண்டுகோள்கள்.

  2018 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஜூன் மாதம் 30 ஆந் திகதி வரையில் முறைப்பாடுகள் மற்றும் வேண்டுகோள்கள் 168ம், 2018 ஜூலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் 2018 திசம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையில் முறைப்பாடுகள் மற்றும் வேண்டுகோள்கள் 315 மாகக் கிடைக்கப் பெற்றுள்ள மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கைக்குரிய முன்னேற்றம் கீழ் குறிப்பிடப்பட்டள்ளவாறாகும்.

காலம்	மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் மற்றும் வேண்டுகோள்கள்	தீர்க்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் மற்றும் வேண்டுகோள்கள்	நிலையங்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ள வேண்டுகோள்கள்
2018.01.01-2018.06.30	168	41	127
2018.07.01-2018.12.31	315	34	281

- ஜனாதிபதிக்குக் கூறுங்கள் நிகழ்ச்சித்திட்டத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் மற்றும் வேண்டுகோள்கள்

  மாவட்டத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ள வேண்டுகோள்கள் மற்றும் முறைப்பாடுகளில் 2018.01.01 ஆந் திகதி தொடக்கம் 2018.06.30 ஆந் திகதி வரையில் 103ம், 2018.07.01 ஆந் திகதி தொடக்கம் 2018.12.31 ஆந் திகதி வரையில் 214 மாகக் கிடைக்கப் பெற்றுள்ள மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கைக்குரிய முன்னேற்றம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

காலம்	மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் மற்றும் வேண்டுகோள்கள்	தீர்க்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் மற்றும் வேண்டுகோள்கள்	நிலையங்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ள வேண்டுகோள்கள்
2018.01.01-2018.06.30	103	21	82
2018.07.01-2018.12.31	214	25	189

03. பொறியியல் பிரிவு

- **நோக்கம்:**

  தரமிக்கமான பொறியியல் தொழில்நுட்பத்தின் மூலம் திணைக்களத்திற்குரிய சகல நிர்மாணங்கள் மற்றும் சிறிய நீர்ப்பாசனங்களின் புனரமைப்புகளை மேற்கொண்டு பேணிப்பராமரித்தல்.

- **பணிகள்:**

  புதிய தொழில்நுட்ப உத்திகளை ஈடுபடுத்தி கமநல அபிவிருத்தித் திணைக்களத்தை மிக உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லும் இலக்கை ஈட்டிக் கொள்ளல்

- **குறிக்கோள்கள்:**

  01. சிறிய நீர்ப்பாசனங்கள் மற்றும் கட்டடங்கள் நிர்மாணம் மற்றும் திருத்த நடவடிக்கைகளின் போது தேவையான பொறியியல் ரீதியான அறிவுரைகளை வழங்குதல் மற்றும் ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவுரைகள் மற்றும் அதற்குத் தலைமைத்துவத்தை வழங்குதல்.

  02. அந்நிர்மாணங்களின் தரத்தை உயர் நிலையில் பேணுவதற்குத் தேவையான அறிவுரைகளை வழங்குதல்.

  03. கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பொறியியல் பிரிவை மேலோங்கச் செய்வதற்கும் மற்றும் அதன் கடமைப் பணிகளை உரிய முறையில் செயற்படுத்துவதற்குத் தேவையான அறிவுரைகளை வழங்குதல் மற்றும் வழிமுறைகளைத் தயாரித்தல்.

  04. பிராந்திய பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுடன் ஒன்றிணைந்து சகல மேற்பார்வை நடவடிக்கைகள் மற்றும் செயலாற்றுகைத் திறனை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

  05. நாட்டின் உயிர் நாடிகளான கமக்காரர் தலைமுறைகளைப் பிரதிநிதிப்படுத்தும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் நிர்மாணத் துறையில் ஏற்படும் முறைகேடுகளை நீக்கி, அதன் முன்னேற்றத்தின் பொருட்டு நேர்மையான பணிக்குத் தோல் கொடுத்தல்.

- **கடமைப் பொறுப்புக்கள்:**

  பொறியியல் பிரிவின் மூலம் நீர்ப்பாசனங்கள், கட்டடங்கள், விவசாய வீதிகள் மற்றும் வேறு சிவில் பொறியியல் ரீதியான நிர்மாணங்கள் தொடர்பாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுகின்றது.

  1. விலைப் பகுப்பாய்வுகளைத் தயாரித்தல்.
  2. பொறியியல் ரீதியான மதிப்பீடுகளை அங்கீகரித்தல்.
  3. தொழில்நுட்ப மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.
  4. பொறியியல் அலுவலக ஆளணியினரின் கடமைப் பொறுப்புக்கள்/நியமனம், இடமாற்றம் தொடர்பான சிபாரிசுகளை வழங்குதல்.
  5. பொறியியல் ரீதியான பிணக்குகளின் பொருட்டு அறிவுரைகளை வழங்குதல்.
  6. பிரதான காரியாலயத்தின் மற்றும் பிரதான காரியாயலத்திற்குச் சொந்தமான கட்டடங்களில் நிர்மாணம் /திருத்தவேலைகளை மேற்கொள்ளல்.
  7. நிர்மாணங்களின் மேற்பார்வையின் பொருட்டு வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல் மற்றும் அவற்றைச் செயற்படுத்தல்.
  8. சகல பொறியியலாளர்களினதும் செயலாற்றுத் திறனை மதிப்பிடல்.

➢ **அலுவலக ஆளணியினர்:**

தொடர் இலக்கம்	பதவி	உரித்தான சேவை / வகுப்பு	உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை
01	பணிப்பாளர் (பொறியியல்)	இலங்கை பொறியியல் சேவை I வகுப்பு	01
02	பிராந்திய பொறியியலாளர்	இலங்கை பொறியியல் சேவை III வகுப்பு	01
03	மாவட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்	இலங்கை தொழில்நுட்ப சேவை விசேட வகுப்பு	01
04	படவரைஞர்	இலங்கை தொழில்நுட்ப சேவை I வகுப்பு	01
05	தொழில்நுட்ப உத்தியோகத்தர்	இலங்கை தொழில்நுட்ப சேவை III வகுப்பு	03
06	அபிவிருத்தி உத்தியோகத்தர்	அபிவிருத்தி உத்தியோகத்தர் III வகுப்பு	03
07	அலுவலக உதவியாளர்	அலுவலக உதவியாளர் சேவை	01
மொத்தம்			11

➢ **2018 வருடத்தில் பொறியியல் பிரிவினால் நிறைவேற்றப்பட்டுள்ள பணிகள்**

இப்பிரிவின் கடமை நடவடிக்கைகள் அபிவிருத்திப்பிரிவின் செயற்படுத்திட்டத்திற்கமைய செயற்படுத்தப்படுகின்றது. கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் சிறிய நீர்ப்பாசனங்கள், திணைக்களத்திற்குரிய கட்டடங்களின் நிர்மாணங்கள் மற்றும் திருத்தவேலைகள், மதிப்பீடுகளை அங்கீகரித்தல், தொழிற்நுட்ப மதிப்பீடுகள் மற்றும் விலைப்பகுப்பாய்வு அறிக்கைகளைத் தயாரித்தல் போன்றவை பொறியியல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது என்பதுடன் இவ்வருடத்தில் இந்நடவடிக்கைகள் சிறப்புடன் நிறைவேற்றப்பட்ட முறைகள் தொடர்பாக நிர்வாக அறிக்கையில் உட்படுத்தப்பட்டுள்ளது.

3.1. விலைப் பகுப்பாய்வு

- கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் மாவட்ட மட்டத்தில் செயற்படுத்தப்பட்ட சிறிய நீர்ப்பாசனங்களின் மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது பொதுவாகப் பயன்படுத்தப்படும் பொருட்களைக் குறிப்பிட்டு, விலைப்பகுப்பாய்வுகளின் விகிதங்கள் மற்றும் சிறிய நீர்ப்பாசனங்களின் விகிதங்களை உட்படுத்தி விலைப்பகுப்பாய்வு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது.
- இவ்வாறு தயாரிக்கப்படும் விலைப் பகுப்பாய்வு அறிக்கைகள் கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குரிய சகல பிரதி / உதவி ஆணையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
- மேலும், இவ்விலைப் பகுப்பாய்வு அறிக்கைகள் தேவையான சந்தர்ப்பங்களில் திருத்தம் செய்யப்பட்டு சகல மாவட்டங்களுக்கும் அறிவிக்கப்படும்.

3.2. பொறியியல் மதிப்பீடுகளை அங்கீகரித்தல்

திணைக்களத்தின் அபிவிருத்திப் பிரிவின் ஊடாக 2018 ஆம் வருடத்தில் எமது பிரிவிற்கு முன்வைக்கப்பட்ட பொறியியல் மதிப்பீடுகளில் பிரச்சனைகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பாக ஆராய்ந்து பணிப்பாளர் பொறியியலாளரினால் அனுமதி வழங்கப்படும். அவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள் மதிப்பீடுகளின் சாராம்சம் இங்கு உட்படுத்தப்பட்டுள்ளது. (இணைப்பு 13)

3.3. பிரதான காரியாலயத்தின் திருத்தவேலைகள்

இவ்வருடத்தினுள் பிரதான காரியாலயத்தின் பழைய கட்டடத்தின் திருத்தவேலைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், இதன் போது மலசலகூடத் தொகுதியின் புதுப்பித்தல் மற்றும் மூன்று மாடிக்கட்டத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் கட்டடங்கள் திணைக்களத்தினால் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், இதன் பொருட்டு தேவையான அறிவுரைகள் மற்றும் இணைப்பு நடவடிக்கைகள் பொறியியல் பிரிவினால் நிறைவேற்றப்பட்டது. இப்புதுப்பித்தல் நடவடிக்கைகளின் பொருட்டு செலவாகிய ஒதுக்கீடு தொடர்பான சாராம்சத்தை இவ்வாறு குறிப்பிடலாம்.

பிரதான காரியாலயத்தின் உணவகத்தின் புதுப்பித்தலின் பொருட்டு திட்டங்களைத் தயாரித்தல், மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் இப்பிரிவினால் நிறைவேற்றப்பட்டது.

தொ. இல.	கருத்திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுப் பெறுமதி (மி.ரூபா)	2018 ஆம் வருடத்தில் விடுவிக்கப்பட்ட ஒதுக்கீடு / செலவு (மி.ரூபா)
01	பழைய கட்டடத்தின் மலசலக் கூடத்தொகுதி புதுப்பித்தல்	16.27	15.00
02	பழைய மூன்று மாடிக் கட்டடம் புதுப்பித்தல்	25.69	15.00
03	உணவகத்தைப் புதுப்பித்தல்	1.50	1.32

3.3.1. பழைய கட்டடத்தின் மலசலக்கூடத்தொகுதி புதுப்பித்தல்

பிரதான காரியாலயத்தின் மலசலக்கூடத் தொகுதியின் திருத்த நடவடிக்கைகள் வருட இறுதியில் முடிவுறுத்தப்பட்டது.

3.3.2. பழைய மூன்று மாடிக் கட்டடம் புதுப்பித்தல்

பிரதான காரியாலயத்தின் பழைய கட்டடத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் கட்டடங்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது என்பதுடன், இதுவரையில் இரண்டாவது மாடியின் திருத்தவேலைகள் 90% வீதமளவில் முடிவுற்றுள்ளது. இதன் போது அங்கு தாபிக்கப்பட்டுள்ள பிரிவுகளின் கடமைகளை இலகுவாக மேற்கொள்வதற்குத் தேவையான இடவசதிகளைக் கருத்திற் கொண்டு, திருத்தவேலைகள் மேற்கொள்ளப்பட்டது. இப்புதுப்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள முறை பற்றி புகைப்படத்தின் மூலம் விளக்கமாகக் காட்டப்பட்டுள்ளது. (இணைப்பு 14).

3.3.3. உணவகத்தைப் புதுப்பித்தல்

பிரதான காரியாலயத்தின் உணவகத்தின் திருத்தவேலைகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு சிபாரிசு செய்யப்பட்ட கமக்காரர்களின் ஒழுங்கமைப்பிற்கு வழங்கப்பட்டதுடன், அத்திருத்தவேலைகளை 14 நாட்களில் முடிவுறுத்துவதற்கு இயலுமாகவிருந்தது. திருத்தவேலைகள் மேற்கொள்ளப்பட்ட புதிய உணவகத்தின் புகைப்படங்கள் சில இங்கு உட்படுத்தப்பட்டுள்ளது. (இணைப்பு 15).

3.4. கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குரிய சுற்றுலா விடுதிகளின் திருத்தவேலைகள்

இத்திணைக்களத்திற்குச் சொந்தமான 02 சுற்றுலா விடுதிகள் கதிர்காமம் மற்றும் அனுராதபுரம் மிஹிந்தளையில் அமைந்துள்ளது. இச்சுற்றுலா விடுதிகளின் திருத்தம் மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகள் இவ்வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டது என்பதுடன், இதுவரையில் மிஹிந்தளை சுற்றுலா விடுதியின் திருத்தவேலைகள் முடிவுற்றுள்ளது.

மேலும், கதிர்காமம் சுற்றுலா விடுதியின் புதுப்பித்தல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதன் பொருட்டு செலவான ஒதுக்கீடுகள் தொடர்பான சாராம்சம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

தொ.இல.	கருத்திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுப் பெறுமதி (மி.ரூபா)	2018 ஆம் வருடத்தில் விடுவிக்கப்பட்ட ஒதுக்கீட்டுப் பணம் (மி.ரூபா)
01	மிஹிந்தளை சுற்றுலா விடுதியின் திருத்தவேலை	25.00	10.00
02	கதிர்காமம் சுற்றுலா விடுதியின் திருத்தவேலை	40.17	10.00

3.5. தொழில்நுட்பக் குழுவின் மதிப்பீடு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சொந்தமான கட்டடங்கள் மற்றும் சிறிய நீர்ப்பாசனங்களின் திருத்தவேலைகள், புனரமைப்புக்கள் மற்றும் நிர்மாணங்களுக்குரிய மதிப்பீடுகளைத் தயாரித்தன் பின்னர் அக்கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்குரிய பெறுகை ஆவணங்களை மதிப்பிடல், சிபாரிசு செய்தல் மற்றும் பெறுகைச் செயற்பாடுகளின் பின்னர் பொருத்தமான ஒப்பந்தக்காரர்களைத் தெரிவு செய்வதற்குரிய தீர்மானங்களை எடுத்தல் போன்ற நடவடிக்கைகள் இதன் கீழ் மேற்கொள்ளப்படும்.

அதற்கமைய, இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள தொழில்நுட்பக் குழுவின் மதிப்பீடுகள் மற்றும் சிபாரிசுகள் வழங்கப்பட்டுள்ள அறிக்கைகளின் சாராம்சம் இங்கு உட்படுத்தப்பட்டுள்ளது. (இணைப்பு 16)

04. நிறுவன அபிவிருத்திப் பிரிவு

நோக்கம் மற்றும் பொறுப்புக்கள்

கமக்காரர்களின் கமத்தொழில் தேவைகளை நிவர்த்தி செய்வதன் மூலம் அவர்களது பொருளாதார மற்றும் சமூக பிண்ணனியை பலப்படுத்துவதை நோக்காகக் கொண்டு மத்தியஸ்தரின் வகிபங்கை நிறைவேற்றும் பொருட்டு சகல கமநல சேவைகள் நிலையத் தளங்களை இயக்குவித்தலின் பொருட்டு 2018 ஆம் வருடத்தினுள் இப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட கடமைப் பொறுப்புக்கள் பற்றி ஒவ்வொரு விடயங்களின் மூலம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வரிசைப்படுத்துகின்றது.

4.1 கமநல சேவைகள் நிலையங்களின் மேற்பார்வை

கிடைக்கப் பெற்ற கமநல சேவைகள் நிலையங்களின் பரிசீலனை அறிக்கைகள்.

- கமநல சேவைகள் நிலையங்களின் மேற்பார்வைக்குரிய பரிசீலனை அறிக்கைகள் உரிய முறையில் பிரதான காரியாலத்திற்கு அனுப்பி வைக்கும் படி மாவட்டத்தின் சகல பிரதி/உதவி ஆணையாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இவ் வருடத்தில் 351 கமநல சேவைகள் நிலையங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அறிக்கைகள் பிரதான காரியாலயத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கமநல சேவைகள் நிலையங்கள் ஊடாக சேவைகள் வழங்கல்

- விவசாயிகளுக்குத் தேவையான விதைகள் மற்றும் நாற்றுப் பொருட்கள், கன்று வகைகள், விவசாய உபகரணங்கள் மற்றும் வேறு தேவையான விவசாய பொருட்கள் கமநல சேவைகள் நிலையங்கள் ஊடாக விநியோகம் செய்தல் மற்றும் அதன் மூலம் வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

4.2. பொது பற்றுச்சீட்டு /ஏக்கர் வரி /பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் மற்றும் காசுப்புத்தகங்கள் விநியோகம்

- கட்டளையிடப்பட்ட புத்தகங்கள் களஞ்சியத்தில் இருப்புக்கள் முடிவடைவதற்கு முன்னர் மீள அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் தேவைகளின் பிரகாரம் மாவட்ட அலுவலகங்களுக்கு விநியோகம் செய்தல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய 2018ம் ஆண்டு பற்றுச்சீட்டுப்புத்தகங்களின் விற்பனை தொடர்பான தகவல்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

புத்தக வகைகள்	புத்தகங்களின் எண்ணிக்கை	ரூபா (மி.ரூபா)
பொது பற்றுச்சீட்டுப் புத்தகங்கள்	26,926	1.34
ஏக்கர் வரி பற்றுச் சீட்டுப் புத்தகங்கள்	14,870	0.74
குழுப் பணப் பற்றுச்சீட்டுப் புத்தகங்கள்	61	0.07
மொத்தம்	**41,857**	**2.16**

4.3. ஏக்கர் வரி அறவீடு

2018 **வருடத்தின் ஏக்கர் வரி இலக்கு**		➢ 130.14 **(மி.ரூபா)**
இலக்கிற்கமைய கமநல அபிவிருத்தி நிதியத்திற்கு 20% பங்களிப்பு		➢ 26.03 **(மி.ரூபா)**
2018 வருடத்தினுள் அறவிடப்பட்டுள்ள ஏக்கர் வரி (முன்னைய வருடங்களின் நிலுவைகளுடன்)		➢ 127.03 **(மி.ரூபா)**
அறவீட்டிற்கமைய 2018.12.31 ஆந் திகதியில் கமநல அபிவிருத்தி நிதியத்திற்கு வைப்பிலிடப்பட்டுள்ள பணம்	➢ 2018 வருடத்தின் பொருட்டு	➢ 26.01 **(மி.ரூபா)**
	2017 மற்றும் முன்னைய வருடங்களின் நிலுவை	➢ 4.70 **(மி.ரூபா)**
		➢ 30.72 **(மி.ரூபா)**

4.4. 2 KR - ஜப்பான் யென் உதவியின் கீழ் உழவு இயந்திரங்களை விநியோகம் மற்றும் முகாமைத்துவம்



உழவு இயந்திரங்களின் தவணைப் பண அறவீடு

- 2KR ஜப்பான யென் நன்கொடை வேலைத்திட்டத்தின் கீழ் விவசாய அமைச்சின் ஊடாக கிடைக்கப் பெற்று, இத் திணைக்களத்தின் மூலம் 2012 ஆம் ஆண்டு வரை விநியோகிக்கப்பட்ட உழவு இயந்திரங்கள் /விவசாய உதிரிப்பாகங்களின் பொருட்டு 2018 ஆம் ஆண்டினுள், அறவிடப்பட்ட தவணைப் பணம் மாவட்டங்களினால் பிரதான காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
- அதற்கமைய கீழ் காட்டப்பட்டுள்ளவாறு தவணைப் பணம் கமநல அபிவிருத்தி நிதியத்திற்கு வைப்பிலிடப்பட்டுள்ளது.

02 சில்லு உழவு இயந்திரத்தின் தவணைப்பணம்

i. 1992-2006 வருடத்தினுள் கமக்காரர்களின் ஒழுங்கமைப்புக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உழவு இயந்திரங்களின் பொருட்டு - 0.45 **(மி.ரூபா)**
ii. 2008 வருடத்தில் கமக்காரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உழவு இயந்திரங்களின் பொருட்டு - 2.45 **(மி.ரூபா)**
iii. 2010 வருடத்தில் வழங்கப்பட்டுள்ள உழவு இயந்திரங்களின் பொருட்டு - 9.63 **(மி.ரூபா)**
iv. 2012 வருடத்தில் கமக்காரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உழவு இயந்திரங்களின் பொருட்டு - 13.28 **(மி.ரூபா)**

மொத்தம் = **25.77 (மி.ரூபா)**

04 சில்லு உழவு இயந்திரத்தின் தவணைப்பணம்

- 1986-2012 வரையில் கமநல சேவைகள் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உழவு இயந்திரங்களின் பொருட்டு - 0.31 **(மி.ரூபா)**

நீர் பம்பி தவணைப்பணம்

- 2010 வருடத்தில் கமக்காரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நீர் பம்பிகளின் பொருட்டு - 0.08 **(மி.ரூபா)**

பாவனைக்குதவாத உழவு இயந்திரங்கள் மற்றும் விவசாய உபகரணங்களை அப்புறப்படுத்தல்

2018 வருடத்தில் பாவனைக்குதவாத உழவு இயந்திரங்கள் மற்றும் விவசாய உபகரணங்களின் அப்புறப்படுத்தலின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

	04 சில்லு உழவு இயந்திரங்கள்	02 சில்லு உழவு இயந்திரங்கள்	இழுவைப் பெட்டிகள்	ஏனையவை
காலி	05	07	01	12
முல்லைத்தீவு	-	-	-	17
மொத்தம்	05	07	01	29

4.5. உரிமைக் கையளிக்கப்பட்ட உழவு இயந்திரங்களின் எண்ணிக்கை

உழவு இயந்திரங்களின் உரிமையைக் கையளிக்கும் போது பயன்படுத்தப்படும் ஆவணங்கள் மற்றும் உரிமைக் கையளிப்பு நடைமுறைகள்.

4.5.1 உரிய மாவட்டத்தின் பிரதி /உதவி ஆணையாளர்களினால் உழவு இயந்திரத்தை உரிய கமக்காரர்களின் ஒழுங்கமைப்பிற்கு/ கமக்காரர்களின் ஒழுங்கமைப்பின் உறுப்பினருக்குக்கு உரிமையைக் கையளிக்கும் படி விடுக்கப்படும் எழுத்து மூலம் வேண்டுகோளுடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களைப் பூரணப்படுத்தி, பிரதான காரியாலயத்திற்கு அனுப்பி வைத்திருத்தல் வேண்டும்.

I. ஒப்பந்தத்தின் பிரகாரம் உழவு இயந்திரம் பாவிக்கப்பட்டுள்ளதாகவும், முழுமையானத் தவணைப்பணம் பிரதான காரியாலயத்திற்குச் செலுத்தப்பட்டுள்ளதாகவும் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபாரிசு.

II. முழுமையான தவணைப்பணம் செலுத்தி முடிவுறுத்தப்பட்டதை உறுதி செய்யும் பொருட்டு உரிய உழவு இயந்திரத்தின் பொருட்டு தவணைப் பணம் செலுத்தியதற்குரியதாக பிரதான காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள காசோலைகளின் விபர அறிக்கை (காசோலை இலக்கம், திகதி, பெறுமதி, பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி ஆகிய விபரங்கள்).

III. உரிய கட்சிக்காரரின் தேசிய அடையாள அட்டையின் சான்றுப்படுத்தப்பட்ட நிழற்பிரதி.

IV. உழவு இயந்திரம் கையளிக்கப்பட்டதற்கு ஏற்புடையதான ஒப்பந்தத்தின் பிரதி.

V. இறுதியாக பெற்றுக் கொண்டுள்ள வருடாந்த வருமான வரிப் பத்திரத்தின் பிரதி,

VI. சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட எம்.ரீ.ஏ. 06 படிவம்.

4.5.2. மேற்குறிப்பிடப்பட்டுள்ள கடித ஆவணங்கள் பூரணமாகவிருப்பின், தவணைப் பணம் பிரதான காரியாலத்திற்குக் கிடைக்கப் பெற்றுள்ளதா எனப் பிரிவின் உரிய பதிவேடுகளுடன் (தவணைப் பண அறவீடுகளின் பதிவேடு, கிடைக்கப் பெற்ற காசோலைப் பதிவேடு, சிறாப்பர் பிரிவிற்கு முன்வைக்கப்பட்ட பதிவேடு) ஒப்பிட்டுப் பார்த்து, காசோலைகள் மாற்றப்பட்டுள்ளதா என சரியாக உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு தவணைப் பண அறவீட்டு அறிக்கையைக் கணக்குப் பிரிவிற்கு முன்வைத்தல்.

4.5.3. காணாமல் போயுள்ள அல்லது பதிவிலக்கம் குறிப்பிடப்படாதுள்ள உழவு இயந்திரங்களின் பொருட்டு மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் மூலம் நகல் பிரதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

4.5.4. உறுதிப்படுத்தப்பட்டு கிடைக்கப் பெற்றதன் பின்னர், உழவு இயந்திரம் கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குரியதாயின், கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினாலும், விவசாய அமைச்சிற்குச் சொந்தமானது எனில், அதன் பதிவுச்சான்றிதழுடன் எம்.ரீ.ஏ. 06 படிவத்தை விவசாய அமைச்சின் செயலாளருக்கு முன்வைக்கப்பட்டு கையொப்பத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

4.5.5. எம்.ரீ.ஏ. 06 படிவம் கையொப்பம் இடப்பட்டதன் பின்னர்,

I. பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதியுடன் எம்.ரீ.ஏ. 06 படிவத்தின் "பீ" மற்றும் "பீ 01" படிவத்தை, பிரதான அலுவலகத்தின் வழங்கப்படும், உரிமைக் கையளிப்பின் மேலதிக நடவடிக்கைகளின் பொருட்டு அறிவுரைகள் அடங்கிய கடிதத்துடன் மாவட்ட பிரதி /உதவி ஆணையாளருக்கு முன்வைத்தல்.

► பிரதிகள் - விவசாய அமைச்சிற்கு, மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்கு, உரிய கமக்காரருக்கு.

எம்.ரீ.ஏ. 06 படிவத்தின் "ஏ" படிவம், பிரதான காரியாலயத்தினால் வழங்கப்படும் கடிதத்துடன் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்கு முன்வைத்தல்.

► பிரதிகள் - உரிய மாவட்டத்தின் பிரதி / உதவி ஆணையாளருக்கு, உரிய கமக்காரருக்கு.

4.5.6. உரிய கமக்காரருக்கு வருமான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு கடிதங்களை வழங்குதல்.

I. குறித்த உழவு இயந்திரம் பதிவு செய்யப்பட்டிருப்பது, செயலாளர், விவசாய அமைச்சின் கீழ் எனில், விவசாய அமைச்சின் சிபாரிசுடனான கடிதத்துடன் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் வழங்கப்படும் குறித்த கடிதத்தை வழங்குதல்.

II. குறித்த உழவு இயந்திரம் பதிவு செய்யப்பட்டிருப்பது, கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் பெயரில் எனில், எமது திணைக்களத்தினால் வழங்கப்படும் குறித்த கடிதத்தை வழங்குதல்.

4.5.7. உழவு இயந்திரத்தின் உரிமையாளரினால் உரிய ஆவணங்களை, கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொண்டு, அவற்றை மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்கு முன்வைத்து, உரிமைக் கையளிப்புச் செயற்பாட்டினை முடிவுறுத்தல்.

	மாவட்டம்	உரிமை கையளிக்கப்பட்டுள்ள உழவு இயந்திரங்களின் எண்ணிக்கை
		2018.01.01 – 2018.12.31
1	கொழும்பு	00
2	கம்பஹா	01
3	களுத்துறை	00
4	கண்டி	00
5	மாத்தளை	00
6	நுவரெலியா	00
7	காலி	01
8	மாத்தறை	00
9	அம்பாந்தோட்டை	08
10	யாழ்ப்பாணம்	05
11	கிளிநொச்சி	14
12	மன்னார்	00
13	வவுனியா	00
14	முல்லைத்தீவு	07
15	மட்டக்களப்பு	04
16	அம்பாறை	03
17	திருகோணமலை	13
18	குருநாகலை	07

19	புத்தளம்	03
20	அனுராதபுரம்	01
21	பொலொன்னறுவை	01
22	பதுளை	05
23	மொனறாகலை	06
24	இரத்தினபுரி	02
25	கேகாலை	07
	மொத்தம்	88

4.6. வருடாந்த கணக்கறிக்கைகள்

2017 வருடத்தின் வருடாந்த கணக்கறிக்கைகள் 2018.12.31 ஆந் திகதி வரையில் 01 அறிக்கைக் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், மிகுதியாகவுள்ள சகல கணக்கறிக்கைகளையும் பெற்றுக் கொள்வதற்கு மாவட்ட மட்டத்தில் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அவ் அறிக்கைகளை 2019 ஜனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

4.7. கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கணக்காய்வு ஐயவினாக்கள் 2018

கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கணக்காய்வு ஐயவினாக்கள்	உதவி ஆணையாளரின் பெயருக்கு	ஆணையாளர் நாயகத்தின் பெயருக்கு	மொத்தம்
கிடைக்கப் பெற்றவை	20	07	27
பதில் அனுப்பி வைக்கப்பட்டவை	2	0	2
பதில் அனுப்பி வைக்கப்பட வேண்டியவை	18	07	25

4.8. விசேட விவசாய அபிவிருத்தி வேலைத்திட்டம் (வடக்கு கிழக்கு மாகாணங்களின் 08 மாவட்டங்களினுள்)

விவசாய அமைச்சின் மூலம் வடக்கு கிழக்கு மாகாணங்களின் பொருட்டு 2018 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டினுள் செயற்படுத்தப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களினுள் இவ்விசேட விவசாய அபிவிருத்தி வேலைத்திட்டமும் அடங்கும். இதன் பொருட்டு 49.547 மி.ரூபா பணம் அமைச்சினால் ஒதுக்கப்பட்டதுடன், கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் செயற்படுத்தப்பட்டது.

இவ்வேலைத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட செயற்பாடுகள்,

- உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு தரமிக்க விதைகளை இலவசமாக வழங்குதல் -உளுந்து, பயறு, சோயா போஞ்சி, குரக்கன், மிளகாய்.)

- தரமிக்க நாற்றுப் பொருட்களை வழங்குதல் (பழக்கன்றகள்) பப்பாசி, வாழை, எலுமிச்சை, மாதுளை, கொய்யா, பலா, வில்வை, விளா.)
- வர்ண இலைகள் குறிகாட்டிகள் (Leaf Colour Charts) இலவசமாக வழங்குவதன் மூலம் பசளைப் பாவனையின் வினைத்திறனை அதிகரித்தல்.
- வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையாக மிளகாய் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு பயிர்ச்செய்கைப் பொதிகளை வழங்குதல்.
- வணிகப் பயிர்ச்செய்கையாக மாங்கன்றுகளை வழங்குதல்.
- கமத்தொழில் தயாரிப்புக்களை அதிகரிக்கும் பொருட்டு மானியத்தின் கீழ் சூரிய சக்தி நீர்ப்பம்பிகளை வழங்குதல்.

4.9. 2018 சிறு போகத்தின் போது மைட் புழு மற்றும் புரூக் புழுக்களினால் அழிவுகள் ஏற்பட்ட வயற்காணிகளின பொருட்டு விதை நெல் மானியம் வழங்குதல்

நெற்செய்கையில் அழிவை ஏற்படுத்தும் பிரதான இரண்டு பூச்சிகளாக மைட் புழு மற்றும் மஞ்சள் புரூக் புழுவை இனங்காணலாம். மைட் புழு மற்றும் புரூக் புழுக்களின் மிக வேகமாகப் பரவியதால், வேளாண்மைக்குப் பாரிய அழிவு ஏற்பட்டதுடன், அறுவடை கிடைக்காத காரணத்தால் கமக்காரர்கள் பாரிய துன்பத்திற்கு உள்ளாகினர். இந்நிலையின் காரணமாக அமைச்சரவையின் தீர்மானத்திற்கமைய 2018 சிறுபோகத்தின் போது இப்புழுக்களினால் அழிவு ஏற்பட்ட வயற்காணிச் சொந்தக்காரர்களின் பொருட்டு விதை நெல் மானியம் வழங்கப்பட்டது.

தற்போது பொலொன்னறுவை மாவட்டத்திற்கு மட்டும் 69.74 மி.ரூபா வழங்கப்பட்டுள்ளதுடன், மிகுதி மாவட்டங்களின் பொருட்டு பணக் கொடுப்பனவின் பொருட்டு தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும் ஒதுக்கப்பட்ட பணம் போதுமானதாக அற்ற காரணத்தால் மேலதிக ஒதுக்கீடு விவசாய அமைச்சின் செயலாளர் ஊடாக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

செலவுத் தலைப்பு	மாவட்டம்	ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டின் அளவு (மி.ரூபா)
118-02-03-20-2509	பொலொன்னறுவை, அம்பாறை	20.00
118-02-03-37-2506	பொலொன்னறுவை, குருநாகலை, பதுளை, அனுராதபுரம், வவுனியா, மன்னார், புத்தளம், மொனறாகலை, அம்பாந்தோட்டை	24.00
001-2-6-11-2509 ஜனாதிபதி செயலகம்	பொலொன்னறுவை	56.00

4.10. உணவு உற்பத்தி தேசிய வேலைத்திட்டம் "நாம் பயிரிட்டு நாமே உண்போம்" துரித கமத்தொழில் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் பழக்கிராமங்களை தாபித்தல் 2018

நாம் பயிரிட்டு நாமே உண்போம்" துரித கமத்தொழில் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் பழக்கிராமங்களைத் தாபிக்கும் வேலைத்திட்டம் 2018 வருடத்தினுள் செயற்படுத்தப்பட்டதுடன், அதன் நோக்கம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

வேலைத்திட்டத்தின் நோக்கம்:

- வட மாகாணம் தவிர்ந்த சகல கமநல சேவைகள் நிலையங்களையும் உள்ளடக்கும் வகையில் ஒவ்வொரு காலநிலை வலயங்களுக்கமைய பயிரிடக் கூடிய பழப்பயிர்ச்செய்கையை விரிவாக்கம் செய்து நாட்டில் பழ உற்பத்தியை மேம்படுத்தல்.
- இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் பழங்களின் அளவைக் மட்டுப்படுத்தி வெளிநாட்டுச் செலாவணியை சேமித்தல்.
- பயிரிடக்கூடிய தரிசான நிலங்களை வினைத்திறனான பயிர்ச்செய்கைக்கு ஈடுபடுத்தவும், பழ உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் கமக்காரர்களின் வருமான நிலையை மேம்படுத்தல், பழப்பயிர்ச்செய்கையின் பொருட்டு ஆர்வமுள்ள கமக்காரர்களுக்கு சலுகை வழங்கும் பொருட்டு வழங்கும் பொருட்டு பழக்கன்றுகளை இலவசமாக வழங்குதல், பழப்பாவனையை அதிகரிப்பதன் மூலம் மக்களின் போஷாக்குத் தன்மையை மேம்படுத்துவதும் இவ்வேலைத்திட்டத்தின் நோக்கங்களாகும்.
- இதன் பொருட் மி.ரூபா பணம் ஒதுக்கப்பட்டதுடன், கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் செயற்படுத்தப்பட்டது.

திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் மூலம் கிராம மட்டத்தில் பயனாளிகள் இனங்காணப்பட்டதுடன், அதற்கமைய, மாவட்ட மட்டத்தில் பயனாளிகளின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டு, கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகங்களின் மூலம் முறையான பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றி, விவசாயத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட நாற்றுமேடைகளிலிருந்து விவசாயத் திணைக்களத்தினால் சிபாரிசு செய்யப்பட்ட பழக்கன்றுகள் கொள்வனவு செய்யப்பட்டு அக்கன்றுகளை உரிய கமக்காரர்களுக்கு விநியோகம் செய்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

4.11. கமக்காரர்களின் ஒழுங்கமைப்பின் இடைக்காலச் சட்டம்

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் கமக்காரர்களின் ஒழுங்கமைப்புக்கள் செயற்படும் முறை, பேணப்படும் முறை, சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் உள்ளடக்கப்பட்டு கமக்காரர்களின் ஒழுங்கமைப்பின் நோக்கம், குறிக்கோள் மற்றும் செயற்பாடுகளை முறையாக நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கி கமக்காரர்களின் ஒழுங்கமைப்பின் இடைக்காலச் சட்டம் தயாரிக்கும் மாதிரியொன்று 1991 ஆம் ஆண்டு 04ம் இலக்கமுடைய கமநல சேவைகள் (திருத்தச்) சட்டத்தின் கீழ் 1991ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டிருந்தது.

2011ஆம் ஆண்டு 46 இலக்கமுடைய கமநல அபிவிருத்தி (திருத்தச்) சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 2000 ஆண்டு 46 ஆம் இலக்கமுடைய கமநல அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கமக்காரர்களின் ஒழுங்கமைப்பின் பொருட்டு மாதிரி இடைக்கால நியதிச்சட்டம் 2018 ஆம் ஆண்டு வரையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், 2018ஆம் வருடத்தின் போது புதிய சட்டத்தின் கீழ் மிக வினைத்திறனான முறையில் நடவடிக்கைகளை நிறைவேற்றும் பொருட்டு கமக்காரர்களின் இடைக்கால நியதிச்சட்டம் வெளியிடப்பட்டது.

4.12. கமத்தொழில் கொள்கைகளுக்கமைவாக கமத்தொழில் காணிகளை ஈடுபடுத்தல் மற்றும் தரிசான வயற்காணிகளை பயிரிடல்

2011ஆம் ஆண்டு 46 இலக்கமுடைய கமநல அபிவிருத்தி (திருத்தச்) சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 2000 ஆண்டு 46 ஆம் இலக்கமுடைய கமநல அபிவிருத்திச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்தி, நீண்ட காலமாக பயிரிடாமல் அல்லது பயன்மிக்கதாகப் பயிரிடப்படாதுள்ள வயற்காணிகளில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளல் இத்திணைக்களத்தின் முதன்மைக் காரியம் என்பதுடன், இதற்குரிய சட்ட ஏற்பாடுகளை நாடு முழுவதும் செயற்படுத்துவதற்கு 17/2018 என்னும் இலக்கமுடைய சுற்றுநிருபம் 2018.08.01 ஆந் திகதி வெளியிடப்பட்டு தொடர்ச்சியான செயல்முறையின் மூலம் தரிசான வயற்காணிகளைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்துவதற்கு முறையான திட்டமொன்று 2018/19 பெரும் போகம் தொடக்கம் செயற்படுத்தப்பட்டது.

மேற்படி நடைமுறை மற்றும் 2018.10.18 ஆந் திகதி தொடக்கம் 2018.10.31 வரையில் நாடாளாவீய ரீதியில் செயற்படுத்தப்பட்ட விசேட வேலைத்திட்டம் மற்றும் உணவு உற்பத்தி தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் 2018 ஆம் வருடத்தின் போது தரிசான வயற்காணிகளைப் பயிரிடல் திருப்பதிகரமான முறையில் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 16,150 ஏக்கர் வயற்காணிகளில் 14,868 துண்டங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் அனுராதபுர மாவட்டத்தில் தரிசான வயற்காணிகளினுள் எடுத்துக்கொள்ளப்படாத ஆனால் வரட்சி மற்றும் குறைவான நீர் வசதிகள் காரணமாக தொடர்ச்சியாக ஆறு போகங்கள் அளவில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியாதிருந்த 33,149 ஏக்கர் வயற்காணிகளை 2018 ஆம் ஆண்டு பெரும் போகத்தின் போது பயிரிடுவதற்கு இயன்றது திணைக்களத்திற்குக் கிடைத்த வெற்றியாகும்.

காலநிலை மாற்றத்தினால் நாட்டின் உணவு உற்பத்திக்குப் பாரிய தாக்கங்கள் ஏற்பட்ட காலகட்டத்தில் அதற்கு வெற்றிகரமாக முகம் கொடுக்கும் பொருட்டு என்னும் இலக்கமுடைய சுற்றுநிருபம் ஆந் திகதி வெளியிடப்பட்டு தரிசான வயற்காணிகளை வகைப்படுத்தியதன் ஊடாக நெற்செய்கை மேற்கொள்ளக் கூடிய இருப்பினும் வேறு கமத்தொழில் பயிர்களை பயிரிட இயலும் என இனங்காணப்பட்ட தரிசான வயற்காணிகளில், அப்பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு மக்களை ஊக்குவித்து, அதன் பொருட்டு இலகு சட்ட முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கமைய, 2,263 ஏக்கர் வயற்காணிகளில் வேறு கமத்தொழில் பயிர்களைப் பயிரிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

4.13. கிராமிய மட்டத்தில் விதை நெல் பண்ணைகள் 2018 சிறுபோகம் மற்றும் 2018/19 பெரும் போகம்

2018-2020 தேசிய பயிர்ச்செய்கைப் புரட்சி வேலைத்திட்டம் அதிமேதகு ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டதும், அதற்கமைய செயற்படும் போது, இலங்கையில் நெற்செய்கையை மேற்கொள்ளக் கூடிய தற்போது தரிசாகவுள்ள சகல வயற்காணிகளையும் நெற்செய்கையின் பொருட்டு மீண்டும் ஈடுபடுத்துவது கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு பாரிய சவாலாக அமைந்தது.

எனவே 2018 சிறு போகத்தின் போதும் மற்றும் 2018/19 பெரும் போகத்தின் போதும் இவ் இலக்கை வெற்றியுரச் செய்யும் பொருட்டு சகல விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் உத்தியோகத்தர்களினாலும் தமது பிரிவின் விதை நெல் தேவைப்பாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டு தமது அதிகாரப் பிரதேசத்திற்குப் பொருத்தமான நெல் இனத்தைத் தெரிவு செய்து விதை நெல் பண்ணையைப் பேணுதல் வேண்டும் என அறிவிக்கப்பட்டதுடன், 2018ஆம் ஆண்டின் போது அதன் முன்னேற்றம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

	மாவட்டம்	2018 சிறு போகம்		2018/19 பெரும் போகம்	
		கமக்காரர்களின் எண்ணிக்கை	பயிரிடப்பட்ட வயற்காணி ஏக்கர் அளவு	கமக்காரர்களின் எண்ணிக்கை	பயிரிடப்பட்ட வயற்காணி ஏக்கர் அளவு
01	கொழும்பு	61	97	63	99
02	கம்பஹா	215	215	90	151
03	களுத்துறை	214	233	254	254
04	கண்டி	214	173	224	204
05	மாத்தளை	155	173	17	10
06	நுவரெலியா	-	-	20	25
07	காலி	85	120	38	47
08	மாத்தறை	42	49	42	53
09	அம்பாந்தோட்டை	214	325	-	-
10	குருநாகலை	574	670	686	670
11	புத்தளம்	164	117	82	165
12	இரத்தினபுரி	155	111	130	88
13	கேகாலை	220	189	40	47
14	பதுளை	224	211.5	-	-
15	மொனறாகலை	-	-	-	-
16	அனுராதபுரம்	204	271	-	-
17	பொலொன்னறுவை	308	670.25	-	-
18	அம்பாறை	-	-	-	-
19	யாழ்ப்பாணம்	-	-	50	119
20	வவுனியா	-	-	20	15
21	திருகோணமலை	-	-	-	-
22	மட்டக்களப்பு	13	290	-	-
23	மன்னார்	-	-	-	-
24	கிளிநொச்சி	-	-	-	-
25	முல்லைத்தீவு	27	45	-	-
	மொத்தம்	**3,089**	**3,959.75**	**1,756**	**1,947**

4.14. "வயலுக்கு வெளிச்சம்" மானியப்பசளை வேலைத்திட்டம்

விவசாய அமைச்சின் மூலம் செயற்படுத்தப்படும் மானியப்பசளை வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டதன் முன்னேற்றத்தைக் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு காட்டலாம்.

- 2016 சிறு போகம் தொடக்கம் 2017/18 பெரும் போகம் வரையில் **பசளை மானியப் பண வேலைத்திட்டம்** செயற்படுத்தப்பட்டதுடன், அதற்கமைய 2017/18 பெரும் போகத்திற்குரிய பசளை மானியப் பண வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டதன் முன்னேற்றம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

4.14.1. பசளை மானியம் (பணம்) வேலைத்திட்டம் தொடர்பான தகவல்கள் - 2017/18 பெரும் போகம்

போகம்	பசளை பெற்றுக் கொண்ட கமக்காரர்களின் எண்ணிக்கை	பயிரிடப்பட்ட வயற்காணிகளின் ஹெக்டெயார் அளவு	வழங்கப்பட்ட மானியப் பணம்
2017 / 2018 **பெரும் போகம்**	880,859	634,457.00	8,004.77 **மி.ரூபா**

- 2018 சிறு போகம் தொடக்கம் மானியப் பசளை வேலைத்திட்டம் மீண்டும் செயற்படுத்தப்பட்டதுடன், அதற்கமைய, 2018 சிறு போகம் மற்றும் 2018/19 பெரும் போகங்களுக்குரிய மானியப்பசளை வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டதன் முன்னேற்றம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு காட்டலாம்.

4.14.2. "வயலுக்கு வெளிச்சம்" மானியப்பசளை வேலைத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பசளை தொடர்பான தகவல்கள்

போகம்	பசளை பெற்றுக் கொண்ட கமக்காரர்களின் எண்ணிக்கை	வயற்காணிகளின் ஏக்கர் அளவு	வழங்கப்பட்ட பசளைகளின் அளவு (மெ.தொ.)			
			யூரியா	T.S.P.	M.O.P.	மொத்தம்
2018 சிறு போகம் (2018.04.01 தொடக்கம் 2018.09.30 வரை)	578,687	868,029.33	71,403.58	17,570.26	23,982.66	112,956.50
2018/19 பெரும் போகம் (2018.10.01 தொடக்கம் 2019.03.31 வரை)	912,786	1,631,868.00	127,890.78	31,052.41	37,065.64	196,008.83

4.15. "நாம் பயிரிட்டு நாமே உண்போம்" பத்து இலட்சம் பலாக் கன்றுகள் நடும் விசேட வேலைத்திட்டம் 2018

"நாம் பயிரிட்டு நாமே உண்போம்" தேசிய கமத்தொழில் வேலைத்திட்டத்தின் கீழ் உணவுப் பாதுகாப்பினை ஏற்படுத்தும் நோக்காக் கொண்டு நாடு பூராகவும் 10 இலட்சம் பலாக்கன்றுகளை நடுதல் இவ்வேலைத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். இலங்கை ஹதபிம அதிகார சபையுடன் இணைந்து செயற்படுத்தப்பட்ட இவ்வேலைத்திட்டத்தின் பொருட்டு எமது திணைக்களத்தின் மூலம் 05 இலட்சம் பலாக்கன்றுகள் விநியோகம் செய்வதற்குத் திட்டமிடப்பட்டது.

பலாக் கன்றுகள் தயாரிக்கப்பட்டதன் முன்னேற்றம்				
தொடர் இலக்கம்	**மாவட்டம்**	**மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட இலக்கு**	**தயாரிக்கப்பட்ட கன்றுகளின் எண்ணிக்கை**	**நாட்டப்பட்டுள்ள கன்றுகளின் எண்ணிக்கை**
01	கொழும்பு	10,000	10,000	2,582
02	கம்பஹா	30,000	13,092	1,038
03	களுத்துறை	50,000	18,555	18,555
04	கண்டி	54,720	54,720	51,722
05	மாத்தளை	20,000	20,150	8,525
06	நுவரெலியா	10,200	10,200	10,200
07	குருநாகலை	60,000	56,419	56,315
08	புத்தளம்	10,000	12,763	12,763
09	காலி	50,000	30,250	30,250
10	மாத்தறை	50,000	22,600	5,200
11	அம்பாந்தோட்டை	10,000	5,700	5,700
12	இரத்தினபுரி	36,000	21,377	21,377
13	கேகாலை	50,420	28,719	26,838
14	பதுளை	20,000	20,850	20,850
15	அனுராதபுரம்	22,840	23,130	19,322
16	பொலொன்னறுவை	5,000	4,900	4,900
17	மொனறாகலை	5,000	9,000	8,800
18	அம்பாறை	5,000	4,535	4,535
19	யாழ்ப்பாணம்	5,000	4,446	4,446
20	கிளிநொச்சி	5,000	3,025	3,025
21	முல்லைத்தீவு	5,000	4,600	1,025
22	மட்டக்களப்பு	5,000	5,100	5,100
23	திருகோணமலை	5,000	5,535	5,187
24	மன்னார்	5,000	5,000	5,000
25	வவுனியா	5,000	890	890
	மொத்தம்	**534,180**	**395,556**	**334,145**

4.16. உயிர் நீத்த கமக்காரர்களின் பொருட்டு கௌரவம் செலுத்தும் வேலைத்திட்டம் - 2018

இரத்தம், வியர்வை, கண்ணீர் சிந்தி அநேகவிதமான துன்பங்களை அனுபவித்து, நாட்டிற்கு உணவை வழங்கி எம்மை விட்டுப் பிரிந்து சென்றுள்ள சகல கமக்காரர்களுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக அவர்களது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் கமக்காரர்கள் சமூகத்தினரையும் ஒன்று சேர்த்து சமய போதனைகளை வழங்குதல், பிரித் ஓதும் நிகழ்வை நடாத்துதல், தானம் வழங்குதல் நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல் போன்ற நடவடிக்கைகள்

ஒவ்வொரு மதங்களையும் அடிப்படையாகக் கொண்டு பல்வேறு சமய வழிபாடுகள் இவ்வேலைத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டது. இதன் கீழ் நாடு பூராகவும் செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை கீழே காட்டப்பட்டுள்ளது.

தொடர் இலக்கம்	மாவட்டம்	நடாத்தப்பட்ட சமய நிகழ்வுகளின் எண்ணிக்கை
1	கொழும்பு	09
2	கம்பஹா	20
3	களுத்துறை	26
4	கண்டி	45
5	மாத்தளை	05
6	நுவரெலியா	06
7	குருநாகலை	56
8	புத்தளம்	18
9	காலி	33
10	மாத்தறை	23
11	அம்பாந்தோட்டை	24
12	இரத்தினபுரி	42
13	கேகாலை	14
14	பதுளை	31
15	அனுராதபுரம்	41
16	பொலொன்னறுவை	12
17	மொனறாகலை	18
18	அம்பாறை	03
19	யாழ்ப்பாணம்	23
20	கிளிநொச்சி	08
21	முல்லைத்தீவு	17
22	மட்டக்களப்பு	17
23	திருகோணமலை	06
24	மன்னார்	12
25	வவுனியா	04
	மொத்தம்	**513**

4.17. “நாம் பயிரிட்டு நாமே உண்போம்” தேசிய கமத்தொழில் வேலைத்திட்டம் 2018 - 2020 “ஆயிரம் குளங்கள் ஆயிரம் கிராமங்கள்” வேலைத்திட்டம்

அதிமேதகு ஜனாதிபதியின் வழிநடத்தலின் கீழ் மற்றும் கௌரவ விவசாய அமைச்சரின் எண்ணக்கருவின் பிரகாரம் ‘‘நாம் பயிரிட்டு நாமே உண்போம்’’ என்னும் தொனிப்பொருளின் கீழ் செயற்படுத்தப்படும் அரசின் மூன்று வருட துரித கமத்தொழில் வேலைத்திட்டத்தின் ஒரு அங்கமாக ‘‘ ஆயிரம் குளங்கள் - ஆயிரம் கிராமங்கள்’’ வேலைத்திட்டம் இதுவரையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இதன் கீழ் அடுத்து வரும் மூன்ற வருடங்களினுள் ஆயிரம் குளங்கள் மற்றும் அதனை அண்மித்துள்ள ஆயிரம் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கு ஏற்பாடாகியுள்ளது.

தெரிவு செய்யப்பட்டுள்ள குளங்களை அண்மித்துள்ள கிராமங்களின் குளங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைப்புக்களை அபிவிருத்தி செய்து, கமத்தொழிலை மேலோங்கச் செய்தல், கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், பொது சுகாதார வசதிகளை மேம்படுத்தல் மற்றும் கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் அவர்களின் சமூக, பொருளாதார, கலாச்சார மற்றும் ஆன்மீகம் போன்றவற்றை விருத்தி செய்தல் இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும். அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பாகத் தீர்மானங்களை எடுக்கும் போது, கிராமிய மக்களின் செயற்பாடுடனான பங்குபற்றலைப் பெற்றுக்கொண்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மோலோங்கச் செய்யும் பொருட்டு கமத்தொழில் உற்பத்திகளை அதிகரித்தல், வறுமையை ஒளித்தல், சமூக சமத்துமின்மையைக் குறைத்தல், கிராமிய மக்களின் சுயசக்தியை மோலோங்கச் செய்தல், கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், கிராமிய உற்பத்திகளின் பொருட்டு விற்பனைச் சந்தையை உருவாக்குதல், கிராமிய பிரதேசங்களில் புதிய உற்பத்திகளை உருவாக்குதல், பின்தங்கிய மற்றும் அதிக அவதானம் உடைய மக்கள் பிரிவிற்கு நலன்புரிச்சேவைகளை வழங்குவதன் ஊடாக அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தல் போன்றவையும் இவ் வேலைத்திட்டத்தின் முதன்மை எதிர்பார்ப்புகளாக இருந்தது.

- கால்வாய்கள் புனரமைப்பு
- குளங்களை அண்மித்த சுற்றாடலுக்கு ஏதுவான அமைப்புக்களில் மரங்களை நடுதல்
- நுண் நிதி வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தல்
- "ஐதஅ" மகளிர் வேலைத்திட்டங்களைப் பலப்படுத்தல்
- "செழிப்பான வீட்டுத்தோட்டம்" எண்ணக்கருவைச் செயற்படுத்தல்
- "சுபர் சன் இல்லம்" வேலைத்திட்டம்
- சமூகத்தின் ஏனைய அடிப்படைத் தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்தல்
- பயிர்ச்செய்கை நிலங்களில் மண் சுகாதாரத்தை அளத்தல் மற்றும் மண் சுகாதார அட்டை அறிமுகம் செய்தல்
- நீர்த்தேக்கங்களில் நன்னீர் மீன்களை வளர்த்தல்
- கமத்தொழில் காணிகளில் வினைத்திறான பயிர்ச்செய்கை
- பயிர்களின் நீர்த்தேவைக்காக நீர்ப்பாசன நீரை வழங்குதல்
- உயிர் நீத்த கமக்காரர்களுக்கு நன்றியுடன் கௌரவிக்கும் வேலைத்திட்டம்
- கமக்காரர் அடையாள அட்டைகளை வழங்குதல்
- மானியப்பசளை வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தல்
- நீரின் தரத்தன்மையை அளத்தலின் கீழ் குளங்கள், கால்வாய்கள், பயிர்ச்செய்கை கிணறுகளின் நீரின் தரத்தன்மையை அளத்தல்
- கமக்காரர்களின் ஒழுங்கமைப்புக்களை மீள்கட்டமைப்புச் செய்தல்
- கமக்காரர்களின் ஒழுங்கமைப்புக்களின் பயிற்சி / கமத்தொழில் கருத்திட்டங்கள் தொடர்பான

பயிற்சி வேலைத்திட்டங்களைச் செயற்படுத்தல்

- கமக்காரர்களின் உற்பத்திகளை விற்பனை செய்யும் பொருட்டு விற்பனை வசதிகளை மேம்படுத்தல்
- வேறு சமூக நலன்புரி வேலைத்திட்டங்களைச் செயற்படுத்தல்

05. போக்குவரத்துப் பிரிவு

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதான காரியாலயம் மற்றும் அதன் கீழ் உள்ள மாவட்ட அலுவலகங்களின் தேவைப்பாடு மற்றும் சேவைகளை வினைத்திறனுடன் வழங்கி, நிறுவனத்தின் பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஆகக் உச்ச சேவைகளை வழங்குதல் எமது பிரிவின் பிரதான நோக்கமும் மற்றும் பொறுப்புமாகும். விசேடமாக 2018 ஆம் ஆண்டு திணைக்களத்தின் மூலம் செயற்படுத்தப்பட்ட சகல அபிவிருத்தி வேலைகள், சட்டத்தின் சட்ட ரீதியான நடவடிக்கைகளின் பொருட்டு போன்று வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் பொருட்டு கமநல வங்கிப் பிரிவின் போக்குவரத்துத் தேவைகள் வழங்கப்பட்டது. அத்துடன் நிருவாகத்தினால் பொறுப்பளிக்கப்படும் சகல உத்தியோகபூர்வ போக்குவரத்து நடவடிக்கைகளின் பொருட்டு போக்குவரத்துப் பிரிவினால் பாரிய பங்களிப்பு வழங்கப்பட்டது. கடமைகளின் பொருட்டு இலகு வாகனங்கள் (ஜீப், வான் வண்டி, மோட்டார் கார்) உட்பட லொறி, டென்வீல், ப்பிரயிம் மூவர் வண்டி மற்றும் க்கிறேன் வண்டி உட்பட போக்குவரத்தில் ஈடுபடும் திணைக்களத்திற்குச் சொந்தமான 158 அளவிலான வாகனங்கள் பயணத்தில் ஈடுபடுத்தப்பட்டதுடன், இவ் வாகனங்களில் 20 வருடங்களுக்கு கூடுதலாக பழமை வாய்ந்த வாகனங்களின் திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றி, இவ் அபிவிருத்தி மற்றும் ஏனைய செயற்பாடுகளை தடையின்றி நிறைவேற்றிக் கொள்வதற்கு வசதிகள் வழங்கியுள்ளது.

இச்செயற்பாடுகளுக்கு மேலதிகமாகப் போக்குவரத்துப் பிரிவின் பிரதான பணிகள்:

1. பிரதான காரியாலயத்தில் மற்றும் சகல மாவட்ட அலுவலகங்களில் உள்ள வாகனங்களின் திருத்தவேலைகள்.
2. வாகன விபத்து தொடர்பாக நி.பி. இற்கமைய சட்ட நடவடிக்கைகள்.
3. நட்டம் மற்றும் இழப்பு தொடர்பான பதிவேடுகளை பேணுதல்.
4. ஒதுக்கீட்டுக் கணக்கைத் தயாரித்தல்.
5. ஓட்டப் பதிவுக் குறிப்புப் புத்தகங்களின் பரிசோதனை மற்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல்.
6. கணக்காய்வு ஐயவினாவின் பொருட்டு பதில் வழங்குதல்.
7. வாகனக் காப்புறுதி.
8. இலவச வருமானவரி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளல்.
9. வருடாந்த செயற்படுத் திட்டத்தைத் தயாரித்தல்.
10. எரிபொருள் வழங்குதல், பற்றுச்சீட்டுக்களைத் தீர்த்தல்.
11. திருத்தவேலைகள் தொடர்பாக லொக் குறிப்புப் புத்தகங்களை பேணுதல்.
12. புதிய வாகனங்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
13. சாரதி/சாரதி உதவியாளர்களின் விடுமுறைகளைத் தயாரித்தல் மற்றும் மேலதிக நேர மற்றும் பிரயாணச் செலவு பத்திரங்களை பரிசீலித்தல்.
14. உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களின் பொருட்டு மாதாந்த எரிபொருள் கட்டணங்கள் செலுத்துவதற்குரிய உறுதிச்சீட்டுக்களைத் தயாரித்தல்.
15. உத்தியோகபூர்வ வாகனங்களின் பொருட்டு பெற்றுக் கொள்ளப்படும் மேலதிக எரிபொருளின் பொருட்டு விவசாய அமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
16. எரிபொருள் முற்பணம் கொடுப்பனவு மற்றும் அவற்றை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை நிறைவேற்றல்.
17. பழைய வாகனங்களை பாவனையிலிருந்து அப்புறப்படுத்தி விற்பனை செய்தல்.
18. கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினால் கையளிக்கப்படும் ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை வினைத்திறனாகவும் மற்றும் துரிதமாகவும் மேற்கொள்ளும் பொருட்டு போக்குவரத்துப் பிரிவினுள் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் கனிஷ்ட சேவை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை கீழே காட்டப்பட்டுள்ளது.

பதவி	உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை
உதவி ஆணையாளயர் (இயந்திரவியல்)	01
அபிவிருத்தி உத்தியோகத்தர்	01
பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்	02
பொது முகாமைத்துவ உதவியாளர்	03
அலுவலக உதவியாளர்	01
சாரதி	21
சாரதி உதவியாளர்	03

2018 வருடத்தினுள் போகுவரத்துப்பிரிவின் மூலம் ஈட்டிக் கொள்வதற்கு ஏற்பாடாகியிருந்த இலக்குகளாவன:

- 2018 வருடத்தினுள் பிரதான காரியாலயத்தினதும் மற்றும் சகல மாவட்ட அலுவலகங்களிலும் உள்ள வாகனங்களில் திருத்தவேலைகளை மேற்கொள்ளல்.
- இரண்டு இலட்சம் ரூபாவிற்குக் கூடுதலான திருத்தவேலைகளின் பொருட்டு விவசாய அமைச்சின் செயலாளரின் அனுமதியை துரிதமாகப் பெற்றுக் கொள்ளல்.
- வாகனங்களின் விபத்துத் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது நி.பி. இற்கமைய சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- நட்டம் மற்றும் இழப்புத் தொடர்பான பதிவேடுகளைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- ஒதுக்கீட்டுக் கணக்கைச் சரியாகத் தயாரித்தல்.
- லொக் குறிப்புப் புத்தகங்களை முறையாகப் பேணுதல்.
- சாரதிகள், சாரதி உதவியாளர்களின் ஓட்டப் பதிவேடுகள் பரிசோதனை செய்தல் மற்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல்.
- கணக்காய்வு ஐயவினாவின் பொருட்டு பதில்களைத் தயாரித்தல் மற்றும் கணக்காய்விற்குத் தேவையான தகவல்களை வழங்குவதல்.
- வாகனக் காப்புறுதியை துரிதமாகவும் முறையாகவும் மேற்கொள்ளல்.
- இலவச வருமானவரி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளல்.
- வருடாந்த செயற்படுத் திட்டத்தை அலுவலகப் பணியாளர்களின் பங்குபற்றலுடனும் மற்றும் முன்மொழிவுகளுடனும் தயாரித்தல்.
- எரிபொருள் வழங்குதல் மற்றும் துரிதமாகப் பற்றுச்சீட்டுக்களைச் செலுத்துவதற்குச் செயற்படல்.
- புதிய வாகனங்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- சாரதி/சாரதி உதவியாளர்களின் விடுமுறைகளைத் தயாரித்தல் மற்றும் மேலதிக நேர மற்றும் பிரயாணச் செலவு பத்திரங்களை பரிசீலித்தல்.
- உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களின் பொருட்டு மாதாந்த எரிபொருள் கட்டணங்கள் செலுத்துவதற்குரிய உறுதிச்சீட்டுக்களைத் தயாரித்தல்.
- உத்தியோகபூர்வ வாகனங்களின் பொருட்டு பெற்றுக் கொள்ளப்படும் மேலதிக எரிபொருளின் பொருட்டு விவசாய அமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- எரிபொருள் முற்பணம் கொடுப்பனவு மற்றும் அவற்றைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை நிறைவேற்றல்.
- பழைய வாகனங்களைப் பாவனையிலிருந்து அப்புறப்படுத்தி விற்பனை செய்தல்.

2018 வருட ஆரம்பத்தில் போக்குவரத்துப் பிரிவினால் நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்த்த மேற்படி இலக்குகள் வருட இறுதியின் போது எந்தளவிற்கு வெற்றியுரச் செய்துள்ளது என்பதனை சுருக்கமாகக் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு காட்டப்பட்டுள்ளது.

1. உத்தியோகத்தர்களின் போக்குவரத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. - கொழும்பு மாவட்டத்தினுள்ளும் மற்றும் நாடு முழுவதும்)
2. உத்தியோகத்தர்களின் போக்குவரத்தின் பொருட்டான பொது வாகன வசதிகளை வழங்குதல்.
3. குள புனரமைப்பு நடவடிக்கைகளின் பொருட்டு அதிக பாரமுள்ள புல்டோசர் மற்றும் எக்ஸ்காவேற்றர் இயந்திரங்களை எடுத்துச் செல்லல்.

4. விவசாய உபகரணங்களை விநியோகம் செய்யும் பொருட்டு போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டுள்ளது.
5. புத்தரிசி விழாவின் பொருட்டு லொறி மற்றும் ஏனைய போக்குவரத்து வசதிகள் வழங்கப்படல்.
6. புதிய 20 கெப் வண்டிகளைப் பெற்றுக் கொள்ளல்.
7. பிரதான காரியாலயத்தினதும் மற்றும் சகல மாவட்ட அலுவலகங்களிலும் உள்ள வாகனங்களில் திருத்தவேலைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
8. இரண்டு இலட்சம் ரூபாவிற்குக் கூடுதலான திருத்தவேலைகளின் பொருட்டு விவசாய அமைச்சின் செயலாளரின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.
9. வாகனங்களின் விபத்துத் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது நி.பி. இற்கமைய சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
10. நட்டம் மற்றும் இழப்புத் தொடர்பான பதிவேடுகளைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
11. ஒதுக்கீட்டுக் கணக்கைச் சரியாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.
12. லொக் குறிப்புப் புத்தகங்களை முறையாகப் பேணப்பட்டிருத்தல்.
13. சாரதிகள், சாரதி உதவியாளர்களின் ஓட்டப் பதிவேடுகள் பரிசோதனை செய்தல் மற்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.
14. கணக்காய்வு ஐயவினாவின் பொருட்டு பதில்களைத் தயாரித்தல் மற்றும் கணக்காய்விற்குத் தேவையான தகவல்களை வழங்கப்பட்டுள்ளது.
15. வாகனக் காப்புறுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
16. இலவச வருமான வரி அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.
17. வருடாந்த செயற்படுத் திட்டத்தை அலுவலகப் பணியாளர்களின் பங்குபற்றலுடனும் மற்றும் முன்மொழிவுகளுடனும் தயாரிக்கப்பட்டுள்ளது.
18. எரிபொருள் வழங்கப்பட்டு பற்றுச்சீட்டுக்களைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
19. சாரதி/சாரதி உதவியாளர்களின் விடுமுறைகளைத் தயாரித்தல் மற்றும் மேலதிக நேர மற்றும் பிரயாணச் செலவு பத்திரங்களை பரிசீலிக்கப்பட்டுள்ளது.
20. உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களின் பொருட்டு மாதாந்த எரிபொருள் கட்டணங்கள் செலுத்துவதற்குரிய உறுதிச்சீட்டுக்களைத் தயாரிக்கப்பட்டுள்ளது.
21. உத்தியோகபூர்வ வாகனங்களின் பொருட்டு பெற்றுக் கொள்ளப்படும் மேலதிக எரிபொருளின் பொருட்டு விவசாய அமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
22. எரிபொருள் முற்பணம் கொடுப்பனவு மற்றும் அவற்றைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
23. பழைய வாகனங்களை பாவனையிலிருந்து அப்புறப்படுத்தி விற்பனை செய்தல்.

2018 வருடத்தினுள் செயற்படு திட்டத்திற்கமைய வருடத்தினுள் ஈட்டிக் கொள்வதற்குரிய இலக்கினை 90% அளவில் நிறைவேற்றிக் கொள்வதற்கு இயலுமாகவிருந்தது.

06. சட்டப்பிரிவு

இலங்கையின் கமத்தொழில் காணிகளில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக் கொண்டு இலங்கை கமக்காரர்கள் சமூகத்தினரின் நிலைபேறான அபிவிருத்தியின் பொருட்டு இட்டுச் செல்லும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் குறிக்கோளை உச்ச நிலைக்கு கொண்டு வருவதற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முறைகளில் சட்டப் பிரிவு இப் பணிகளுக்குப் பங்களிப்புச் செய்கின்றது.

1. இலங்கையின் கமத்தொழில் கொள்கைகளைத் தயாரிப்பதற்கு கமநல அபிவிருத்திச் சட்டம், அதற்குரிய ஒழுங்கு விதிகளைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களை அமைச்சிற்கு வழங்குதல் மற்றும் ஒத்துழைப்பை வழங்குதல்.
2. வாரப்பயிர்ச்செய்கையாளர்கள் மற்றும் சொந்தக் காணி உரிமையாளர்களிடையே ஏற்படும் கமத்தொழில் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கான சட்ட ரீதியான வழிகாட்டல்கள்.
3. பயிர்ச்செய்கை உரிமைகளைப் பாதுகாத்தல்.
4. கிராமிய நீர்ப்பாசனங்களை பாதுகாத்தல் மற்றும் பயிர்ச்செய்கை விதிமுறைகளை செயற்படுத்துவதற்கு சட்ட ரீதியான பாதுகாப்பை ஏற்படுத்துதல்.
5. திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் மற்றும் நிறுவனங்களின் பொருட்டு சட்ட ரீதியான ஆலோசனைகளை வழங்குதல்
6. கமநல சட்டத்தை செயற்படுத்தும் பொருட்டு நீதிமன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை வினைத்திறனாகவும் மற்றும் துரிதமாகவும் மேற்கொள்ளும் பொருட்டு சட்டப் பிரிவினுள் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் கனிஷ்ட சேவை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை கீழே காட்டப்பட்டுள்ளது.

	பதவி	**உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை**
1.	உதவி ஆணையாளயர் (சட்டம்)	01
2.	சட்ட உதவியாளர்	01
3.	கிளைத்தலைவர்	01
4.	அபிவிருத்தி உத்தியோகத்தர்	02
5.	பொது முகாமைத்துவ உதவியாளர்	05
6.	நிலைய முகாமைத்துவ உதவியாளர்	03
7.	அலுவலக உதவியாளர்	02

6.1. 2011 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்கமுடைய கமநல அபிவிருத்திச் சட்டத்தினால திருத்தம் செய்யப்பட்ட 2000 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்கமுடைய கமநல அபிவிருத்திச் சட்டம்.

2000 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்கமுடைய சட்டத்திற்கு 2011 ஆம் ஆண்டு இலக்கம் 46 உடைய திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டதுடன், அச் சட்டம் 22.11.2011 ஆந் திகதி தொடக்கம் செயற்படுத்தப்பட்டதுடன், அதன் மூலம் வாரப்பயிர்ச்செய்கையாளர்களின் அடுத்துவருபவர் தொடர்பாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. 18.08.2000 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னரான திகதிகளில் எழுத்து மூலமோ அல்லது வாய் மூல ஒப்பந்ததின் பேரில் வாரப்பயிர்ச்செய்கை உரிமையுள்ள ஒருவர் இறந்த போன சந்தர்ப்பத்தில் வாரப்பயிர்ச்செய்கை உரிமை உரித்துடையதாகுதல் வேண்டும் எனவும் வாரப்பயிர்ச்செய்கையாளர் முழுமையான பெலவீனமான ஒரு நிலைமைக்கு வந்ததும் வாரப்பயிர்ச்செய்கை பதிலீட்டை கையளிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள 2000 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்கமுடைய கமநல அபிவிருத்திச் சட்டம் மற்றும் 2011 ஆம் ஆண்டு இலக்கம் 46 உடைய (திருத்தச்) சட்டத்தை செயற்படுத்துவதற்குத் தேவையாகவுள்ள ஒழுங்கு விதிகள் தயாரிக்கப்பட்டு தற்போது செயற்படுத்தப்படுவதுடன், தற்காலத்தில் மிகவும் முக்கியத்துவம் மிக்கதான கமத்தொழில் காணிகளை வினைத்திறமையான முறையில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்துவதற்கான சட்டத்தின் 22, 23, 25 மற்றும் 26 ஆம் பிரிவுகளைச் செயற்படுத்துவதற்கான ஒழுங்கு விதிகளைத் தயாரித்து, தற்போது பயிரிச் செய்கையை மேற்கொள்ளாது தரிசாகவுள்ள அதிகளவிலான வயற்காணிகள் பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்தப்படுகின்றது. அத்துடன் கமநல அபிவிருத்திச் சட்டத்தில் மிகுதியாகவுள்ள ஒழுங்கு விதிகள் மும்மொழியிலும் தயாரிக்கப்பட்டு தற்போது சட்ட வரைவாளரிடம் அனுப்புவதற்குத் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

2018 வருட ஆரம்பத்தில் சட்டப் பிரிவினால் நிறைவேற்றிக் கொள்வதற்குரிய இலக்குகள் வருட இறுதியின் போது எந்தளவிற்கு வெற்றியுரச் செய்துள்ளது என்பதனைச் சுருக்கமாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு காட்டப்பட்டுள்ளது.

6.2 விவசாயிகளின் பிணக்குகளைத் தீர்த்தல் (கமநல நியாயச் சபை/மீளாய்வுச்சபை)

2011 ஆம் ஆண்டு இலக்கம் 46 உடைய சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 2000 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்கமுடைய கமநல அபிவிருத்திச் சட்டத்திற்கமைய சொந்தக் காணிப் பயிர்ச்செய்கையாளர்களினால் வாரப்பயிர்ச் செய்கையாளர்களை நீக்குதல், வாரப்பயிர்ச்செய்கையாளர்களினால் சொந்தக் காணிக் காரர்களுக்கு குத்தகையை செலுத்தாது ஊதாசீனம் செய்தல் உட்பட கமநல அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் உள்ள 11 பிரிவுகள் தொடர்பாக கமநல நியாயச் சபை மூலம் விசாரணைகள் நடாத்துதல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், கமநல நியாயச் சபைச் சபையின் தீர்மானத்திற்கு எதிராக மனுக்களை சமர்ப்பிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள மீளாய்வுச் சபையை செயற்படுத்துவதன் பொருட்டுத் தேவையான ஒழுங்கு விதிகள் தயாரிக்கப்பட்டு, கமநல நியாயச் சபைகள் மற்றும் மீளாய்வுச்சபை தற்போது செயற்பட்டு வருகின்றது.

கமநல நியாய சபையின் பொருட்டு கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகள்

நியாய சபைக்கு கிடைக்கப் பெற்றுள் ளமுறைப்பாடுகளின் எண்ணிக்கை	விடுக்கப்பட்டுள்ள அழைப்புக் கடிதங்களின் எண்ணிக்கை	நடைபெற்றுள்ள விசாரணைகளின் எண்ணிக்கை	நடைபெற்று முடிவுற்றுள்ள விசாரணைகளின் எண்ணிக்கை	**2018.12.31** திகதியில் மிகுதியாகவுள்ள விசாரணைகள
11811	3943	3138	4820	6991

2018.12.31 ஆந் திகதிக்கு மீளாய்வுச் சபையின் முன்னேற்றம்

மேன்முறையீட்டு கோவைகளின் எண்ணிக்கை	**விசாரணையின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டுள் ள கோவைகளின் எண்ணிக்கை**	**கட்டளைகள் வழங்கப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை**	**விலக்கிக் கொள்வதற்கு விண்ணப்பித்துள்ள வழக்குகள்**	**தொடர் நடவடிக்கைகளின் பொருட்டு உள்ள வழக்குகள்**
450	103	101	09	237

6.3 கமக்காரர்களின் முறைப்பாடு (பொது)

கமநல அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகள்.

2018 ஆம் வருடத்தினுள் கிடைக்கப் பெற்றவை	2018.01.01 ஆந் திகதிக்கு மிகுதி	2018 வருடத்தினுள் தீர்க்கப்பட்டவை	2018.12.31 ஆந் திகதிக்கு மிகுதி
13422	13808	6539	20691

6.4. நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு முன்னிற்றல்

சட்டமாதிபரின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

நீதிமன்றம்	முறைப்பாடுகளின் எண்ணிக்கை
உயர் நீதிமன்றம்	**03**
மேல் முறையீட்டு நீதிமன்றம்	**13**
மாவட்ட நீதிமன்றம்	**10**
மேல் நீதிமன்றம்	**41**
நீதவான் நீதிமன்றம்	**08**
மொத்தம்	**75**

6.5 வயற்காணிகளை அனுமதியின்றி நிரப்புதல்

வயற்காணிகளை அனுமதியின்றி நிரப்புதல் தொடர்பாக மாவட்ட மட்டத்தில் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுத்தல். 2018 வருடத்தினுள் முன்னேற்றம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

- அனுமதியின்றி நிரப்புதல்/நிர்மாணத்திற்கான தடை உத்தரவு பெற்றுக் கொண்ட எண்ணிக்கை
  - (33 வது பிரிவு) - **306**
- குற்றத்திற்கு தண்டனை வழங்குதல் மற்றும் பழைய நிலைக்கு உருவாக்குதல்
  - **(**32 வது பந்தி) – **290**
- முடிவுற்ற வழங்குகளின் எண்ணிக்கை - **195**

6.6. கமத்தொழில் காணி இடாப்புத் தொடர்பான செயற்பாடுகள்

கமநல அபிவிருத்திச் சட்டத்தை செயற்படுத்தும் போது மேற்படி சட்டத்தின் 53 வது பிரிவிற்கமைய கமத்தொழில் காணி இடாப்புத் தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை செயற்படுத்தல் மற்றும் அந்நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் முக்கியமான விடயமாகும். நாட்டிலுள்ள சகல கமநல சேவைகள் நிலையங்களிலுமுள்ள கமத்தொழில் காணி இடாப்புக்கள் (மேட்டு/சேற்று) பொது மக்களின் பரிசீலனைக்காக ஒவ்வொரு வருடத்திலும் இரு தடவைகள் அதாவது ஜனவரி மற்றும் யூலை

மாதங்களில் திறந்து வைப்பதாக பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படுகின்றது. இவ்வாறு திறந்து வைத்ததன் பின்னர் அது தொடர்பாக கிடைக்கப்பெறும் வேண்டுகோள்களைப் பரிசீலனை செய்து பார்த்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் கமநல சேவைகள் நிர்வாகக் குழுக்களின் கடமையாகும். மேற்படி செயற்பாட்டின் முன்னேற்றம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளது.

கமத்தொழில் காணி இடாப்புத் திருத்தம்

2018 வருடத்தினுள் கிடைக்கப் பெற்றவை	முன்னைய வருடங்களின் மிகுதி	விசாரணை நடாத்தப்படவுள்ள மொத்த எண்ணிக்கை	விசாரணை முடிவுற்றவை	மிகுதியாவுள்ள எண்ணிக்கை
25258	9423	34681	11667	23014

6.7. சட்ட ஆலோசனை செயற்பாடுகள்

திணைக்கள உத்தியோகத்தர்களை எதிராளிகளாக குறிப்பிட்டு நீதிமன்றத்தில் தொடரப்படும் வழக்குகள் தொடர்பாக சட்டமாதிபரின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்தில் தோன்றுவதற்கு ஏற்படுகின்றது. சில காரணங்களின் நிமித்தம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மூலம் தயவை எதிர்பார்ப்பவர்களின் பொருட்டு தேவையான ஒத்துழைப்பு வழங்குதலும் அதன் பொருட்டு முன்நிற்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றது.

நிருவாக நடவடிக்கைகள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர், மனித உரிமைகள் ஆணைக்குழு என்பனவற்றின் முன் தேவையான சந்தர்ப்பங்களில் தோன்றி காரணங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றது. அவற்றின் விபரங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் (2018)	02
மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் (2018)	02
பாராளுமன்ற ஆலோசனை நிர்வாகக் குழுவிற்கு பதில் வழங்கல் (2018)	05
சிவில் வழக்கு தண்டக் கோவை (461 பிரிவு) (2018)	14
இலஞ்ச ஊழல் விசாரணைக் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் (2018)	01

மேற்குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2018 வருடத்தினுள் செயற்படு திட்டத்திற்கமைய வருடத்தினுள் ஈட்டிக் கொள்வதற்குரிய இலக்கினை 90% அளவில் நிறைவேற்றிக் கொள்வதற்கு இயலுமாகவிருந்தது.

07. கணக்குப் பிரிவு

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கணக்குப் பிரிவு பிரதான 04 பிரிவுகளைக் கொண்டுள்ளது. நிதிப் பிரிவு, கொடுப்பனவு மற்றும் சாரம்சப் பிரிவு, சம்பளம் மற்றும் முற்பணக் கணக்குப் பிரிவு மற்றும் பெறுகை நடவடிக்கைப் பிரிவு என்னும் நான்கு பிரிவுகளாகும். நிதிப் பிரிவினால் வருடாந்த வரவுசெலவுப் பதிவேடுகளைத் தயாரித்தல், கட்டுநிதித் தேவைப்பாடுகளைப் பெற்றுக் கொள்ளல், திறைசேரியுடன் உரிய இணைப்பு செயற்பாடுகளை ஏற்படுத்தி நிறைவேற்றல் மற்றும் வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கைத் தயாரிப்பதற்குரிய கடமைகளை நிறைவேற்றுகின்றது. கொடுப்பனவு மற்றும் சாராம்சப் பிரிவு திணைக்களத்தின் சகல கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், 25 மாவட்ட அலுவலகங்களின் கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல், மாதாந்தக் கணக்குப் பொழிப்புக்களை ஒன்றிணைத்து திறைசேரிக்கு சமர்ப்பித்தல் மற்றும் பொது வைப்புக் கணக்குகளின் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. சம்பளம் மற்றும் முற்பணக் கணக்குப் பிரிவினால் பிரதான காரியாலயத்தின் சம்பளம் மற்றும் முற்பணக் கொடுப்பனவுகள் மற்றும் 25 மாவட்ட அலுவலகங்களுக்கும் உரிய சம்பளம் மற்றும் முற்பணக் கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. பெறுகைப் பிரிவு பிரதான காரியாலயத்தின் பெறுகை மற்றும் களஞ்சிய நடவடிக்கைகள் மற்றும் 25 மாவட்ட அலுவலகங்களுக்கும் உரிய பெறுகை மற்றும் களஞ்சிய நடவடிக்கைகளை நிருவகித்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை நிறைவேற்றுகின்றது.

கடமைப் பொறுப்புக்கள்

1. வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தினால் அதிகாரம் கிடைக்கப் பெற்ற செலவுகளை முகாமைப்படுத்தலின் பொருட்டு நிதிப் பிரமாணம், சட்டங்கள், சுற்றுநிருபங்களுக்கு அமைவாக நடவடிக்கைகளை மேற்கொண்டு நாளாந்த, மாதாந்த மற்றும் வருடாந்த கணக்கு அறிக்கைகளை உரிய விதத்தில் பேணுதல்.
2. வருடாந்த செலவு மற்றும் வரவு மதிப்பீடுகளைத் தயாரித்தல்.
3. சொத்துக்களின் முகாமைத்துவம்.
4. திணைக்களத்தின் பிரதான காரியாலயம் மற்றும் மாவட்ட அலுவலகங்களின் சம்பளக் கடன் முற்பணம், பொது வைப்புக்கள் உட்பட செலவு, மூலதன மற்றும் மீட்டெழும் கொடுப்பனவுகளின் நடவடிக்கைகளை நிறைவேற்றல் மற்றும் செலவுகளை முகாமைப்படுத்தல்.
5. திணைக்களத்தில் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் பெறுகைக் குழுக்களை நியமித்தல் மற்றும் பெறுகை நடவடிக்கைகளை நிறைவேற்றல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
6. அரச உத்தியோகத்தர்களின் முற்பண "B" கணக்கில் கடன் கொடுப்பனவுகள் அவற்றை உரிய முறையில் அறவிடல் மற்றும் உரிய அறிக்கைகள் மற்றும் கணக்குகளைப் பேணுதல்.
7. திணைக்களத்தின் மாதாந்த மற்றும் வருடாந்த கணக்குகளைத் தயாரித்தல் மற்றும் உரிய நேரத்திற்கு உரிய நிறுவனங்களுகச் சமர்ப்பித்தல்.
8. திணைக்களம் தொடர்பாக பொதுக் கணக்குக் குழுவிற்குச் சமர்ப்பிப்தற்குத் தேவையான தகவல்களைச் சமர்பித்தல் மற்றும் அதற்குரிய நடவடிக்கைகளை நிறைவேற்றல்.
9. கமநல அபிவிருத்தி நிதியத்திற்குரிய வருடாந்த வரவுசெலவு மதிப்பீடுகளைத் தயாரித்தல், வரவு மற்றும் செலவை முகாமைப்படுத்தல் மற்றும் இறுதிக் கணக்கறிக்கையைத் தயாரித்தல்.
10. கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் பெயரில் கிடைக்கப் பெறும் சகல கணக்காய்வு ஐயவினாக்களின் பொருட்டு பதில் வழங்குதல்.

7.1 வருடத்தின் செயலாற்றுத் திறன்

இவ் வருடத்தில் இயக்க மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டம் ஆகிய இரு வேலைத்திட்டங்களின் பொருட்டு திணைக்களத்திற்கு 9,616.89 மி.ரூபா மொத்த ஒதுக்கீடு பொது திறைசேரியினால் ஒதுக்கப்பட்டிருந்தது. இவ் ஒதுக்கீட்டில் 6,827 மி.ரூபா மீண்டெழும் செலவின் பொருட்டு என்பதுடன், 2,789.89 மி.ரூபா மூலதனக் கருத்திட்டங்களின் பொருட்டாகும். மீண்டெழும் மற்றும் மூலதன ஒதுக்கீடுகள் வருடத்தினுள் பயன்படுத்தப்பட்ட முறை கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

விபரம்	தேறிய ஒதுக்கீடு (மி.ரூபா)	வருடாந்தச் செலவு (மி.ரூபா)	ஒதுக்கீட்டு மிகுதி (மி.ரூபா0	தேறிய ஒதுக்கீட்டு சமமாக வருடாந்த செலவின் % என
மீண்டெழும்	**6827.00**	**6660.00**	**167.00**	**97.55**
1-1 இயக்கச் செயற்பாடுகள்	**487.42**	**394.81**	**92.61**	**81.00**
தனிநபர் சம்பளம்	388.06	336.13	**51.93**	**86.62**
ஏனயவை	99.36	58.67	**40.69**	**59.05**
2-2 அபிவிருத்தி செயற்பாடுகள்	**6339.58**	**6265.19**	**74.39**	**98.83**
தனிநபர் சம்பளம்	6073.00	6011.86	**61.14**	**98.99**
ஏனயவை	266.58	253.33	**13.25**	**95.03**
மூலதனம்	**2789.89**	**1325.53**	**1464.36**	**47.51**
1-1 இயக்கச் செயற்பாடுகள்	**91.60**	**51.59**	**40.01**	**56.32**
கட்டடங்கள் புனரமைப்பு	66.00	28.37	**37.63**	**42.98**
வாகனப் புனரமைப்பு	18.00	17.84	**0.16**	**99.11**
தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்	4.50	2.84	**1.66**	**63.11**
குத்தகை வாகனங்களின் பொருட்டு கடன் பணத்தை மீளச் செலுத்துதல்	0.60	0.60		**100.00**
பயிற்சி மற்றும் ஆற்றல் அபிவிருத்தி	2.50	1.93	**0.57**	**77.20**
2-2 அபிவிருத்திச் செயற்பாடுகள்	**2698.29**	**1273.94**	**1424.35**	**47.21**
கட்டடங்கள் புனரமைப்பு	235.49	99.62	**135.87**	**42.30**
இயந்திரங்கள் புனரமைப்பு	14.13	11.67	**2.46**	**82.59**
வாகனப் புனரமைப்பு	8.00	7.02	**0.98**	**87.75**
தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்	22.10	18.02	**4.08**	**81.54**

விபரம்	தேறிய ஒதுக்கீடு (மி.ரூபா)	வருடாந்தச் செலவு (மி.ரூபா)	ஒதுக்கீட்டு மிகுதி (மி.ரூபா)	தேறிய ஒதுக்கீட்டு சமமாக வருடாந்த செலவின் % என
கட்டட நிர்மாணம்	39.01	26.98	**12.03**	**69.16**
தரிசு நெற்காணிகள் பயிரிடல்	55.00	16.08	**38.92**	**29.24**
சிறிய நீர்ப்பாசன புனரமைப்பு	2024.56	1050.81	**973.75**	**51.90**
குள அருவிக் கருத்திட்டம்	300.00	43.74	**256.26**	**14.58**

2018 வருடத்தில் மூலதன செலவின் பொருட்டு திணைக்கள செலவுத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள 2,789.89 மி.ரூபாவிற்கு மேலதிகமாக விவசாய அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் 3,144.90 மி.ரூபாவும், உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் 104.23 மி.ரூபாவும், தேசிய ஒருமைப்பாடு மற்றும் சகவாழ்வு இராஜங்க அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் 501.07 மி. ரூபாவும், ஜனாதிபதி செயலகத்தின் ஒதுக்கீட்டின் கீழ் 58.26 மி.ரூபாவும், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி மற்றும் கிராமியப் பொருளாதாரம் தொடர்பான அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் 19.85 மி.ரூபாவுமாக 3,828.31 மி.ரூபா கிடைக்கப் பெற்றதுடன், அதற்கமைய 2018 வருடத்தில் கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குக் கிடைக்கப் பெற்ற 6,618.20 மி.ரூபா மூலதன ஒதுக்கீட்டின் கீழ் நாட்டின் 25 மாவட்ட அலுவலகங்களுக்கும் பங்களிப்புச் செய்யும் வகையில் நாட்டின் அபிவிருத்தி பொருட்டு உபயோகிக்கப்பட்டது.

2018 வருடத்தின் போது திணைக்கள மூலதனச் செலவு விடயங்களின் நிதி முன்னேற்றம் 47.83% ஆக இருந்தது. வருட இறுதியில் கொடுப்பனவு செய்யும் பொருட்டு போதுமானளவு கட்டுநிதி கிடைக்கப் பெறாமை இதற்கு காரணமாக அமைந்தது.

அத்துடன், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் கீழ் பட்டதாரிப் பயிலுனர்களின் பயிற்சியின் பொருட்டு 9.32 மி.ரூபா ஒதுக்கீட்டுப் பணத்தில் 98.53% வீதம் பயன்படுத்தப்பட்டது.

கணக்குப் பிரிவின் அலுவலக ஆளணியினரைச் சிறப்புடன் செயற்படச் செய்து ஒதுக்கீடுகளை மாவட்ட அலுவலகங்களுக்கிடையில் பகிர்ந்தளித்து, நாடு பூராகவும் உள்ள அலுவலகங்களின் நிதி முகாமைத்துவத்தினைச் சிறப்பாக நிறைவேற்றிக் கொள்ள இயன்றது இவ் ஆண்டில் நாம் ஈட்டிக் கொண்ட மாபெரும் வெற்றியாகும்.

7.2 அரச உத்தியோகத்தர்களின் முற்பண "B" கணக்கு இலக்கம் 281011/281012

	செலவின் ஆகக் கூடிய எல்லை மி.ரூபா	வரவுகளில் ஆகக் கூடிய எல்லை மி.ரூபா	பற்று நிலுவைகளின் ஆகக் கூடிய எல்லை மி.ரூபா
ஒதுக்கீட்டுச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எல்லை	295.32	225.00	600.00
வருடத்தின் உண்மையான பெறுமதிகள்	296.22	257.84	444.64

2018 ஆம் வருடத்தினுள் விழா முற்பணமாக 112 மி.ரூபாவும், விசேட முற்பணமாக 37.6 மி.ரூபாவும், இடர் கடனாக 145.72 மி.ரூபாவும் உத்தியோகத்தர்களிடையே வழங்கப்பட்டுள்ளது.

08. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

இத் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு அறிக்கையிட்டு பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் 31 உத்தியோகத்தர்கள் 2018 ஆண்டில் சேவையில் ஈடுபட்டுள்ளனர். 19 மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் கமநல சேவைகள் குழுக்கள், கமநல சேவைகள் குழு, கமநல வங்கி முன்னோடிக் கருத்திட்டங்கள் மற்றும் விசேட பரிசோதனைக் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விபரங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

தொ. இல.	கணக்காய்வுத் திட்டத்திற்கமைய கணக்காய்வு செய்யப்படும் பிரிவுகள்	கணக்காய்வுத் திட்டத்திற்கமைய கணக்காய்வுகளின் எண்ணிக்கை	வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுகளின் எண்ணிக்கை
01	பிரதான காரியாலயத்தின் நிறுவன நடவடிக்கைகள்	03	00
02	பெறுகை நடவடிக்கைகள்	10	12
03	கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகங்களின் நிருவாக நடவடிக்கைகள் மற்றும் கருத்திட்டங்களின் பரிசோதனை	03	12
04	பணம் மற்றும் கணக்குகள் - கமநல சேவைகள் நிலையங்களின் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் கணக்குகள்	144	46
05	கமநல வங்கிகளின் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் கணக்குகள்	82	31
06	கமநல அபிவிருத்தி நிதியத்தின் வரவு செலவு	01	00
07	மனுக்கள் மற்றும் விசேட பரிசோதனைகள்	கிடைக்கப் பெறுவதற்கமைய	10
08	கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள்	04	04
09	நிலைய இறுதிக் கணக்குப் பரிசோதனை	05	00
	மொத்தம்	**252**	**115**

மாவட்டங்களுக்கமைய கமநல சேவைகள் குழுக்கள், கமநல வங்கி முன்னோடிக் கருத்திட்டங்களின் கணக்காய்வு மற்றும் மேற்கொள்ளப்பட்டுள்ள விசேட பரிசோதனைகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

தொ.இல.	மாவட்டம்	மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகளின் எண்ணிக்கை		மேற்கொள்ளப்பட்ட விசேட பரிசோதனைகள்	மொத்தம்
		கமநல சேவைகள் குழு	கமநல வங்கி முன்னோடிக் கருத்திட்டம்		
1	கொழும்பு	01	02	0	03
2	கம்பஹா	05	05	0	10
3	களுத்துறை	04	01	0	05
4	காலி	01	01	03	05
5	மாத்தறை	05	0	01	06

தொ.இல.	மாவட்டம்	மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகளின் எண்ணிக்கை		மேற்கொள்ளப்பட்ட விசேட பரிசோதனைகள்	மொத்தம்
		கமநல சேவைகள் குழு	கமநல வங்கி முன்னோடிக் கருத்திட்டம்		
6	அம்பாந்தோட்டை	01	02	0	03
7	இரத்தினபுரி	03	01	02	06
8	கேகாலை	01	0	0	01
9	குருநாகலை	05	03	0	08
10	புத்தளம்	02	01	0	03
11	கண்டி	05	04	01	10
12	நுவரெலியா	04	01	01	06
13	பதுளை	04	08	0	12
14	மொனறாகலை	0	03	0	03
15	அனுராதபுரம்	06	03	0	09
16	பொலொன்னறுவை	05	01	0	06
17	மாத்தளை	04	02	01	07
18	அம்பாறை	01	02	03	06
19	திருகோணமலை	0	0	01	01
	மொத்தம்	**57**	**40**	**13**	**110**

கமநல சேவைகள் குழுக்கள், கமநல வங்கி முன்னேடிக்கருத்திட்டம் மற்றும் விசேட பரிசோதகளுக்கு மேதிகமாகக் கீழ் குறிப்பிட்படபபட்டுள்ள செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தொடர் இலக்கம்	மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள்	மேற்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுகளின் எண்ணிக்கை
01	மாவட்ட அலுவலகங்கள்	12
02	கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள்	04
03	பெறுகைகள்	12
மொத்தம்		**28**

பிரதான உள்ளகக் கணக்காய்வாளரின் இடமாற்றம் காரணமாக 02 மாதங்கள் கணக்காய்வுப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு முடியவில்லை. அத்துடன் கணக்காய்வுத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள சில இலக்குகளுக்களை மிஞ்சி கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கு ஏற்பட்டதால், ஒட்டு மொத்த இலக்கை நெருங்குவதற்கு முடியாது போயுள்ளது.

09. விளைவுப் பெருக்க மற்றும் விற்பனைப் பிரிவு

" இலங்கை வாழ் கமக்காரர் சமூகத்தினரதும் மற்றும் சகல கமத்தொழில் காணிகளில் நிலைபேறான அபிவிருத்தி " எனும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் நோக்கை ஈட்டிக் கொள்ளும் பொருட்டு விளைவுப் பெருக்கம் மற்றும் விற்பனைப் பிரிவிற்கு கையளிக்கப்பட்டிருப்பது, விசேடமான கடமைப் பொறுப்புக்களாகும்.

அதற்கமைய இலங்கையினுள் உள்ள கமத்தொழில் காணிகளிலிருந்து ஆகக் கூடிய உச்ச விளைவைப் ஈட்டிக் கொள்ளும் பொருட்டு 2018 ஆம் ஆண்டு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றும் நடவடிக்கைகள் எம்மால் நிறைவேற்றப்பட்டது.

15/2012 என்னும் இலக்கமுடைய சுற்றுநிருபம்

2012 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட 15/2012 என்னும் இலக்கமுடைய சுற்றுநிருபத்தின் பிரகாரம் தரிசான நெற்காணிகளில் குறுகிய காலப் பயிர்களை செய்கை பண்ணுவதற்கும் மற்றும் நன்னீர் மீன் வளர்ப்பினை அதிகளவில் பிரபலியப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், இதன் பொருட்டு மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதி/உதவி ஆணையாளர்கள் இடைவிடாது அறிவூட்டப்பட்டதுடன், குறித்த அனுமதியை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

4/2009 என்னும் இலக்கமுடைய சுற்றுநிருபம்

4/2009 என்னும் இலக்கமுடைய சுற்றுநிருபத்தை அடிப்படையாகக் கொண்டு வினைத்திறனான முறையில் வயற்காணிகளில் பயிர்ச்செய்கையின் பொருட்டு வயற்காணிகளை தயார் செய்வதற்கு அனுமதி வழங்குவதற்கும், கமத்தொழில் காணிகளில் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்குடன் விவசாய வீதிகள் அமைக்கும் பொருட்டு விடுக்கப்பட்ட வேண்டுகோள்களுக்குத் தேவையான அனுமதியினை துரிதமாக வழங்குவதற்கும் 2018 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. (இணைப்பு 17).

அலுவலக ஆளணியினர்

பதவி	உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை
01. உதவி ஆணையாளர் (விளைவுப் பெருக்கம் மற்றும் விற்பனை)	01
02. கிளைத் தலைவர் (விளைவுப் பெருக்கம் மற்றும் விற்பனை)	01
03. அபிவிருத்தி உத்தியோகத்தர்	01
04. பட்டதாரி பயிலுனர்	02
05. பொது முகாமைத்துவ உதவியாளர் (III வகுப்பு)	05
06. கமநல சேவைகள் நிலைய முகாமைத்துவ உதவியாளர்	01
07. அலுவலக உதவியாளர்	02

10. கமநல வங்கி (முன்னேடிக்) கருத்திட்டம்

10.1. கமநல வங்கியின் நோக்கம்

" இலங்கை வாழ் கமக்காரர் சமூகத்தின் நிலைபேறான அபிவிருத்தியை உறுதிப்படுத்தும் நிதி ரீதியான கலாச்சாரம் "

10.2. கமநல வங்கியின் பணி

"சுய சக்தியுடையதான அபிமானம் மிக்க கமக்காரர் சமூகத்தை கட்டியெழுப்புவதற்குத் தேவையான நிதி ரீதியான பலத்தை அச்சமூதாயத்தினுள் ஸ்தாபிப்பதற்காக கமக்காரர்களை ஒழுங்கமைத்தல், சக்தியையும் பலத்தையும் உண்டு பண்ணல், நிறுவன கட்டமைப்புக்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் வசதிகளை ஏற்படுத்துதல்."

10.3. கமநல வங்கியின் குறிக்கோள்கள்

1. கிராமிய விவசாயிகளின் வறுமையை ஒழிப்பதற்கு அவர்களுக்குத் தேவையான மூலதனத்தை உருவாக்கிக் கொள்வதற்கு உதவும் நிறுவனமாகக் கடமையாற்றல்.
2. விவசாயிகளின் சேமிப்புப் பழக்கத்தை அதிகரிப்பதற்கும் அதனூடாக அவர்களின் முதலீட்டுச் சக்தியை அதிகரிப்பதற்கும் உதவுதல்.
3. தங்கி வாழும் மட்டத்திலான கமத்தொழிலை பொருளாதார மட்டத்திலான நிலைக்கு உருவாக்குவதற்குத் தேவையான நிதி மற்றும் ஆலோசனை ரீதியான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
4. விவசாயிகளை ஒரு ஒழுங்கமைப்பாக உருவாக்கி அவர்களின் நிதி மற்றும் பொருளாதார சக்தியை அதிகரிப்பதற்கு அவகாசத்தை (வாய்ப்பினை) உருவாக்குதல்.
5. விவசாயிகளை சமூதாய ரீதியாகச் சிறந்த பலம் வாய்ந்த சமூகமாக உருவாக்குவதற்குத் தேவைப்படும் நிதி ரீதியான பலமிக்க ஒரு சூழலைக் கட்டியெழுப்புதல் மற்றும் அவர்களது நலன்புரி நடவடிக்கைகளின் பொருட்டு பங்களிப்பினை வழங்குதல்.
6. விவசாயிகளுக்குச் சொந்தமான பணத்தையும் மூலதனத்தையும் அம் மக்களிடையே சஞ்சரிப்பதற்கு அவகாசம் அளிப்பதன் மூலம் கமக்காரர்களின் பொருளாதாரத்தை விரிவடையச் செய்தல்.
7. கமக்காரர் அமைப்புக்களைப் பலப்படுத்திக் கமத்தொழிலை அடிப்படையாகக் கொண்ட வியாபாரங்களுக்குத் தேவையான நிதிப் பலத்தை வழங்குதல்.
8. பெரிய வெங்காயம், பயறு, சோயா போன்ற தற்போது பாரியளவில் இறக்குமதி செய்யும் பயிர்களின் பயிர்ச் செய்கையின் பொருட்டு தேவையான நிதி வசதிகளை வழங்குவதன் ஊடாக அப்பயிர்களை அதிகளவில் கிடைக்கச் செய்தல் மற்றும் அதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்குப் பலத்தை வழங்குதல்.

10.4. வங்கியின் பணிகள் மற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை

	பணிகள்	உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை
01	வங்கியின் பொருட்டு மூலதனப் பணத்தை கமக்காரர்களின் பொறுப்பு நிதியத்திலிருந்து ஒதுக்கிக் கொள்ளல்	01
02	கமக்காரர்களின் பொறுப்பு நிதியத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் மூலதனப் பணம் மற்றும் வட்டியைச் செலுத்துல் மற்றும் அதற்குரிய அறிக்கைகளை இற்றைப்படுத்திப் பேணல்	
03	கமநல வங்கிகளுக்கு மூலதனப்பணத்தை விடுவித்தல்	
04	கமநல வங்கிகளை ஆரம்பிப்பதற்குரிய கடமை நடவடிக்கைகள்	
05	கமநல வங்கிகளுக்கு வழங்கப்பட்டுள்ள மூலதனப் பணம் மற்றும் வட்டிப் பணத்தை மீள அறவிட்டுக் கொள்வதற்குரிய அறிக்கைகளை இற்றைப்படுத்திப் பேணுதல்	
06	கமநல வங்கிகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய மூலதனப் பணத்தின் பொருட்டான வட்டியை அரை வருடத்திற்கு கணக்கிடல்	
07	பிரதான காரியாலயத்தினால் கமநல வங்கிகளுக்கு வழங்கப்பட்டுள்ள மூலதனம், மீளச் செலுத்தப்பட்டுள்ள மூலதனம் மற்றும் வட்டி, மேலும் அறிவிடப்படவுள்ள மூலதனம் மற்றும் வட்டி தொடர்பாக நிலவும் பிரச்சனைகளைத் தீர்த்து வைத்தல்	
08	வடக்கு மற்றும் கிழக்கு மாவட்டங்களின் செயற்படுத்தப்படுகின்ற வேலைத்திட்டங்களுக்குரிய இணைப்பு நடவடிக்கைகள்	
09	கமநல வங்கிகளின் மூலதனப் பண பிரதான பேரேடு மற்றும் விசேட கருத்திட்டங்களுக்குரிய பேரேடுகளை பராமரித்தல்	01
10	பிரதான காரியாலயத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள மூலதனப் பணத்தையும் மற்றும் வட்டியையும் பிரதான காரியாலயத்திற்குப் பெற்றுக் கொள்வதற்குரிய கடமைகள்	
11	மூலதனப் பணம் மற்றும் வட்டிப் பணத்திற்குரிய காசோலைகளின் வரவுப் பதிவேட்டை முறையாகப் பராமரித்தல்	
12	மூலதனப் பணம் மற்றும் வட்டிப் பண வரவிற்குரியப் பற்றுச்சீட்டுக்களை மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தல்	
13	பிரதான காரியாலயத்தினால் கமநல வங்கிகளுக்கு வழங்கப்பட்டுள்ள மூலதனம், மீளச் செலுத்தப்பட்டுள்ள மூலதனம் மற்றும் வட்டி, மேலும் அறிவிடப்படவுள்ள மூலதனம் மற்றும் வட்டி தொடர்பாக நிலவும் பிரச்சனைகளைத் தீர்த்து வைத்தல்	
14	கமநல வங்கிகளின் நடவடிக்கைகளை செயற்பாட்டுடனும் மற்றும் வினைத்திறனுடனும் பேணுவதற்குரிய வெளிக்கள மட்டத்திலான செயற்பாடுகளைப் பின்னாய்வு செய்தல்	
15	கமநல வங்கியின் இறுதிக் கணக்கறிக்கைகளை பரிசோதனை செய்தல் மற்றும் அவ்அறிக்கைகளில் உள்ள குறைபாடுகள் தொடர்பாக உரிய கமநல வங்கிக்கு மற்றும் மாவட்ட அலுவலகத்திற்கு அறிவித்துச் சீர்செய்தல்	01
16	கமநல வங்கிகளின் இறுதிக் கணக்கறிக்கைகளை உரிய முறையில் பெற்றுக் கொள்ளல் மற்றும் அதற்குரிய அறிக்கைகளை இற்றைப்படுத்திப் பேணுதல்	
17	கமநல வங்கி மாவட்ட வருடாந்த செயற்படு திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் அறிக்கைகளைத் தயாரித்தல்	
18	மாவட்ட முன்னேற்ற ஆய்வுக் கூட்டங்களை நடாத்துதல்	
19	கமநல வங்கி நிர்வாக அறிக்கையைத் தயாரித்தல்	01
20	இலங்கை மத்திய வங்கி மற்றும் சகல வெளி நிறுவனங்களுடன் இணைப் நடவடிக்கைகள்	
21	கமநல வங்கிப் பிரிவின் உள்வரும் கடிதப் பதிவேட்டை இற்றைப்படுத்தி, முறையாகப் பேணுதல் மற்றும் விடய உத்தியோகத்தர்களுக்கு முன்வைத்தல்	
22	கமநல வங்கிப் பிரிவிற்குரிய பொருட்ப் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணுதல்	
23	பிரிவின் சகல உத்தியோகத்தர்களதும் விடுமுறை தொடர்பான பதிவேட்டைப் பேணுதல் மற்றும் விடுமுறை அறிக்கையைத் தயாரித்தல்	
24	கமநல வங்கி தொலைபேசிப் பற்றுச்சீட்டை செலுத்துவதற்குரிய கடமைகள்	
25	கமநல வங்கிகளுக்கு அறிக்கையிட்டுள்ள உத்தியோகத்தர்களது ஊக்குவிப்புக் கொடுப்பனவு தொடர்பான கடமைகள்	

26	கமநல வங்கிகளுக்கு பௌதீக வளங்கள் வழங்குவதற்குரிய கடமை நடவடிக்கைகள்	01
27	மோட்டால் சைக்கிள் கடன் தவணைப் பணம் தொடர்பாக C.C.10 பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணுதல் மற்றும் அறவிடப்பட்ட தவணைப்பணத்தை அமைச்சிற்கு சேர்ப்பதற்குரிய கடமைகள்	
28	கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் நாடாளவீய ரீதியிலான செயலாற்று மதிப்பீடுகள் தொடர்பான போட்டிகளை நடத்துவதற்குரியதான கோவைகளைப் பேணுதல்	
29	கமக்காரர்களின் பொறுப்பு நிதியத்தியத்தின் மூலம் கமநல வங்கி (முன்னோடிக்) கருத்திட்டத்திறன் ஊடாக செயற்படுத்தப்படும் பல்வேறு கருத்திட்டங்களைச் செயற்படுத்தவதற்குரிய கடமை நடவடிக்கைகள்	01
30	சார லங்கா கடன் திட்டம் தொடர்பான சகல கடமைகள் 1. சார லங்கா கடன் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளல் 2. அக்கடன் விண்ணப்பப்படிவங்களை குழுவிற்குச் சமர்ப்பித்து, அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் மாவட்டத்திற்கு அறிவித்தல் 3. கடன் பணத்தை மாவட்டத்திற்கு வழங்குதல் 4. கடனை அறிவிட்டுக் கொள்ளல் 5. லெஜரைப் பேணுதல் "கேவத்து திரிய" கடன் திட்டம் தொடர்பான சகல கடமைகள்	
31	கமக்காரர்களின் பொறுப்பு நிதியத்தின் பணிப்பாளர் சபையின் அறிகைகள் கோவையைப் பேணுதல் மற்றும் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டை உரிய முறையில் திணைக்களத்திற்குப் பெற்றுக் கொள்ளல்	01
32	கமக்காரர்களின் பொறுப்பு நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் சகல கருத்திட்டங்களுக்கும் உரிய முன்னேற்ற அறிக்கை இற்றைப்படுத்திப் பேணுதல் மற்றும் பணிப்பாளர் சபைக் கூட்டங்களுக்கு முன்வைத்தல்	
33	கமக்காரர்களின் பொறுப்பு நிதியத்திற்குரிய சகல வரவுகள், கொடுப்பனவுகள் தொடர்பான கடமைகள், காசுப்புத்தகத்தை உரிய முறையில் பராமரித்தல் மற்றும் வங்கி இணக்கக் கூற்றுக்களை உரிய திகதிக்குத் தயாரித்தல்	
34	கமக்காரர்களின் பொறுப்பு நிதியத்தின் காசுப் புத்தகத்திற்குரியதாகவுள்ள பற்றுச்சீட்டுப் புத்தகம் மற்றும் காசோலைப் புத்தகங்களின் பாதுகாப்பை உறுதி செய்தல்	
35	கமக்காரர்களின் பொறுப்பு நிதியத்தின் லெஜரை உரிய முறையில் பராமரித்தல்	
36	திணைக்களத்தின பொறுப்பில் தடுத்து வைக்கப்படும் 1% மூலதன வட்டிப் பணத்திற்குரிய செலவு லெஜரைப் பராமரித்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய சகல செலவுகளுக்கும் உரிய கடமைகள்	
37	கமக்காரர்களின் பொறுப்பு நிதியத்திலிருந்து மோட்டார் சைக்கிள் கடன் கருத்திட்டத்தைச் செயற்படுத்துவது தொடர்பான சகல கடமைகள் 1. முன்னுரிமைப்பட்டியலைப் பேணுதல் 2. விண்ணப்பப்படிவங்களிலுள்ள குறைபாடுகளைப் பூர்த்தி செய்தல் 3. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களுக்குக் கொடுப்பனவு செய்தல் தொடர்பான கடமைகள் 4. காசோலைகளை உரியவர்களுக்கு வழங்குதல் 5. மோட்டார் சைக்கிள் பதிவு தொடர்பான கடமைகள	
38	கமக்காரர்களின் பொறுப்பு நிதியத்திலிருந்து வழங்கப்பட்டுள்ள மோட்டார் சைக்கிளின் பதிவுச் சான்றிதழ்களின் பிரதிகளின் கோவைக்குரிய கடமைகள்	
39	மாவட்டத்திலிருந்து மாதாந்நத ஒன்றிணைந்த அறிக்கை, கடன், பங்கு, மற்றும் வைப்புக்கள் தொடர்பான அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் ஒன்றிணைந்த மொத்த அறிக்கையை மாதாந்தம் தயாரித்தல்	01
40	பங்கு வைப்புக்கள் தொடர்பான முன்னேற்ற அறிக்கையைத் தயாரித்தல்	
41	மாவட்ட மாதாந்த ஒன்றிணைந்த அறிக்கைகளின் குறைபாடுகள் தொடர்பாக மாவட்டத்திற்கு அறிவித்தல் மற்றும் மீண்டும் சரியான அறிக்கையைப் பெற்றுக் கொள்ளல்	
42	கமநல வங்கி சுற்றுநிருபத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஏற்பாடுகளைச் செயற்படுத்தல், சுற்றுநிருபக் கோவையைப் பேணல் மற்றும் புதிய சுற்றுநிருபங்களின் பொருட்டான திருத்தங்களைத் தயாரித்தல்	
43	கமநல வங்கிப் பிரிவின் அலுவலக ஆளணியினர் கோவையைப் பேணுதல் மற்றும் அதற்குரிய கடமைகள்	
44	தகவல் அறியும் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் வேண்டுகோள்களின் பொருட்டு பதில் அனுப்புதல்	
45	துப்பரவு நடவடிக்கைகள் தொடர்பான கடமை நடவடிக்கைகள்	

46	கமநல வங்கிப் பிரிவிற்குரிய கணக்காய்வு ஐயவினாப் பதிவேட்டைப் பேணுதல் மற்றும் கணக்காய்வு ஐயவினாவின் (உள்ளக மற்றும் வெளியக) பொருட்டு பதில் வழங்குதல்	01
47	கமநல வங்கிப் பரிசோதனைக்குரிய அறிக்கைகளைப் பேணுதல் மற்றும் அதற்குரிய கடமைகள்	
48	பிரிவிற்குரிய விசேட விசாரணைக் கோவையைப் பேணுதல்	
49	கமநல வங்கிப் பயிற்சி வேலைத்திட்டங்களுக்கான இணைப்பு நடவடிக்கைகள் மற்றும் தொடர்பான கடமை நடவடிக்கைகள்	
50	கமநல வங்கி பிரசார மற்றும் ஊக்குவிப்பிற்குரிய கடமை நடவடிக்கைகள்	
51	கமநல வங்கி (முன்னோடிக்) கருத்திட்டம் 2020 வரையிலானத் திட்டத்தற்குரிய நடவடிக்கைகள்	
52	அலுவலக குழாம் கூட்டக் கோவையைப் பேணுதல் மற்றும் அதற்குரிய கடமை நடவடிக்கைகள்	
53	தேசிய இயக்கக் குழுத் தொடர்பான கடமை நடவடிக்கைகள்	
54	மாவட்ட இயக்கக் குழுத் தொடர்பான கடமை நடவடிக்கைகள்	
55	கமநல வங்கிக் காசுப் புத்தகங்கள் மற்றும் பாஸ் புத்தகங்கள் அச்சிடுவதற்குரிய சகல நடவடிக்கைகள்	01
56	கமநல வங்கிக் காசுப் புத்தகங்கள் மற்றும் பாஸ் புத்தகங்கள் விநியோகித்தல் மற்றும் அதற்குரிய காசோலைகளின் வரவு தொடர்பான பதிவேட்டினைப் பேணுதல்	
57	சுழற்சி நிதியத்தை அறவிடுவதற்குரிய கடமைகள்	
58	நிலுவைக் கடனை அறவிட்டுக் கொள்ளல் மற்றும் அதற்குரிய கணக்காய்வு ஐயவினா தொடர்பாக பதில் வழங்குதல் தொடர்பான கடமைகள்	
59	ரூபா 100,000/- கடன் வேலைத்திட்டம் பின்னாய்வு மற்றும் அதற்குரிய கடமை நடவடிக்கைகள்	
60	கடனை அறவிடல், நிலுவைக் கடன் தொடர்பான அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளல், பகுப்பாய்வு தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் கமநல வங்கி மூலம் வழங்கப்பட்டுள்ள கடன்களுக்குரியதாக பல்வேறு நிறுவனங்கள் மற்றும் நபர்களினால் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீட்டுக் கடிதங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்	
61	நுண்நிதி வேலைத்திட்டத்திற்குரிய கடமை நடவடிக்கைகள்	02
62	தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தின் கீழ் சிதமு மகளிர் கமக்காரர்களின் ஒழுங்கமைப்புக்களின் உறுப்பினர்களினால் பேணப்பட்டு வரும் வீட்டுத்தோட்டங்களுக்குரிய நடவடிக்கைகள்	02
63	“ ஆயிரம் குளங்கள் ஆயிரம் கிராமங்கள்” வேலைத்திட்டத்தின் கீழ் பேணப்பட்டு வரும் வீட்டுத்தோட்டங்களுக்குரிய நடவடிக்கைகள	
64	விவசாய அமைச்சின் புதிய வேலைத்திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள “செழிப்பான வீட்டுத்தோட்டம்” நடவடிக்கைகளுக்குரிய கடமைகள் மற்றும் வீட்டுத்தோட்ட வேலைத்திட்டத்திற்குரிய சகல நடவடிக்கைகள்	

10.5. கமநல வங்கிச் செயற்படு திட்டம் மற்றும் அதனது முன்னேற்றம் - 2018

வேலைத்திட்டம்	செயற்பாடுகள்	எதிர்பார்த்த பெறுபேறுகளை கணக்கிடும் காரணிச்சுட்டி	செயற்படு திட்டத்திற்கயை ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு	2018.12.31 ஆந் திகதிக்கு முன்னேற்றம்	
				பௌதீக முன்னேற்றம்	நிதி முன்னேற்றம்
கமநல வங்கிகளை மேம்படுத்தல்	01. 10 கமநல வங்கிகளின் பொருட்டு கட்டடங்களை நிர்மாணித்தல்	கட்டடங்களின் எண்ணிக்கை	36.2 மி.ரூபா	-	-
	02. 25 கமநல வங்கிகளின் பொருட்டு அலுவலக உபகரணங்களை வழங்குதல்	உபகரணங்களின் எண்ணிக்கை	4.85 மி.ரூபா	மன்னார் மாவட்டத்தில் 12 கமநல வங்கிகளின் பொருட்டு அலுவலக உபகரணங்கள் மற்றும் அம்பாறை, மாத்தறை, அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களின் பொருட்டு கணினி மற்றும் பொலொன்னறுவை மாவட்டத்தின் வெலிகந்தை கமநல வங்கியின் பொருட்டு கவுன்டர் வழங்குதல்	2.05 மி.ரூபா
	03. கமநல வங்கி உத்தியோகத்தர்களுக்கு 1102 கணக்கியல் தரத்தன்மை தொடர்பான புத்தகங்கள் வழங்குதல்	புத்தகங்களின் எண்ணிக்கை	0.3 மி.ரூபா	795 கணக்கியல் தரத்தன்மை தொடர்பான புத்தகங்கள	0.16 **மி.ரூபா**
	04. கமநல வங்கி உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி வசதிகள் வழங்குதல்	மாவட்டங்களின் எண்ணிக்கை	3 மி.ரூபா	11 மாவட்டங்கள்	1.2 மி.ரூபா
	05. கமநல வங்கிகளின் பொருட்டு 50 பாதுகாப்புப் பெட்டகங்கள் வழங்குதல்	பாதுகாப்புப் பெட்டகங்கள் எண்ணிக்கை	3 மி.ரூபா	50 பாதுகாப்புப் பெட்டகங்கள்	2.94 **மி.ரூபா**
	06. கமநல வங்கிகளின் பொருட்டு மேலதிக ஒதுக்கீடு வழங்குதல்	கமநல வங்கிகளின் எண்ணிக்கை	50 மி.ரூபா	72 கமநல வங்கிகள்	107 மி.ரூபா
	07. கமநல வங்கிகளின் பொருட்டு 50 பெயர்ப் பலகைகள் தயாரித்தல்	பெயர்ப் பலகைகளின் எண்ணிக்கை	10 மி.ரூபா	-	ஒதுக்கீடு ஒதுக்கப்படவில்லை

10.6. 2018.12.31 ஆந் திகதி வரையில் மாவட்ட மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள கமநல வங்கி (முன்னோடிக்) கருத்திட்டங்களின் எண்ணிக்கை

தொ.இல.	மாவட்டம்	கமநல சேவைகள் நிலையங்களின் எண்ணிக்கை	அமைக்கப்பட்டுள்ள கமநல வங்கிகளின் எண்ணிக்கை
01	கொழும்பு	9	9
02	கம்பஹா	26	26
03	களுத்துறை	20	20
04	கண்டி	45	45
05	மாத்தளை	23	23
06	நுவரஎலிய	22	22
07	காலி	33	33
08	மாத்தறை	22	22
09	அம்பாந்தோட்டை	17	17
10	குருநாகல்	56	56
11	புத்தளம்	18	18
12	அனுராதபுரம்	43	42
13	பொலொன்நறுவை	13	12
14	பதுளை	31	31
15	மொனறாகலை	18	18
16	இரத்தினபுரி	30	30
17	கேகாலை	14	14
18	அம்பாறை	29	29
19	திருகோணமலை	22	18
20	மட்டக்களப்பு	17	16
21	வவுனியா	8	8
22	யாழ்ப்பாணம்	15	15
23	மன்னார்	12	12
24	முல்லைத்தீவு	10	10
25	கிளிநொச்சி	8	7
மொத்தம்		**561**	**553**

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கமநல வங்கிகள் 2018 வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

1. களுத்துறை - பெலவத்தை
2. கிளிநொச்சி - இராமநாதபுரம்

2018.12.31**ஆந் திகதி வரையில் கமநல வங்கி (முன்னோடிக்) கருத்திட்டத்தின் தொடர்பு கொண்டுள்ள கமக்காரர்கள் தொடர்பான விபரங்கள் மற்றும்** 2017 **வருடத்துடன் ஒத்துப்பார்க்கும் போது அதிகரிப்புக்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.**

	2018/12/31 ஆந் திகதி வரையில்	2017/12/31 ஆந் திகதி வரையில்	அதிகரிப்பின் சதவீதம் %
பங்குதாரர்களின் எண்ணிக்கை	907,097	859,394	5.55%
வைப்பாளர்களின் எண்ணிக்கை	802,454	725,007	10.68%
குழுக் கணக்குகளின் எண்ணிக்கை	62,232	55,877	11.37%

2018.12.31 **ஆந் திகதியில் கமநல வங்கி (முன்னோடிக்) கருத்திட்டத்தின் நிதி தொடர்பான தகவல்களின் ஒரு பகுதி கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.**

விபரம்	2017.12.31 திகதி வரையில் (மி.ரூபா)	2018.12.31 திகதி வரையில் (மி.ரூபா)
சேமிப்புக் கணக்கு மற்றும் நிலையான வைப்புக் கணக்கில் மிகுதி	756.42	691.39
நடைமுறைக் கணக்கில் மிகுதி	58.72	92.98
கடனாளிகள்	1,428.46	2,159.10
கமக்காரர்களின் பங்குப் பணக் கட்டுப்பாட்டுக் கணக்கு	450.58	528.11
மூலதனக் கணக்கு	194.79	235.77
கமக்காரர்களின் சேமிப்பு கட்டுப்பாட்டுக் கணக்கு	706.29	826.98
கமக்காரர்களின் குழுக்களின் கட்டுப்பாட்டுக் கணக்கு	157.16	184.86

10.7. கமநல வங்கிகளுக்கு மூலதனப் பணத்தை வழங்குதல்.

2018 வருடத்தினுள் கமக்காரர் பொறுப்பு நிதியத்தினால் கமநல வங்கிகளுக்கு மூலதனப்பணத்தை வழங்கும் பொருட்டு 30 மி.ரூபா பணம் கடனாகப் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், 107 மி.ரூபா பணம் கமநல வங்கிகளுக்கு மூலதனமாக வழங்கப்பட்டுள்ளது.

10.8. கமநல வங்கியின் மூலம் கடன் வழங்குதல் மற்றும் அறவிடல்

கமநல வங்கி மூலம் ஆரம்பம் தொடக்கம் 2018.12.31 ஆந் திகதி வரையில் வழங்கப்பட்டுள்ள மொத்தக் கடன்களின் பெறுமதி மி.ரூபா.12,024.03 என்பதுடன், மொத்தக் கடன் அறவீடுகளின் பெறுமதி மி. ரூபா 9,870.66 ஆகும். அதற்கமைய அறவிடப்பட வேண்டியுள்ள பணம் மி. ரூபா 2,153.37 ஆகும்.

இவற்றில், 1,876.93 மி.ரூபா காலங்கடக்காத கடன் பணம் என்பதுடன், 276.44 மி.ரூபா காலங்கடந்த கடனாகும். அதற்கமைய ஒட்டுமொத்தக் கடன் பெறுமதியில் காலங்கடந்த கடன் தொகையின் நூற்றுவீதம் 2.3% வீதம் மட்டுமேயாகும். 2018 ம் வருடத்தில் கமநல வங்கி மூலம் கமத்தொழில் கடன்கள் ரூபா 7,469.26 ம், கருத்திட்டக் கடன்கள் ரூபா 3,295.38 ம், ஏனைய கடன்களாக ரூபா 1,259.39 வும் என, 12,024.03 மி. ரூபா கடன் பணம் கமக்காரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கமக்காரர்களின் பொறுப்பு நிதியத்தின் மூலம் பிரதான காரியாலயத்தின் ஊடாக 2018 வருடத்தினுள் கமநல வங்கிகளுக்கு வழங்கப்பட்டுள்ள மூலதனப் பணம் மற்றும் கமநல வங்கி ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் 2018.12.31 ஆந் திகதி வரையில் கமநல வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன் மற்றும் அறவீட்டின் முன்னேற்றம்.

மாவட்டம்	பிரதான அலுவலகத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ள மூலதனம் (மி.ரூபா)	வழங்கப்பட்டுள்ள கடன் (மி.ரூபா)	கடன் அறவீடு (மி.ரூபா)
கொழும்பு	1.00	70.13	55.97
கம்பஹா	5.80	564.49	461.53
களுத்துறை	0.50	129.74	102.56
கண்டி	3.00	1,181.98	961.91
மாத்தளை	1.00	713.04	567.86
நுவரஎலிய	3.00	601.98	486.85
காலி	9.50	469.65	355.53
மாத்தறை	7.00	348.98	277.57
அம்பாந்தோட்டை	-	357.86	327.39
குருநாகல்	25.20	975.41	813.98
புத்தளம்	-	532.82	431.00
அனுராதபுரம்	9.00	1,395.35	1,149.28
பொலொன்நறுவை	2.00	1,600.93	1,530.04
பதுளை	13.50	704.40	557.19
மொனறாகலை	2.50	349.82	262.67
இரத்தினபுரி	4.50	320.51	247.11
கேகாலை	10.50	583.28	334.97
அம்பாறை	-	455.89	437.52
திருகோணமலை	1.50	97.62	77.40
மட்டக்களப்பு	5.00	279.78	217.35
வவுனியா	1.50	90.00	71.08
யாழ்ப்பாணம்	-	112.17	93.43
மன்னார்	-	21.17	14.97
முல்லைத்தீவு	-	43.48	33.29
கிளிநொச்சி	1.00	23.45	2.08
மொத்தம்	107.00	12,024.03	9,870.66

10. 9. கமநல வங்கி மூலம் செயற்படுத்தப்படும் பிரதான கடன் திட்ட முறைகள் :

- பயிர்ச்செய்கைக் கடன் (கமத்தொழில் கடன்)
- அறுவடைக் கடன்
- அறுவடைபட பாதுகாப்புக் கடன்
- விவசாய இயந்திர உபகரணக் கடன்
- கருத்திட்டக் கடன்
- சார லங்கா கடன்
- மழை மூடும் உறைகள் கடன்
- விசேட சோளன் கருத்திட்டக் கடன்

10.10. ஐதமு கருத்திட்டம்

10.10.1. கருத்திட்டத்தின் நோக்கம்

கமத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் கமக்காரப் பெண்களின் மற்றும் அவர்களது குடும்பத்தின் வருமான நிலை, சமூக நிலை, போஷாக்கு, சுகாதாரம், கல்வி, ஆன்மீக பின்ணணிகளை அபிவிருத்தி செய்யும் பொருட்டு,

- கமத்தொழில் நடவடிக்கைகளுக்குத் தேவையான உள்ளீடுகள் கடன் வசதியை ஏற்படுத்தல்.
- சிக்கனம் மற்றும் சேமிப்பின் பொருட்டு ஊக்குவித்தல்.
- அன்னியோன்னிய ஒத்துழைப்பு மற்றும் அர்ப்பணிப்பின் மூலம் உறுப்பினர்களின் பொருளாதார நிலையை அதிகரித்துக் கொள்வதற்கு குழுக்களாக ஒன்றிணைத்தல்.
- வீட்டுத்தோட்டத்தை தோட்டமாக அபிவிருத்தி செய்தல் மற்றும் கமத்தொழிலுக்கு இளம் மகளிர் தலைமுறையினரை ஈடுபடுத்தல்.
- வீட்டுத்தோட்டத்தை சேதனப் பசளைப் பயிர்ச்செய்கையின் பொருட்டு பாவித்தல், உணவு நுகர்வு முறையை மாற்றி குடும்பத்தின் போஷாக்கு நிலையை மேம்படுத்தல்.
- அறிவு, மனப்பாங்கு, திறமையை அபிவிருத்தி, தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவக் குணாதிசயங்களை மேம்படுத்தலின் மூலம் சமூக பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு பெண்களை பலப்படுத்தல்.

10.10.2. ஐதமு வேலைத்திட்டங்களைச் செயற்படுத்தல்

10.10.2.1. ஐதமு மகளிர் அமைப்புக்களை அமைத்தல் மற்றும் பதிவு செய்தல்





இணைப்பு 18 ஐப் பார்க்கவும்.

10.10.3. வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை ஊக்குவிப்பு வேலைத்திட்டம்



இணைப்பு 19 ஐப் பார்க்கவும்.

10.10.4. தொழில் முயற்சியாளர் கடன் வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்தல்



இணைப்பு 20 ஐப் பார்க்கவும்.

10.10.5. ஐதஇ நுண்நிதி வேலைத்திட்டத்தின் கட்டாய சேமிப்பின் முன்னேற்றம்



இணைப்பு 21 ஐப் பார்க்கவும்.

10.10.6. සීதමු කමනල උණවකම් අමෙක්කප්පට්ටතන් මුන්නේට්රම්





களுத்துறை



களுத்துறை

இணைப்பு 22 ஐப் பார்க்கவும்.

10.10.7. ஒரு மாதத்திற்கு ஒரு வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தல்





සීதමු கமக்காரர்களின் ஒழுங்கமைப்புக்களைப் பலப்படுத்துதல் வேலைத்திட்டத்தின் கீழ் 2017 வருடம் தொடக்கம் இதுவரையில் ஒரு மாதத்திற்கு ஒரு வேலைத்திட்டம் என்ற வீதம் மகளிர் வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவ்வருடத்தினுள்ளும், இவ்விசேட தினத்தின் காரணமாக සීதමු மகளிர் கமக்காரர்களின் ஒழுங்கமைப்பின் உறுப்பினர்களின் பங்களிப்புடன் சகல கமநல சேவைகள் நிலையங்களிலும் ஒவ்வொரு மாதமும் இவ்விசேட வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது.

- සීதමු மகளிர் கமக்காரர்களின் ஒழுங்கமைப்பின் உறுப்பினர்களின் பங்களிப்புடன் சர்வதேச மகளிர் தினத்திற்கு அணுசரனையாக சேமிப்பை ஊக்குவிக்கும் வேலைத்திட்டத்தை நடாத்துதல்.
- சிங்கள இந்து புது வருடத்தை முன்னிட்டு புது வருட விழாக்களை நடாத்துதல்.
- புத்த பகவானின் மும்விழாவிற்கு அணுசரனையாக சில் அனுஷ்டான நிகழ்வை நடாத்துதல்.

- சுற்றாடல் தினத்திற்கு அணுசரனையாக சுற்றாடல் வேலைத்திட்டங்களை நடாத்துதல்.
- மலாலா யூசுப் தினத்திற்கு அணுசரனையாக சிறுவர் சித்திரப் போட்டியை நடாத்துதல்.
- சர்வதேச இளைஞர் தினத்திற்கு இணையாக ஒரு நாள் கணக்குப் பயிற்சி வேலைத்திட்டத்தை ஒழுங்கு செய்தல்.
- சர்வதேச புண்ணிய நடவடிக்கைகள் தினத்தை முன்னிட்டு தியான வேலைதிட்டமொன்றை ஒழுங்கு செய்தல்.
- உலக சிறுவர் தினம் மற்றும் உலக முதியோர் தினத்திற்கு இணையாக சிரமதான வேலைத்திட்டமொன்றை ஒழுங்கு செய்தல்.
- பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்புத் தினத்திற்கு இணையாக கலாச்சார விழாவை ஒழுங்கு செய்தல்.
- திசம்பர் மாத நத்தார் தினத்தை முன்னிட்டு சகல கமநல சேவைகள் நிலையங்களிலும் வாராந்தச் சந்தைகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.



கேகாலை - அரநாயக்க (தானசாலை நடாத்துதல்

- **கமநல சேவைகள் நிலையங்களில் மகளிர் உற்பத்திகள் உட்பட்ட வாராந்தச் சந்தையை நடாத்துதல்.**



அனுராதபுரம்



காலி - பத்தேகம



மாத்தளை



கேகாலை - பரகம்மன

10.10.8. ඔබමු තොලෙක්කාට්සි නිකළ්ච්සිත්තිට්ටංකළෛච් චෙයර්පටුත්තල්

15 மாவட்டங்களில் நிகழ்ச்சி நிரல்கள் முடிவுறுத்தப்பட்டுள்ளது.

‘கமநலத்தின் பெருமிதம்” (சுயாதீன தொலைக்காட்சியில் ஒளிபரப்பு)	“கமநல பிரதீபா” (தேசிய தொலைக்காட்சியில் ஒளிபரப்பு)
கேகாலை	கண்டி
பதுளை	கம்பஹா
புத்தளம்	அம்பாந்தோட்டை
அம்பாறை	பதுளை
களுத்துறை	அனுராதபுரம்
குருநாகலை	இரத்தினபுரி
	நுவரெலியா
	மாத்தறை
	புதிய வருடத்தின் ஆரம்ப நிகழ்ச்சிகள் - தொடர் திட்டங்கள் தொடர்பான விசேட வேலைத்திட்டம் (ஸ்ரீஜயவர்தனபுர கோட்டையில்)

10.10.9. ஔதஇ வானொலி நிகழ்ச்சிகளைச் செயற்படுத்தல்

20 மாவட்டங்களில் ஒளிப்பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் இதுவரையில் ஒளிபரப்புச் செய்யப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு	மாத்தளை	அம்பாந்தோட்டை	பொலொன்னறுவை	கேகாலை
கம்பஹா	நுவரெலியா	குருநாகலை	பதுளை	அம்பாறை
களுத்துறை	காலி	புத்தளம்	மொனறாகலை	திருகோணமலை
கண்டி	மாத்தறை	அனுராதபுரம்	இரத்தினபுரி	வவுனியா

தமிழ் மொழி மூலம் 05 மாவட்டங்களில் தற்போது ஒளிப்பதிவு செய்யப்படுகின்றது.

கிளிநொச்சி	மன்னார்	யாழ்ப்பாணம்	முல்லைத்தீவு	மட்டக்களப்பு

10.10.10. ''கொவிமிண'' சஞ்சிகை வெளியீடு

- ''கொவிமிண'' சஞ்சிகையின் முதற் சஞ்சிகை 2019.01.11 ஆந் திகதி வெளியிடப்பட்டது.
- 10,000 சஞ்சிகைகள் அச்சிடப்பட்டுள்ளது.
- சகல மாவட்டங்களுக்கம் விநியோகிக்கப்பட்டுள்ளது.
- சஞ்சிகையின் அடுத்த வெளியீட்டின் பொருட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.









11. நீர் முகாமைத்துவப் பிரிவு

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் நீர் முகாமைத்துவப் பிரிவு 1981 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது என்பதுடன், தற்போது இப்பிரிவு நீர் முகாமைத்துவம் தொடர்பான பிரதான பொறியியலாளர் ஒருவரின் தலைமையில் செயற்படுகின்றது.

தற்போதுள்ள மனித வளங்கள்	நீர் முகாமைத்துவப் பிரிவு	ரீமோட் சென்சிங் பிரிவு
• சிவில் பொறியிலாளர்	01	-
• பொறியியல் உதவியாளர்	01	01
• தொழில்நுட்ப உத்தியோகத்தர்	-	04
• அபிவிருத்தி உத்தியோகத்தர்	03	01
• பொது முகாமைத்துவ உதவியாளர்	02	01
• விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்	-	01
• அலுவலப் பணியாளர்	02	
• அபிவிருத்தி உத்தியோகத்தர் (பயிலுனர்)	02	

11.1. நீர் முகாமைத்துவம்

2000 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்கமுடைய கமநல அபிவிருத்திச் சட்டத்தின் VII வது பிரிவில் காட்டப்பட்டுள்ள "சிறிய நீர்ப்பாசன வேலையும் நீர்ப்பாசன நீரின் முகாமைத்துவம்" என்னும் தலைப்பின் கீழ் 80 தொடக்கம் 81 வது வரையிலான பிரிவுகளுக்குரிய ஏற்பாடுகளைச் செயற்படுத்தல் போன்று இத்தலைப்பின் கீழான விசேட கருத்திட்டங்களைச் செயற்படுத்தவதற்குரிய தகவல்கள் இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றங்கள் மேலதிகமாக காலநிலைத் தாக்கங்களினால் விவசாயத் துறையில் இந்நாட்டிற்கு முகம் கொடுப்பதற்கு ஏற்பட்டுள்ள பாதகமான பெறுபேறுகளைக் குறைத்துக் கொள்வதற்கு செயற்பாட்டுடன் பங்களிப்புச் செய்வதை நோக்காகக் கொண்டு மூலோபாய வழிமுறைகள் பல 2018 ஆம் வருடத்தின் போது ஆரம்பிப்பதற்கும் மற்றும் அறிமுகப்படுத்துவதற்கும் இயலுமாகவிருந்தது.

11.2. செய்மதிப்புகைப்படங்களின் ஆதரவில் வயற்காணிகளின் பொருட்டு கணினித் தரவுத் தொகுதியைத் தயாரித்தல்.

நவீன செய்மதிப்புகைப்படங்களின் ஆதரவில் கம்பஹா, காலி, மாத்தளை மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் மேற்படி நடவடிக்கைகளில் அநேகமானவை முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன், கம்பஹா மாவட்டத்தின் வயற்காணிகள் தொடர்பான தகவல்கள் முடிவுறுத்தப்பட்டு திணைக்களத்தின் இணையத்தளத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. (www.agrariandept.gov.lk) எதிர்காலத்தில் இலங்கையிலுள்ள சகல வயற்காணிகள் தொடர்பான கணினி தரவுத் தொகுதியொன்றை உருவாக்குவதற்குத் தேவையானக் கருத்திட்ட முன்மொழிவொன்று தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. இதன் மூலம் இலங்கையின் வயற்காணிகள் தொடர்பான சரியானத் தரவுத்தொகுதி உருவாகுவதுடன், சகல வயற்காணிகளினதும் சரியான நில அளவை அறிந்து கொள்வதற்கு இயலும் என்பதுடன், பசளை, நீர் போன்ற வழங்கல்களை மட்டுப்படுத்துவதற்கும், சரியான அறுவடையை எதிர்பார்ப்பதற்கும் இயலுமாகவிருக்கும். அத்துடன் வயற்காணிகளை அனுமதியின்றி வேறு தேவைகளின் பொருட்டு ஈடுபடுத்துவதற்குள்ள வாய்ப்புக்களும் இதன் மூலம் இல்லாதொழியும்.

11.3. கமத்தொழில் (வயல்) காணிப் பதிவேடுகளை கணினியிடல்

இதுவரையில் இலங்கையின் சகல வயற்காணிகளுகம் கணக்கெடுக்கப்பட்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளதுடன், அத்தகவல்களை கமநல சேவைகள் நிலைய மட்டத்தில் கணினியிடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கணினியிடப்பட்ட தகவல்கள் விரைவில் திணைக்களத்தின் (www.agrariandept.gov.lk) இணையத்தளத்தில் காட்சிக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இனிவரும் காலத்தில் வயற்காணிகள் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்வதற்கு எதிர்பார்ப்பவர்களுக்கு, இதன் பொருட்டு கமநல சேவைகள் நிலையங்களுக்குச் செல்லாது, திணைக்களத்தின் இணையத்தளத்திலிருந்து அதற்குரிய பிரித்தெடுப்பைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

11.4. இலங்கையின் நீர் ஊற்றுக்கள், விவசாய வீதிகள் மற்றும் சிறிய குளங்களின் பொருட்டுத் தரவுக் தொகுதியொன்றைத் தயாரித்தல்.

இலங்கையின் சக நீர் ஊற்றுக்கள், விவசாய வீதிகள் மற்றும் பயிர்ச்செய்கை காணிகளின் அளவு மற்றும் 10 இற்குக் குறைவான எண்ணிக்கையுடைய கமக்காரர்கள் குடும்பங்கள் உள்ள சிறிய குளங்கள் தொடர்பான தரவுத்தொகுதியொன்றை கமநல சேவைகள் நிலைய மட்டத்தில் தயாரிப்பதற்கு நடடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டுத் தேவையான தகவல்களை கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் சேகரித்து முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன், அத்தகவல்களை கணினியிட்டுத் திணைக்களத்தின் இணையத் தளத்தில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

11.5. நீரின் தரத்தன்மையைப் பரிசோதித்தல்

இலங்கையில் 14421 கிராமிய குளங்கள் உள்ளதுடன், அக்குளங்களை அண்மித்த கிராமங்களில் வாழும் மக்களினால் தங்களது நாளாந்த பாவனையின் பொருட்டு பயன்படுத்துகின்றனர். இச்சிறிய குளங்களின் நீரின் தரத்தன்மை குறைதல், இந்நாட்டின் வரண்ட வலயங்களினல் வாழும் மக்களின் சுகாதார நிலைக்கு தாக்கம் விளைவிக்கும் காரணமாக இது அமைகின்றது. இந்நிலை தொடர்பாக ஆய்வு செய்து, அதற்குத் தீர்வினைக் கண்டு பிடிக்கும் பொருட்டு இந்நாட்டின் கிராமிய குளங்கள் உள்ள 320 கமநல சேவைகள் நிலையங்களுக்குத் தேவையான நீரின் தரத்தன்மையைப் பரிசோதனை செய்யும் உபகரணங்கள் மற்றும் அவ்உத்தியோகத்தர்களுக்குத் தேவையான பயிற்சியை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் கீழ் 2018 வருடத்தில் 80 நிலையங்களுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் பயிற்சிகள் லழங்கப்பட்டுள்ளது.

11.6 கமநல சேவைகள் நிலைய மட்டத்தில் நாளாந்த மழை வீழ்ச்சியை அளத்தல்

இதுவரையில் நாட்டிலுள்ள சகல கமநல சேவைகள் நிலையங்களிலும் நாளாந்த மழைவீழ்ச்சியை அளக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அத்தகவல்கள் அறிக்கையிடப்படுகின்றது. அத்தகவல்களை SMS ஊடாகவும் கணனி ஊடாகவும் பிரதான காரியாலயத்திற்குத் தெரியப்படுத்துவதற்குத் தேவையான வசதிகளும் தற்போது ஏற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், உரிய கமநல சேவைகள் அதிகாரப்பிரிவில் கமத்தொழில் திட்டமிடலின் பொருட்டு இனிவரும் காலத்தில் ஏற்படக் கூடிய வரட்சி நிலையைக் நேரகாலத்துடன் அறிந்து கொண்டு அறிவிப்பதற்கு இத்தகவல்கள் எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்கு ஏற்படாகியுள்ளது.

11.7. கமநல சேவைகள் நிலைய மட்டத்தில் கமத்தொழில் காலநிலைத் தரவுகளை அளத்தல்

இதன் கீழ் இந்நாட்டின் வரண்ட வலய மாவட்டங்களில் அடையாளம் கண்டுள்ள 13 கமநல சேவைகள் நிலையங்களில் கமத்தொழில் காலநிலை நிலையங்களை நிறுவுவதற்குத் தேவையான உபகரணங்கள் 2018 வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், 2019 வருடத்தில் பொருத்தப்பட்டுத தரவுகளைப் பெற்றுக் கொள்ளப்படும். இதன் மூலம் நாளாந்த மழைவீழ்ச்சி, ஆவியாதல், ஆகக் கூடிய மற்றும் ஆகக் குறைந்த வெப்பநிலை, ஈரப்பதம், காற்றின் வேகம் மற்றும் திசையை அளத்தல் மேற்கொள்ளப்படும் என்பதுடன், இத்தகவல்களைப் பயன்படுத்தி, எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய நீர் பற்றாக்குறை தொடர்பான எதிர்வு கூறலை வெளியிடுவதற்கும் அதற்குரிய தகவல்களை நேரகாலத்துடன், அப்பிரதேசத்தின் கமக்காரர்களுக்கு வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அத்துடன், இத்தகவல்களைப் பயன்படுத்தி சிறிய குளங்களின் கீழ் நீரை விநியோகத்தைக் கட்டுப்படுத்தவும் இதன் மூலம் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.





11.8. கிராமிய குளங்களில் நீர் உயரமானியைப் பொருத்துதல் மற்றும் குளங்களின் உயரத்தை அளத்தல்

இலங்கையில் உள்ள சகல கிராமிய குளங்களிலும் நீரின் உயரமானியைப் பொருத்துதல் (14421) மற்றும் அத் தகவல்களை அறிக்கையிடல் மற்றும் கமநல அபிவிருத்தி பிரதான காரியாலயத்திற்கு அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், உரிய குளங்களில் உள்ள நீரின் அளவு தொடர்பான தகவல்கள தொடர்பாக கமக்காரர்களுக்கு அறிவூட்டும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் வருடத்தில் 4000 குளங்களில், இந்நீர் உயரமானிகள் பொருத்தப்பட்டுள்ளதுடன், அடுத்து வரும் மூன்று வருடங்களினுள் நாட்டின் சகல குளங்களிலும் நீர் உயரமானிகள் பொருத்தப்படும். இதன் மூலம் குளத்தில் உள்ள நீரின் அளவு மற்றும் பயிர்ச்செய்கை நிலங்களுக்குத் தேவையான நீரின் அளவுகளை ஒப்பிட்டுப் பார்ப்பதற்குக் கமக்காரர்களுக்கு வாய்ப்புக்கள் ஏற்படும். அத்துடன் நீண்டகாலமாகச் சேகரிக்கப்படும் இத்தகவல்கள் தொடர்ந்து வரும் காலங்களின் போது அக்குளத்தின் கீழான நீர் முகாமைத்துவ நடவடிக்கைகளின் பொருட்டு பாரியளவில் பயனுள்ளதாக அமையும்.

11.9. கிராமிய குளங்களிலிருந்து நீரை அளந்து வழங்குதல்

வரலாற்றில் முதற்தடவையாக கிராமிய குளங்களிலிருந்து நீரை அளந்து பயிர்ச்செய்கை நிலங்களுக்கு வழங்கும் வேலைத்திட்டமொன்று 2018 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன், இதன் பொருட்டு உரிய மாவட்டங்களுக்கு 10 Current Flow Meter வழங்குவதற்கும் மற்றும் அதற்கான பயிற்சியை தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கமைய

2019 சிறு போகத்தின் போது 250 கிராமிய குளங்களில் இவ்வேலைத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், வவுனியா மாவட்டத்தில் 125 குளங்கள் இத்ன பொருட்டு இனங்காணப்பட்டுள்ளது. இதன் பொருட்டு கிராமிய குளங்களின் கீழ் உள்ள கால்வாய்களில் நீர் அளவை மட்டக் கோடுகளைப் பொருத்துவதற்கும் பல்வேறு பயிர்ச்செய்கை நிலங்களின் அளவிற்கேற்ப விநியோகிக்கப்பட வேண்டிய நீரின அளவு தொடர்பாக கமக்காரர்களை அறிவூட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் பொருட்டு எமது திணைக்களத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் நேரடிப் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்படாகியுள்ளது.

11.10. நிலத்திற்கடியிலான நீர் தொடர்பான ஆய்வு

நிலத்திற்கடியிலான நீர் தொடர்பான ஆய்வு 2000 ஆண்டு 46 ஆம் இலக்கமுடைய கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 89வது பிரிவின் கீழ் கமத்தொழில் நடவடிக்கைகளின் பொருட்டு பயிர்ச்செய்கைக் கிணற்றை நிர்மாணிக்கும் போது (நிலத்திற்கடியிலான நீரை ஈடுபடுத்தல்) கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும் எனக் காட்டப்பட்டுள்ளது. இருப்பினும் இதன் பொருட்டு இதுவரையில் விஞ்ஞான ரீதியிலான முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய அதிகளவில் பயிர்ச்செய்கை கிணறுகள் அமைந்துள்ள அனுராதபுரம், யாழ்ப்பாணம், புத்தளம் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்கள் அமைந்துள்ள சகல ஆழமற்ற கிணறுகளை ஆய்வு செய்து, இனிவரும் காலங்களில் அப்பிரதேசங்களில் ஆழமற்ற நிலத்திற்கடியிலான நீரைப் பாவிப்பது தொடர்பான வழிகாட்டல்களை மேற்கொள்வதற்குத் தேவையான ஆய்வு நடவடிக்கைகளை 2018 வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் இதற்குரிய சிபாரிசினை 2019/2020 வருடத்தினுள் வழங்குவதற்கும் ஏற்படாகியுள்ளது.

11.11. குள அருவிகளை மேம்படுத்தல்

இந்நாட்டிற்கு உரித்தானதும் மற்றும் கமத்தொழில் உலக உரிமையாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இலங்கையில் 1116 குள அருவித் தொகுதிகள் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் நீர் முகாமைத்துவப் பிரிவின் மூலம் 2005 ஆண்டு வெளியிடப்பட்ட, "இலங்கையின் குள அருவி வரைபடத்தில்" அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், நிலவும் காலநிலை மாற்றங்களுக்கு ஏதுவான தாக்கங்களைத் தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு குள அருவிகளை மேம்படுத்துவது சிறந்த தீர்வாகும் என தேசிய ரீதியில் போன்று சர்வதேச ரீதியாகவும் பாரிய வரவேற்புற்கு உள்ளாகியுள்ளது. மேற்படி நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு, குள அருவிகளை மேம்படுத்தும் பொருட்டு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் இத்திணைக்களத்தினால் வருடத்தினுள் இதுவரையிலும் செயற்படுத்தப்பட்டுள்ளது.

I. அடுத்து வரும் 04 வருடங்களினுள் அமுல்படுத்தப்படும் வகையில் குள அருவிகளை மேம்படுத்தும் உள்ளூர் கருத்திட்டங்களின் பொருட்டு திறைசேரியின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் இதன் பொருட்டு கருத்திட்ட முகாமைத்துவப் பிரிவொன்றைத் தாபிப்பதற்குத் தேவையான அடிப்படை நடவடிக்கைகளை மேற்கொள்ளல். இதன் கீழ் 2018 வருடத்தின் பொருட்டு 400 மி.ரூபா செலவிடப்பட்டு, 03 கிராமிய குளங்களில் அமைந்துள்ள 27 குள அருவிகளின் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது. இக்குள அருவிகள் வவுனியா, அம்பாந்தோட்டை மற்றும் மொனறாகலை மாவட்டங்களில் அமைந்துள்ளது.

II. Green Climate fund நிதி உதவி வேலைத்திட்டத்தின் கீழ் UNDP நிறுவனம் மற்றும் சுற்றாடல் அமைச்சினால் செயற்படுத்தப்படும் Climate Resilient Integrated Agriculture Project (வெவ் கம்

புபுதுவ) கருத்திட்டத்தில் பிரதான தரப்பினராக அனுராதபுரம் மற்றும் குருநாகலை மாவட்டங்கள் குள அருவிகள் மற்றும் குளங்களை மேம்படுத்தும் பொருட்டுத் தேவையான ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பங்களித்துள்ளது. இக்கருத்திட்டத்தின் மூலம் அடுத்து வரும் 05 வருடங்களினுள் குள அருவி மேம்படுத்தும் வேலைத்திட்டம் இத்திணைக்களத்தின் பங்களிப்புடன் செயற்படுத்தப்படும்.

III. விவசாய அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் உலக வங்கியின் உதவி கிடைக்கும் Climate Smart Irrigated Agriculture Project கருத்திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட வேண்டிய 120 குள அருவித் தொகுதிகள் மற்றும் 1550 கிராமிய குளங்கள் 11 நிர்வாக மாவட்டங்களில் இனங்கண்டு கொள்வதற்குப் பங்களிப்புச் செய்து, இக்கருத்திட்டத்தின் கீழ் பிரதான தரப்பினராகச் செயற்பட்டது. இக்கருத்திட்டம் அடுத்துவரும் 05 வருடங்களினுள் (2018-2023) இந்நாட்டின் குள அருவிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதற்கும் ஏற்பாடாகியுள்ளது.

IV. ஆசிய அபிவிருத்தி நிதியத்தின் (ADB) கீழான குள அருவிகள் மேம்படுத்தும் கருத்திட்டம் அடுத்துவரும் 07 வருடங்களினுள் வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களில் செயற்படுத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளதுடன், அக்கருத்திட்டம் தொடர்பாக குறித்த நிதி நிறுவனத்துடன் அடிப்படை இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு இயலுமாகவிருந்தது.

V. இலங்கை கிராமிய குள அருவிகளின் பொருட்டு " குள அருவி அதிகாரச் சபை" என்னும் பெயரில் கமக்காரர்களின் பொருட்டான புதிய நிறுவனக் கட்டமைப்பினை அறிமுகப்படுத்துவதற்குத் தேவையான அடிப்படை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அந்நடவடிக்கைகள் 2019 வருடத்தில் செயற்படுத்துவதற்கு ஏற்படாகியுள்ளது. இதன் போது குறித்த குள அருவிகள் உள்ள பிரதேசத்தினுள் செயற்படும் சகல நீர் பாவனைச் சங்கங்களின் முகவர்களைக் கொண்ட ஒன்றிணைந்த அதிகாரச் சபையொன்று உருவாக்கப்படுவதுடன், குறித்த குள அருவியினுள் சகல மேற்பரப்பு மற்றும் நிலத்திற்கடியிலான நீர் பாவனை தொடர்பான திட்டங்களைச் செயற்படுத்துதல் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான பொறுப்புக்கள் அக் குள அருவிகள் ஒன்றிணைந்த அதிகார சபைக்குக் கையளிக்கப்படும். இப்புதிய நிறுவனக் கட்டமைப்பின் பொருட்டுத் தேவையான சட்ட ரீதியான பாதுகாப்பு கமநல அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

11.12. நுண் நீர்ப்பாசன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தல்

காலநிலை மாற்றங்களின் விளைவாக தொடர்ச்சியாக வரட்சி நிலைக்க முகம் கொடுக்கும் இலங்கையின் வரண்ட வலயங்களில் கமத்தொழில் நடவடிக்கைகளை சிறப்புடன் நிறைவேற்றம் பொருட்டு நீர்ப்பாசன நீர் வினைத்திறனை மேம்படுத்துதல் அத்தியாவசியம் என்பதுடன், அதன் பொருட் சொட்டு மற்றும் தெளிநீர் நீர்ப்பாசன தொழில்நுட்பத்தை நாடுபூராகவும் விரிவடையச் செய்வது மிகப் பிரபலியமான மூலோபாய வழிமுறையாகும். இதன் பொருட்டு பிரதானமாக நுண்நீர் தொழில்நுட்பத்தை நிர்மாணிப்பதற்கு இந்நாட்டின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு உள்ள பிரச்சனை இனங்கண்டுள்ளதுடன். அதற்குத் தீர்வாக நுண்நீர்ப்பாசனத் தொழில்நுட்ப நிர்மாணங்கள் தொடர்பாக கோட்பாடு முறையாகவும் மற்றும் பிரயோகப் பயிற்சியை இத்திணைக்களத்தின் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தியோகத்தர்கள் 60 பேருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இப்பயிற்சியின் பொருட்டு விசேடமாக வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களின் உத்தியோகத்தியோகத்தர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இவ்வாறு பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள் 2019 வருடத்தில் தாங்கள் கடமையாற்றும் மாவட்டங்களில் அதற்குரிய முன்னோடிக் கருத்திட்டமொன்றை கைசாத்த நடவடிக்கையாக மேற்கொள்வதற்கு ஏற்படாகியுள்ளது.

11.13. பயிர் வகைப்படுத்தலின் பொருட்டு வயற்காணிகள் வகைப்படுத்தல்

கிராமிய குளங்களில் நீர் பற்றாக்குறை ஏற்படும் சிறு போகங்களின் போது இடைக்காலப் பயிர்களைப் பயிரிடுவதற்குப் பொருத்தமான நிலங்களை அடையாளம் காணும் தேவைப்பாடு நிலவுவதுடன், இதன் பொருட்டு இத்திணைக்களத்தின் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் 60 பேருக்கு கமத்தொழில் காணிகளின் வகைப்படுத்தலின் பொருட்டுத் தேவையான பிரயோகப் பயிற்சி வழங்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக 2019 வருடத்தில் இத்திணைக்களத்தின் சகல விவசாய சான்றுப்பத்திரங்கள் மற்றும் டிப்ளோமா சான்றிதழ்கள் உள்ள உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியை வழங்குவதற்கும் வரண்ட வலயப் பிரதேசங்களில் அமைந்துள்ள 320 கமநல சேவைகள் நிலையங்களின் பொருட்டு மண் மாதிரிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் தேவையான Soil Auger தொகுதிகளை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

11.14. மண் சுகாதார அட்டைகளை அறிமுகப்படுத்தல்

வயற்காணிகளின் மண்ணின் ஆரோக்கியத் தன்மை சீரற்றிருப்பதால், எவ்வளவு பசளையிட்டாலும், அவற்றை உறிஞ்சி எடுப்பதற்குத் தாவரங்களுக்கு முடியாத சந்தர்ப்பங்கள் தொடர்ச்சியாக அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், இந்நிலையைத் தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு சகல வயற்காணிகளின் பொருட்டும் மண் ஆரோக்கிய அட்டை முறையை அறிமுகப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முதற் கட்டமாக 2018 வருடத்தின் போது அனுராதபுரம், புத்தளம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் பொருட்டு மண் ஆரோக்கிய அட்டை முறை அறிமுகப்படுத்துவதற்குச் செயற்பட்டதுடன், 2019 மற்றும் 2020 வருடங்களின் போது இலங்கையின் சகல வயற்காணிகளின் பொருட்டு இம்முறையை அறிமுகப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் பொருட்டு உதவியளிக்கும் வகையில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மூன்று மாவட்டங்களிலும் அமைந்துள்ள சகல கமநல சேவைகள் நிலையங்களின் பொருட்டும் சிறிய அளவிலான மண் பரிசோதனை ஆய்வு கூடங்களைத் தாபிப்பதற்கும் மற்றும் அதன் பொருட்டு உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பதற்கும் 2018 வருடத்தின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

11.15. சிறிய நீர்ப்பாசனங்களின் பரிசோதனை இடாப்பு

சிறிய நீர்ப்பாசனங்களின் அவசர பராமரிப்பு நடவடிக்கைகள் உரிய காலத்தில் நடைபெறாத காரணத்தால், அந்நீர்ப்பாசன அமைப்புக்கள் அழிவுறும் நிலை தொடர்பாக தொடர்ச்சியாக அறிக்கையிடப்படுவதுடன், இதன் பொருட்டான தீர்வாக ஒவ்வொரு வருடமும் இரண்டு தடவைகள் நீர்ப்பாசன அமைப்புக்களைப் பரிசோதனை செய்து, அதற்குரிய வெளிக்களப் பரிசோதனை அறிக்கையை "பரிசோதனை இடாப்பு" (Check list) இன் உதவியுடன் பூரணப்படுத்தி, உரிய கமநல சேவைகள் நிலையத்திற்கு வழங்குதல் மற்றும் அதன் பின்னர், இத்திணைக்களத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் அப்பரிசோதனை இடாப்பை பரிசோதனை செய்து, அதற்குரிய பொருத்தமான செயற்பாட்டினை மேற்கொள்வதாகும். இதன் பொருட்டு தேவையான சிறிய நீர்ப்பாசனங்களின் பரிசோதனை இடாப்பு, குளங்கள், அணைக்கட்டுகள் மற்றும் கால்வாய்களின் பொருட்டு சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளின் மூலம் அடுத்து வரும் 05 வருடங்களின் பொருட் தேவையான அளவில் உரிய மாவட்டங்களுக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

11.16. திருத்த வேலைகளின் பொருட்டு சிறிய நீர்ப்பாசனங்களை முன்னுரிமைப்படுத்தல்

இதன் பொருட்டு நாடாளவீய ரீதியில் சிறிய நீர்ப்பாசனங்களின் மதிப்பீடொன்று 2018 வருடத்தில் செயற்படுத்தப்பட்டதுடன். இதன் போது சகல குளங்கள், அணைக்கட்டுக்கள் மற்றும் வாய்கால்களின் திருத்தவேலைகளின் தேவைகளை அறிந்து கொண்டு அதற்கமைய சிறிய நீர்ப்பாசனங்களின் திருத்தவேலைகளை முன்னுரிமைப்படுத்துவதற்குத் தேவையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டது. அதற்கமைய, கமநல சேவைகள் நிலைய மட்டத்தில் தயாரிக்கப்படும் இப்புதிய முன்னுரிமைப் பட்டியல், சிறிய நீர்ப்பாசனங்களின் திருத்த நடவடிக்கைகளின் போது அடுத்து வரும் 05 வருடங்களுக்கு ஈடுபடுத்தப்படும்.

11.17. உடனடி பராமரிப்பு வேலைத்திட்டங்களை (Kick Start) அறிமுகப்படுத்தல்

நீண்ட கால ஆய்வு நடவடிக்கைகள் இன்றி, இருப்பினும் உடனடியாகச் செயற்படுத்தப்பட வேண்டிய அவசர மற்றும் சிறிய நீர்ப்பாசன பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகளை உரிய காலத்தினுள் நிறைவேற்றாத காரணத்தால், அந்நீர்ப்பாசனங்களுக்குப் பாரிய சேதங்கள் ஏற்படலாம் என்பதுடன், அச்சேதங்களைத் திருத்தும் பொருட்டு பாரிய செலவுகள் ஏற்படுவதாகத் தொடர்ந்தும் அறிக்கையிடப்படுகின்றது.

